
வைரவிழா ஆண்டு
கல்கி
KALKI
3.2.2002
ரூ. 6.00
அதிக
பக்கங்கள்
காஞ்சி
சிறப்பிதழ்
பட்டும்
பரிதவிப்பும்!

ஒரு நாள் கூத்து!





• சச்சின்

• உசேன்

• ஜான் ரைட்



சென்னையில் ஒரு நாள் கிரிக்கெட் மாட்சுக்கு முந்தைய நாள், நாம் சிதம்பரம் ஸ்டேடியத்தில் அல்லாடியதைச் சொல்லாமல் இருக்க முடியவில்லை.

போலீஸ் குவிப்பு என்றால் வெறும் குவிப்பு அல்ல. வாசல் தொடங்கி மைதானம் வரை, எங்கெங்கு காணினும் காக்கிச் சட்டைகள். பாதுகாப்புக் கெடுபிடிகள் சற்றே அதிகம்தான்.

பத்திரிகை என்ற முத்திரையோடு செக்யூரிடிகளைக் கடந்து உள்ளே வந்தாலும், 'புகைப்படம் எடுக்கத் தடை. விளையாட்டு வீரர்களுடன் நோ பேட்டி' என்று பயங்கர கண்டிஷன்கள்!

பத்திரிகையாளர்களுக்கு அனுமதிச்சீட்டு வழங்கும் கமிட்டி, வாரப் பத்திரிகைகளுக்கு எதற்கு அனுமதி? என்று ஆரம்பம் முதலே மறுத்துவந்ததாம். வாரப் பத்திரிகையாளர்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார்கள். மீடியா கமிட்டியினர் கடைசி நிமிடத்தில் செயல்பட்டாலும், கமிட்டி தலைவர் வெகு கறாராக இருக்கவே, நிருபர்கள் சற்றுக் காரசாரமாகவே விவாதித்தனர்.

நேரே டி.என்.சி.ஏ. செயலர் அசோக் கும்பத்திடம் முறையிட, திருப்பதிக் கூட்டம் போல் அவர் அறை முன் நின்றிருந்தவர்களோடு நாமும் நின்றோம். சுமார் இரண்டு மணி நேரக் காத்திருத்தலுக்குப் பிறகு,

இந்த வாரம் இடம் பெற்றுள்ள காஞ்சி நகரச் சிறப்பிதழ் கட்டுரைகள் தொகுப்பு ஆர்.சி.ஜெயந்தன். படங்கள் : ராஜன். அட்டை வண்ணப்படம் : யோகா

'ஆகா, தாராளமாகப் போய்ப் படங்கள் எடுத்துக் கொள்ளுங்கள்' என்று அவரே எழுதித் தந்தும், நிருபருக்கு மட்டுமே அனுமதிச் சீட்டு தருவோம்! என்று மீடியா குழு ஒரு போடு போட்டது!

புகைப்படம் இல்லாமல் எப்படி? மறுபடி அசோக் கும்பத்திடம் முறையிட, தம் அறையிலிருந்து புறப்பட்டு வந்தார். அங்கிருந்த போலீஸிடம் "ஏன் பிரச்னை பண்ணுகிறீர்கள்? பத்திரிகையாளர்களையும், புகைப்படக்காரர்களையும் ஏன் தடுத்து நிறுத்துகிறீர்கள்?" என்று கோபித்துக் கொள்ள, நாம் தடையின்றி ஸ்டேடியத்துக்குள் நுழைந்தோம்.

அந்த மாலை நேரத்தில் மிதமான வெயிலில், பச்சைப் புல்வெளியில் இந்தியக் குழு, கோச் ஜான் ரைட் தலைமையில் கடுமையான பயிற்சியில் ஈடுபட்டிருந்தது.

இங்கிலாந்து வீரர்களோ, ஜாலியாகக் கால் பந்து ஆட்டம் விளையாடிக் கொண்டிருந்து விட்டு, பிறகே கொஞ்சம் பிராக்டிஸில் இறங்கினார்கள். காப்டன் நசீர் உசேன், தாம் சென்னை பற்றி இலேசா நினைவு வைத்திருப்பதாகவும், தம் உறவினர்களைச் சந்திக்கப் போகும் மகிழ்ச்சியில் இருப்பதாகவும் கூறிக் கொண்டிருந்தார். ஆர்வமாகச் சென்று அவரிடம் பேச்சுக் கொடுக்க நாம் முயல, 'நோநோ' என்று 144 போட்டார்கள் அங்கிருந்தவர்கள்.

இரண்டே மணி நேரத்தில் 45000 டிக்கட்டுகள் விற்றதாகக் கேள்விப்பட்டோம். இது ரெக்கார்டு பிரேக் என்றார்கள். நம்பத்தான் முடியவில்லை. (பிளாக்கில் டிக்கட்டு விற்பனை படுஜோராக ஒரு பக்கம் நடந்து கொண்டிருந்தது!) காலையில், நம் காது கேட்கவே, 2000 ரூபாய் தந்தால் டிக்கட்டுக்கு ஏற்பாடு செய்வதாக ஒருவர் சொல்லிக் கொண்டிருந்தார்.

மீடியாவிடம் காண்பிக்கிற கெடுபிடியில் பாதியை இந்த மாதிரி விஷயங்களில் காண்பிக்க டி.என்.சி.ஏ.வும் காவல் துறையும் முன்வருமா?...

- சாருகேசி
படங்கள் : வெங்கடேஷ்



''படத்துக்குப் பேரு ஏன் 'இட்லி'னு வைச்சீங்க?''

''வாய்ல நுழையற பேரா கேட்டாங்க!''

- அம்பை தேவா



''அவர் பயங்கர பந்தா பேர் வழி...''

''சரி, அதுக்காக மாட்டு லோன் சுவிஸ் பாங்க்ல வாங்கினேன்னு கதை விடறதா..?''

- மலர் சூர்யா

சுவிஸ் பாங்க்கில் மாட்டு லோன்!

''அரசியல்ல அராஜகம் எல்லை மீறிப் போயிடிச்சு...''

''ஏன் அப்படிச் சொல்றீங்க?''

''கள்ள வோட்டுப் போட ஆட்கள் தேவைன்னு பேப்பர்ல விளம்பரம் வந்திருக்கு!''

- எஸ்.எஸ்.பூங்கதிர்



''உள்ள வாங்க. ஏன் வெளியிலேயே நிற்கறீங்க?''

''நுழைய முடியலை டாக்டர். உடம்பு இளைக்க மருந்து வாங்க வந்திருக்கேன்.''

- சாயம் வெ. ராஜாராமன்





• அபர்ணா

டும் டும்!

தனது திருமண இன்னிங்ஸை விரைவில் ஓப்பன் செய்யப் போகிறார் சடகோபன் ரமேஷ். இந்த வாரத்தில் நிச்சயதார்த்தம். ஜூன் மாதம் டும்டும்!

"அடக்கமான குடும்பப் பொண்ணு. ரொம்ப அழகு. பக்குவப்பட்ட "குணம்" என்று அடுக்குகிறார் ரமேஷ், அபர்ணாவைப் பற்றி. எத்திராஜ் கல்லூரிப் பட்டதாரியான அபர்ணா, சி.ஏ. இன்டர் முடித்திருக்கிறார். ஆட்டோமொபைல் துறை வணிகத்தில் ஈடுபட்டிருக்கும் தன் அப்பாவுக்கு உதவிக் கொண்டிருக்கிறார்.

சில வருடங்களாகவே இருவருக்கும் அறிமுகம் உண்டு. 'உங்களை இணைத்த பாலம் எது?' என்று கேட்டால் இருவருமே 'எங்கள் குடும்பங்களை இணைத்தன்னு கேளுங்க சார்' என்கிறார்கள் சிறிது அவசரமாக.

சரி, அப்படியே வச்சுக்கிட்டாப் போச்சு.

கிரிக்கெட் வீரர்கள் பிஸியோதெரபிஸ்டிடம் சென்று தங்கள் தசைகளை ரிப்பேர் செய்து கொள்வது சகஜம்தான். அபர்ணாவின் அப்பாவும் அங்கு சிகிச்சைக்குச் சென்றிருக்கிறார். பிறகு இரு குடும்பங்களும் ஒரு பொது விழாவில் கலந்து கொண்டன. பிறகு ரமேஷுக்கும் அபர்ணாவுக்குமிடையே நட்பு. இப்போது திருமணம்.

"எனக்குக் கிரிக்கெட்டில் தீவிர ஆர்வம் கிடையாது. அதனாலே கிரிக்கெட் பற்றிய விவாதமெல்லாம் எங்களுக்குள்ளே நடந்ததில்லை. ரெண்டு பேரும் மைலாப்பூர் க்ளப்பில் ஷட்டில் ஆடியிருக்கிறோம். உடலை ட்ரிம்மா வச்சுக்கதான் ஷட்டில் ப்ராக்டிஸ். எங்களை இணைத்ததுன்னு இசையைத்தான் சொல்லணும். நானும் ரமேஷும் நல்ல இசைப் பிரியர்கள்" என்கிறார் கல்லூரி விழாக்களில் பாடியிருக்கும் அபர்ணா.



'எங்க அம்மா அப்பா இரண்டு பேருக்குமே ரமேஷ் தங்களுக்கு மாப்பிள்ளையாக வரணும்னு ஆசை. ஆனால் அம்மாவுக்கு ரொம்பத் தயக்கம், அவங்க தரப்பிலே சம்மதிப்பாங்களான்னு. அம்மா என் விருப்பத்தைக் கேட்டதும் 'முதல்லே அவங்க கிட்டே கேளு'ன்னேன். பிரபலமானவராச்சே, அவங்க தரப்பிலே ஒத்துக்கணுமே! என்ன ஆச்சரியம், உடனடியாக அவரோட அப்பா அம்மா சம்மதம் தெரிவிச்சுட்டாங்க."

"ஏற்கெனவே அவங்களை இம்ப்ரெஸ் பண்ணியிருந்தா அபர்ணா – இது ரமேஷின் சான்றிதழ்!"

"சட்னு பாக்றவங்களுக்கு ரமேஷ் கொஞ்சம் கர்வியோன்னு தோணும். ஆனால் அவர் மத்தவங்க உணர்வுகளுக்கு ரொம்ப மதிப்பு கொடுப்பவர். நிறைய நகைச்சுவை உணர்வு உண்டு. ஒரு விஷயத்தைத் தவிர மற்றதெல்லாம் அவரிடம் எனக்குப் பிடிச்சிருக்கு."

கல்யாணத்துக்குப் பிறகு எங்கே செல்வதாக திட்டம்? 'பாஸ்தான் தீர்மானிக்கணும்' என்கிறார் ரமேஷ். அபர்ணா இது பற்றி இன்னமும் தீர்மானிக்கவில்லையாம். பல்லின்னு செல்லமாக் கூப்பிடுவது உங்க பாஸுக்குப் பிடிக்கல்லியாம் ரமேஷ். மாத்திக்குங்க!

– குல்லூ



உணவும் தேசிய உணர்வும்!

சென்னை சாந்தோம் நெடுஞ்சாலையில் உள்ள மதுரை மீனாட்சி பவனுக்குள் சிற்றுண்டி சாப்பிடச் செல்பவர்களுக்கு, உணவோடு தேசிய உணர்வையும் சேர்த்தே பரிமாறுகிறார்கள். குழப்பமாயிருக்கிறதா?



• ஜகன்

மூவேந்தர் முன்னேற்றக் கழகத் தலைவர் டாக்டர் சேதுராமன், மருத்துவமனைதான் நடத்தி வருகிறார் என்று நினைப்பவர்களுக்கு, இதோ ஒரு செய்தி:

டாக்டர் சேதுராமன் சாந்தோமில் தொடங்கியிருப்பது ஏழாவது ஓட்டல்!

ஓட்டலில் தேசிய உணர்வு ஊட்டுவது எப்படி?

கீழ்த்தளம் முழுக்க தேச விடுதலை குறித்த சம்பவங்களின் புகைப்படங்கள் சுவர்களை அலங்கரிக்கின்றன. மேலே முதல் மாடியிலும் அபூர்வமான புகைப்படங்களின் அணிவகுப்பு.

ஜாலியன்வாலா பாக் படுகொலை, சுபாஷ் போஸின் கம்பீரமான சல்யூட், காந்திஜி வார்தா ஆசிரமத்தில் உணவு உண்பது, கவி ரவீந்திரநாத் தாகூருடன் உரையாடுவது, பம்பாய் காங்கிரசில் காந்திஜி உரையாற்றுவது, இளமைக்கால காந்திஜி, அவர் வீடு, அவர் படித்த பள்ளி, பிரிவினைக் காட்சிகள், 'I want world sympathy in this battle of Right against might' என்ற காந்திஜியின் 5.4.30 தேதியிட்ட கையெழுத்து, அகதிகள் நிரம்பி வழியும் புகைவண்டி, குறை கேட்கும் காந்திஜி என்று இந்திய விடுதலைப் போரின் நினைவுகளை மீண்டும் கண் முன்னே கொண்டு வரும் புகைப்படக் கண்காட்சியாகவே இந்த ஓட்டலின் தளங்கள் காணப்படுகின்றன.

"யார் இதை எல்லாம் சேர்த்தார்கள்?" என்று டாக்டர் சேதுராமனின் மைத்துனர் ஜகனை விசாரித்தோம்.

"டாக்டரின் மகன் ரமேஷ் மிகவும் சிரமப்பட்டு, தில்லியிலிருந்து இந்தப் புகைப்படங்களைச் சேகரித்தார். இதே மாதிரி புகைப்படங்கள் மற்ற எல்லா ஓட்டல்களிலும் வைக்கப்பட்டிருக்கின்றன" என்கிறார் ஜகன்.

கீழ்த்தளத்தில் முத்துராமலிங்கத் தேவரின் வண்ணப் புகைப்படம் பிரதானமாகத் தெரிகிறது. முதல் மாடியில் காந்திஜி நடந்து வரும் ஓவியம் அலங்கரிக்கிறது. மாடர்ன் ஆர்ட்டில், காந்திஜி முன்னே நடப்பது போலவும், பலர் அவரைப் பின் தொடர்ந்து நடப்பது போலவும் பளீரென்ற வண்ணத்தில் உள்ள அமைப்பு கவனத்தைக் கவர்கிறது.



டாக்டரின் மகன் ரமேஷ் ஓர் ஆர்க்கிடெக்ட். எனவே உள் அமைப்புகள் தனி கவனத்தோடு அமைந்திருக்கின்றன.

குழந்தைகள், விளையாடி மகிழ, தனி இடம். குடும்பத்தோடு வந்து உண்ண 'குடில்'. குடும்பப் புகைப்படத்தை இலவசமாக எடுத்துக் கொடுத்து விடுகிறார்கள்!

- எஸ்.வி.என்

படங்கள்: **வெங்கடேஷ்**

மாற்றுமுறை மருத்துவம் மூலம் சிக்கனச் சிகிச்சை

நோய்க்கு இடம் கொடேல்!

இது அவ்வை ஆத்திசூடி, எல்லாருக்கும் இது ஆரம்பப் பாடம். ஆனாலும் மக்கள் அன்றாடம் பலவித நோய் நொடிகளுக்கு ஆளாகிறார்கள்.

இவை எல்லாம் சுற்றுச் சூழல் - சுகாதாரச் சீர்கேடுகளின் விளைவு!

மக்களை அவ்வப்போது பாதிப்பவை சிறுசிறு உபாதைகளே. அவற்றை இயற்கையோடு இசைந்த சிகிச்சை முறைகளால் சிக்கனமாய் குணப்படுத்திக் கொள்ள முடியும்! ஆனால் பெரும்பாலோர் அறியாமையால் அவசரப்பட்டு, பெரும் தொகை செலவு செய்து இதர மருத்துவ முறைகளை நாடுகிறார்கள். என்றாலும் அவர்களுக்குக் கோரிய பலன் கிட்டுவதில்லை.

ருஷ்ய நாட்டுக் காந்த சிகிச்சை,
இங்கிலாந்து நாட்டு மலர்ச் சிகிச்சை,
ஜெம் தெரபி (மகத்துவம் மிக்க மணிக்கற்கள்) மற்றும்
டெலி தெரபி இவற்றோடு இத்தாலிய நாட்டு எலக்ட்ரோ ஹோமியோபதி!

இத்தனை சிகிச்சை முறைகளையும் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் அஞ்சல் வழிப் பாடங்கள் பெற்று எவர் வேண்டுமானாலும் பயிலலாம்; தேர்ச்சி பெறலாம்.

ஒவ்வொரு சிகிச்சை முறைக்கும் தமிழில் ரூ.190 ஆங்கிலத்தில் ரூ.240 வெளிநாட்டினருக்கு மூன்று பங்கு கட்டணம் வசூலிக்கப்படும். எளிய கட்டணங்கள். ஆர்வம் உள்ளவர்களுக்கு அரிய வாய்ப்பு! விண்ணப்பப் படிவம் ரூ. 10/- மட்டும்.



அற்புத மனிதர் என்று ஸ்ரீரங்கம் ஸ்ரீலஸ்ரீ பவனாசார்யர்களாலும் தர்மரக்ஷணை என்று காசிவாசி ஸ்ரீ குமாரசாமித் தம்பிரான் வாரணாசி அவர்களாலும் பாராட்டுதல் பெற்ற சமூக சேவகர் டாக்டர் லயன் **எம்.ஜி.அண்ணாதுரை DEHM, Phd (MAG) அவர்களின் நிறுவனம் - மாற்றுமுறை மருத்துவ மையம்** மேற்படி சிகிச்சை முறைகளைப் பலருக்கும் சிக்கனச் செலவில் கற்பித்து வருகிறது.

உங்கள் உடல் உபாதைகள் மற்றும் குடும்ப பிரச்னைகளை நீக்க தபால் மூலம் மட்டும் சிகிச்சை பெற கட்டணம் ரூ. 190/- மட்டும் எம்.ஓ. (அ) டி.டி. அனுப்புக.

தொடர்பு முகவரி :

மாற்று முறை மருத்துவ மையம்
60, ஜீவன்லால் நகர், திருவொற்றியூர்,
சென்னை - 600 019 Phone : 573 5207 Fax : 044 5730074

இந்த நிறுவன வருமானங்கள் பற்பல தர்ம காரியங்களுக்காக வழங்கப்படுகின்றன. சென்ற ஆண்டு குஜராத் பூகம்ப நிவாரண நிதிக்கு ரூ. 1 லட்சம் தினமலர் நாளிதழ் மூலம் வழங்கியது குறிப்பிடத்தக்கது.

நேரிடையாக விண்ணப்பம் சென்னையில் பெற

ஹீலிங் மேக்னெட்ஸ் & கிரிஸ்டல்ஸ்,
10,கோபாலகிருஷ்ணா ஐயர் தெரு, தி. நகர், சென்னை - 600 017. போன் : 821 8268




தி.மு.க. பாடிய எதிர்லாவணி!

மியூஸிக் அகாதமி அரங்கில் துக்ளக் ஆண்டு விழாவை நடத்தி தி.மு.க.வைத் தாக்கியதில் 'சோ' மீதும், அரங்கைக் கொடுத்த அதன் நிர்வாகிகள் மீதும், அறிவாலயப் பிரமுகர்களுக்கு ஏக எரிச்சல். ''இசைக்காகவே இருக்கும் ஒரு கண்ணியமான சபா மேடையை மற்றவர்களைத் தூற்றுவதற்காக எப்படிக் கொடுக்கலாம்? நாமும் ஏதாவது ஒரு பத்திரிகையின் பெயரைச் சொல்லி எதிர்லாவணி பாட அந்த மேடையை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்'' என்ற மூத்த தலைவர்களின் ஆலோசனையின் பேரில் சுறுசுறுப்பாக களம் இறங்கினார் இலக்கிய அணி பிரமுகரான கயல் தினகரன்.



• கோபால்



• சு. சமுத்திரம்

'தமிழ் கருத்தரங்கம்' என்ற பத்திரிகை சார்பாக கருத்தரங்கம் நடத்தப் போவதாக அரங்கை ஏற்பாடு செய்து, மேடையை முழுக்க, முழுக்க, 'சோ'வுக்கு எதிரான லாவணி பாடவும், அரசை ஒரு பிடி பிடிக்கவும் பயன்படுத்திக் கொண்டார்கள் பேச்சாளர்கள். Playing to the gallery என்று சொல்வார்களே அது போல, கூட்டத்தின் தன்மைக்கு ஏற்ப, சமுதாயத்தின் குறிப்பிட்ட வகுப்பினரை பெயர் சொல்லாமல் தாக்கினார் சு. சமுத்திரம். கூட்டம் புரிந்து கொண்டு கைதட்டி மகிழ்ந்தது. ''என்றைக்கு தி.மு.க.வில் எம்.ஜி.ஆரைப் பெரும் தலைவர் என்று போற்றிப் புகழ்ந்தார்களோ அன்று என் திராவிட இயக்கப் பற்றை விடுத்து, கதர்ச் சட்டை போட்டுக் கொண்டேன். தி.மு.க.விலிருந்து எம்.ஜி.ஆர். என்று விலகி விட்டாரோ அன்று முதல் திராவிட இயக்கத்தின்பால் மீண்டும் பற்றுக் கொள்ளத் துவங்கினேன்'' என்றார் சமுத்திரம். ''நடப்பது 'துக்ளக்' தர்பார்; ஏன் சொல்கிறேன் என்றால், இரண்டுவிதமான ரேஷன் கார்டுகள் கொடுக்கப் போவதாகச் சொன்னார்கள்; எல்லோரும் கியூவில் நின்று புகைப் படம் எடுத்தார்கள். இப்போது ஒத்தி வைத்து விட்டார்கள். அதே போல் ஐந்தாம் வகுப்பிலிருந்து பொதுப் பரீட்சை என்றார்கள்; பல்டி அடித்தார்கள், இப்படி பல பல்டிகள். இன்று வீரப்பனைப் பற்றி அரசிடம் உள்ள எல்லா தகவல்களும், 'நக்கீரன்' கொடுத்தது தான். இன்னும் என்ன செய்ய வேண்டும்? 'சோ' போன்று காட்டிக் கொடுக்கும் பழக்கம் எங்களுக்கு இல்லை'' என்று காட்டமாகத் தாக்கினார் கோபால்.

அப்துல்ரகுமான் பேசத் துவங்கியபோது கூட்டம் கலையத் துவங்கியது. திருச்சி சிவா வழக்கம் போல பேசி, இருந்த கூட்டத்தைக் கட்டிப் போட்டார். ''அரசியல்வாதிகளை பழித்துப் பேசியும், அரசியல் என்றாலே தீண்டத்தகாதது போலவும் சொல்லும் மனோபாவம் பெருகி வருகிறது. எதில்தான் அரசியல் இல்லை? சமுதாயத்தின் ஒவ்வொரு அங்கமும், அரசியலிலிருந்து விலகிச் சென்றால், கடைசியில் ரவுடிகள்தான் வருவார்கள் என்று அண்ணா சொன்னார். அதுதான் நடக்கிறது'' என்று பொடி வைத்தார் தலைமைவகித்த துரைமுருகன்!

— கௌசி

படங்கள் : அஸ்வின்



சண்டையா போட முடியும்?

பெமினா மிஸ் இந்தியா போட்டியில் கலந்துகொண்டு வெறுங்கையோடு திரும்பி யிருக்கிறார் தமிழகத்திலிருந்துப் போட்டிக் குச் சென்ற மேதா.

"என்னாச்சு மேதா?" ஆறுதலாய்த்தான் ஆரம்பித்தோம்.

"இந்தப் போட்டியில நான் கலந்துகொண் டது இதுதான் முதல் தடவை. நாற்பதுநாள் ட்ரெயினிங் கொடுத்தாங்க. எப்படிப்பேசணும். யோகா, உடற்பயிற்சி, நவீன ஓவிய கவனிப்பு, மரபு ரீதியான ஓவிய கவனிப்புன்னு நிறைய பயிற்சி. ஒவ்வொன்றும் ரொம்ப இனிமையா இருந்தது. போன உடனேயே ஏழு பேரை ஃப்ரண்ட் புடிச்சிட் டேன். நாங்க எல்லாரும் தான் ரவுண்ட் அடிப்போம்..."

"அதெல்லாம் சரி, எப்படி கோட்டை விட்டீங்க..?"

"அதாவது முதல் கேட்வாக்ல இருபத்தி யாறு பேர் வருவாங்க. இரண்டாவது பதி மூணு பேர். ஒவ்வொரு ரவுண்ட் முடிஞ்சதும் பெரிய திரையில, அவங்கவங்க எடுத்த மார்க் கும், பெயரும் வரும். யார்லாம் குறைவா எடுத்திருக்காங்களோ அவங்க அடுத்த ரவுண்ட் 'வாக்'குக்கு வர முடியாது. எனக்கு நல்ல மார்க். மூணாவது ரவுண்ட்டுக்கு ரெடியாயிட்டு இருக்கும்போது ஷாக்காயிட் டேன். என்னைவிட குறைவா மார்க் வாங்கி யிருக்கறவங்க பெயர் திரையில வந்தது. என் பெயர் இல்லை. அங்க இருந்தவங்களே ஆச் சரியப்பட்டுப் போய்ட்டாங்க. என்ன செய்ய! 'நம்ம நேரம் அவ்வளவுதான்னு இருந் துட்டேன். இதுக்காக மேடையில போய் சண்டையா போட முடியும்? இப்படிப் பண்ணிட்டாங்களே?"

"தமிழ் நாட்டுல இருந்து போறவங் களைக் கண்டுக் கறதேயில்லைன்னு சொல்றாங்களே.. நிஜமா?"

"இங்கயிருந்து யார்க்கும் முதலிடம் கிடைக்கலைங்கறதி லேர்ந்தே தெரியலையா? வேணும்னே பண் றாங்க போலிருக்கு. மும்பை பெண்கள்னா டிரெய்னிங்குக்கு ஈஸியா இருக்கும். மத்த மாநிலத்துக்காரங்களுக்கு அது சங்கடம்னு நினைச்சுப் பண்றாங்களோ என்னவோ? அங்க நிறைய குளறுபடிகள் நடக்கும்னு நினைக்கிறேன்." என்று பொரிந்த மேதா, "அங்க போய்ட்டு வந்ததுல, ப்ரண்ட்ஸ் கிடைச்சதுதான் லாபம்" என்கிறார்.

- அப்பு



அகஸ்தியர் எஸ். கோபாலகிருஷ்ணன் அவர்களின் குமாரத்தி குமாரி **ஜி. ஷோபிதாவின்** பரதநாட்டிய அரங்கேற்றம் 20.01.2002 ஞாயிற்றுக்கிழமை மாலை 6.15 மணியளவில் திருச்சி, மேலப்புலிவார்டு ரோடு இரத்தினவேல் தேவர்

குமாரி ஜி. ஷோபிதாவின் பரத நாட்டியம் அரங்கேற்றம்

மன்றத்தில் நடைபெற்றது.

குமாரி ஜி. ஷோபிதா - திருமலை சமுத்திரம் 'சாஸ்த்ரா'' (ஷண்முகா எஞ்சினியரிங் கல்லூரி யின் - பி.டெக் வகுப்பின்) முதலாம் ஆண்டு மாணவி. கடந்த 5 ஆண்டுகளாக திருச்சி, சலங்கை நாட்டியப்பள்ளியில் திருமதி விஜயா முகுந்தன் - திரு. முகுந்தன் தம்பதியினரை குருவாகக் கொண்டு நாட்டியத்தை முறையாகப் பயின்றவர். நாட்டியத்தைத் தவிர வாய்ப்பாட்டு மற்றும் வீணையும் அறிந்தவர். இவரது பெற்றோர்களின் ஊக்குவிப்பாலும் சிறந்த பயிற்சியாலும் பரதக் கலையினை தனி ஆர்வத்துடன் கற்றுக் கொண்ட இவரது பரதநாட்டிய அரங்கேற்றம் 20.01.2002 அன்று நடைபெற்றது.


இவ்விழாவில், திருச்சி மாநகர மேயர் மாண்புமிகு திருமதி. சாருபாலா தொண்டைமான், திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் மணிவாசன் அவர்களும், திருச்சி மாவட்ட நீதிபதி திரு. தணிகாசலம் அவர்களும், வருவாய்த்துறை ஆணையர் திரு. மூர்த்தி அவர்களும், சிதம்பரம் பிள்ளை மகளிர் கல்லூரி முதல்வர் முனைவர் கி. சேகர் அவர்களும், பேராசிரியர் திரு. தியாகராஜன் மற்றும் பேராசிரியர் திரு. கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக, கலந்துகொண்டு விழாவைச் சிறப்பித்தனர்.

இந்நிகழ்ச்சியினை பாராட்டிய ஒவ்வொருவரும் மற்றும் ரசிகர்களும் குமாரி ஜி. ஷோபிதாவின் பரதநாட்டிய அரங்கேற்றம் நிகழ்ச்சி, அவர் பல மேடைகளில் ஆடி அனுபவம் பெற்ற ஒரு நாட்டிய பெண்மணியின் ஆடலைப் போன்றிருந்தது என்று ஏகமனதாக புகழ்ந்தனர்.

ஆடல் அரசன் அருள்மிகு நடராஜனைத் துதித்து நாமும் குமாரி ஜி. ஷோபிதாவின் கலைச்சேவை தொடர மனதார வாழ்த்துவோமாக!

காஞ்சி சிறப்பிதழ்

கி றிஸ்து பிறப்பதற்கு முன்பே, அரசியல், கலை, நாகரிகம், சமயம் எல்லாவற்றிலும் சிறந்து விளங்கிய பழம் பெரும் நகரம் காஞ்சி. பாரதத்தின் 'முக்தி தரும் நகர் எழில் முக்கியமாம் காஞ்சி' என்று புகழப்பட்டதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. இன்று காஞ்சியில் தழைத்தோங்கி விழுது பரப்பி நிற்கும் சைவம், வைணவம் தவிர, அன்று சமணமும், பௌத்தமும்கூட, ஜைனகாஞ்சி, பௌத்த காஞ்சி என்று ஊரின் பெயரையும் சேர்த்தே அழைக்கும்படி வளர்ந்து செழித்திருந்தன. புத்த பிக்ஷுவான அறவான அடிகள் தங்கி வாழ்ந்த இடம் இன்று அறப் பணஞ்சேரியாக வழங்கப்படுவது ஓர் ஆறுதல் என்றாலும், காஞ்சியில் வேறெங்கும் புத்தர் சிலைகளோ, பௌத்தச் சின்னங்களோ காணக் கிடைக்கிறதா





• மணிமேகலைக் குடும்பத்துடன்

என்று வலம் வந்தோம். ஏகாம்பரநாதர் சன்னதியின் ராஜகோபுரத்தை ஒட்டிய மதிற்சுவரில் புத்தரின் சின்னச் சின்ன உருவங்கள் செதுக்கப்பட்டிருந்தன. அவற்றின் பழமை, நம்மை ஆயிரம் ஆண்டுகளுக்கும் அப்பால் அழைத்துப் போகிறது.

சீனப் பயணி யுவான் சுவாங், கி.பி. ஏழாம் நூற்றாண்டில் காஞ்சிக்கு வந்து நீண்ட காலம் தங்கியிருந்தார் என்றும், அவர் எழுதிய குறிப்புகளில் காஞ்சியில் செழித்திருந்த பௌத்தம் பற்றிய செய்திகள் நிறைய உண்டு என்று பள்ளியில் படித்ததுண்டு. அதை மெய்ப்பிப்பது போல கி.பி. 674-800ல் இரண்டாம் நந்திவர்மனால் கட்டப்பட்ட வைகுண்ட பெருமாள் கோவில் சுவர்ச் சிற்பங்களில் ஒரு சீன யாத்ரிகரின் சிலை செதுக்கப்பட்டுள்ளது. தொல்பொருள் ஆய்வுத் துறையைச் சேர்ந்தவர்கள் அதுதான் யுவான் சுவாங் சிலை என்கிறார்கள்!


இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக, மணிமேகலை துறவு பூண்டு புத்த சமயத்தைத் தழுவியது இந் நகரில்தான். மணிமேகலை காஞ்சி மாநகருக்குள் நுழையும்போது காஞ்சி மாநகர் வீதிகள் எப்படிக் காட்சி அளித்தன என்பதை, மணிமேகலைக் காப்பியத்தின் இருபத்து எட்டாவது அத்தியாயமான 'கச்சி மாநகர் புக்க காதை'யில் (கச்சி - காஞ்சி) வரிகள் இருபத்து ஒன்பது முதல் அறுபத்து ஒன்றுவரை சொல்லப்பட்டிருக்கிறது. மணிமேகலை தங்கியிருந்து, தமது அட்சயபாத்திரம் மூலம் வருவோர்க்கெல்லாம் அமுது படைத்த தெருவே அறப்பெருஞ் செல்வித் தெரு, அமுத படித் தெரு என்று இன்றும் வழங்கப்பட்டு வருகின்றன. அறப் பெருஞ் செல்வித் தெருவில் மணிமேகலை அன்று அமுது படைத்தார் சரி... இன்று அதே தெருவில் மணிமேகலை என்ற பெயரில் ஒரு பெண்மணியாவது வாழ்ந்து வருகிறாரா? என்று சின்ன சர்வேயில் இறங்கி

னோம்.

ஒன்பதாவது வார்டில் இருந்த அந்தத் தெருவின் வாக்காளர் பட்டியல் கிடைத்தால் வேலை சுலபமாகிவிடும் என்றபடி அந்த வார்டின் நகரசபை உறுப்பினர், அதே தெருவில் வசித்து வரும் மனோவைச் சந்தித்தோம். உடன் அவர் வழங்கிய வாக்காளர் பட்டியலில் இருந்த பெயர்களை 'திக்திக்' மனநிலையோடு படித்துக் கொண்டே வந்தோம். ஆச்சர்யம்! வீட்டு எண் 60-எப்ல் முப்பத்து மூன்று வயது மணிமேகலை



• மண் மூடிய மகாவீரர் கோவில்



• ஏகாம்பரநாதர் மதில் சுவரில் புத்தர்

யின் பெயர் கண்களில் பட, நமக்குச் சந்தோஷ மின்னல்.


மணிமேகலையின் வீட்டுக் கதவைத் தட்டியபோது அச்சகத்தில் பணி புரிந்து வரும் அவரது கணவர் குமார்தான் திறந்தார். நமது சர்வே குறித்துச் சொன்னதும் சந்தோஷத்தின் முகம் மலர்ந்து, மனைவி மணிமேகலையை அழைக்க, அவர்களின் குழந்தைகள் சூழ, அங்கே மகிழ்ச்சி வெள்ளம். "நான்

கிடைத்தார் மணிமேகலை!

இதே தெருவில் பிறந்து வளர்ந்தவன். எனக்கு மணிமேகலை என்று பெயர் வைத்த காரணத்தை அப்பா சொல்லியிருக்கிறார். மணிமேகலை அமுதுபடைத்த தெரு இது என்று தாத்தாவும் கூட எனக்குச் சொல்லியிருக்கிறார்" என்று சொல்லும், மணிமேகலை, விடைபெறும் போது 'நீங்க எங்க வீட்டில் சாப்பிட்டு விட்டுப் போனால்தான் எங்களுக்குச் சந்தோஷம்" என்றார். அவர் அன்போடு கொடுத்த மோரைப் பருகி விடை பெற்றோம்.

சமணக் காஞ்சிக்கு இன்று ஒரே ஆதாரமாக இருக்கும் ஊர், திருப்பருத்திக் குன்றம். சமணத்தை உலகறியச் செய்த இருபத்து நான்காவது தீர்த்தங்கரரான மகாவீரருக்கு எழுப்பப்பட்ட பழைமையான இரண்டு கோவில் கள் இங்கே உள்ளன. ஒன்று முற்றிலும் சிதைந்துவிட்ட நிலையில் எஞ்சி நிற்கும் ஒரு கோவிலும், அதிலிருக்கும் பழைமையான ஓவியங் களும் பாதி அழிந்து விட்ட நிலையில் பரிதாப மாக காட்சி தருகிறது. இந்த கோவிலுக்குப் பூஜை செய்து வரும் புருஷோத்தமன் என்பவரைத் தவிர இந்த ஊரில் வேறு ஜைனரே கிடையாது!


ர்(பொன்னம்பலம)
ஜயகுமாரி(தர்)பெ 36
ரமேஷ்(சுப்பிரமணி)ஆ 24
காமாட்சியம்மாள்(அய்யாவுநாயகர்)
60F/1 குமார்(அய்யாவுநாயகர்)ஆ 45
60F/1 மணிமேகலை(குமார்)பெ 33
85 60F/1 ஞானகியம்மாள்(அய்யாவுநாயகர்)பெ
886 60F/1 செல்வராஜ்(அய்யாவுநாயகர்)ஆ 38
887 60F/1 காஞ்சனா(செல்வராஜ்)பெ 36
888 60F/1 சுப்பிரமணி(முனுசாமி)ஆ 46
89 60F/1 கிருஷ்ணவேணி(சுப்பிரம
60F/1 இராணியம்மாள்



2002 பிப்ரவரி 3
விஷு தை 21
மலர் : 60
இதழ் : 27

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.




அமெரிக்காவின் அசட்டுத்தனம்!

அதிகாலை ஆறரை மணிக்கு, கொல்கத்தாவிலுள்ள அமெரிக்க தூதரகத்தைத் தாக்கியவர்கள் பயங்கரவாதிகள்தானா என்று பொறுத்திருந்துதான் பார்க்கப் போகிறாராம் அமெரிக்க உள்துறை (எஃப்.பி.ஐ.) தலைவர்! இப்படியே பொறுமை காத்தால் ஒவ்வொரு தூதரகமாகக் குறிவைக்கப்படும். கொல்கத்தாவில் அமெரிக்க தூதரகம் தாக்கப்பட்டதைக் கூட நேரடியாக ஒப்புக் கொள்ளவில்லை எஃப்.பி.ஐ. தலைவர்! 'கொல்கத்தா காவல் துறையினர் தாக்கப்பட்டது துரதிர்ஷ்டம்' என்று ஏதோ போலீஸ்காரர்களைத்தான், பயங்கரவாதிகள் குறிவைத்தது போல் விசித்திரமாக அறிக்கை விட்டிருக்கிறார்!

அமெரிக்க அயலுறவுத் துறை அமைச்சர் காலின் பாவெல், பாகிஸ்தான், இந்திய விஜயங்களை முடித்துக் கொண்டு வாஷிங்டன் திரும்பிய கையோடு - எஃப்.பி.ஐ. தலைவர் புதுடெல்லியில் இருந்தபோதே - இந்தப் பயங்கரத் தாக்குதல் நடைபெற்றிருக்கிறது.

காஷ்மீரப் பிரச்னை குறித்து இரு நாடுகளும் பேச வேண்டும்; பாகிஸ்தான் ஆக்கபூர்வமாய்ச் செயல்பட வேண்டும்; இந்தியாவும் ஒத்துழைக்க வேண்டும் என்றெலாம் இரு நாடுகளிடையேயும் இணைப்புப் பாலம் அமைக்க பலமாக முயற்சி செய்தார் பாவெல் என்பது உலகறிந்த விஷயம். 'அமைதி பற்றியோ, அதற்கான முயற்சி பற்றியோ யாரேனும் பேசினால் தெரியும் செய்தி!' என்பது



போல் பயங்கரவாதிகள் செயல்பட்டிருப்பது தெளிவு.

அவர்களைக் கட்டுப்படுத்தி பயங்கரவாதத்துக்கு முடிவு கட்டும் நோக்கம் முஷாரஃப்புக்கு இல்லை என்பதும் வெட்டவெளிச்சமாகியிருக்கிறது.

இவ்வளவு நடந்த பிறகும் முஷாரஃப்பை முகத்துக்கு நேரே கேள்வி கேட்டு, கண்டிக்க அமெரிக்கா தயங்குகிறது! 'பாக்'கிலிருந்து இந்தியாவுக்குள் ஊடுருவும் பயங்கரவாதிகளைக் கண்டனம் செய்ய பத்து முறை யோசிக்கிறது. போதாக்குறைக்கு பாகிஸ்தானுக்கு ஏராளமான ராணுவ தளவாடங்களை விற்கவும் பொருளாதார உதவிகள் வழங்கவும் ஒப்பந்தம் வேறு செய்து கொண்டிருக்கிறது.

பாகிஸ்தான் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடைகள் விதிப்பதோடு வேறு விதங்களிலும் கிடுக்கிப்பிடி போட்டாலொழிய, அந்நாடு பயங்கரவாதத்துக்கான மூலஸ்தானமாக விளங்குவதைத் தடுக்க முடியாது.


ஆனால், அமெரிக்க அரசின் கொள்கை பாகிஸ்தான் ஆதரவாகவே இருக்கிறது. அதன் எதிரொலியாகத்தான் அமெரிக்க உளவுத் துறை தலைவரும் டில்லியில் பேசியிருக்கிறார்.

அமெரிக்காவின் பாகிஸ்தான் ஆதரவு போக்கு, பயங்கரவாதத்தை உரமிட்டுத்தான் வளர்க்கும். பாவெல் வந்தாலும் சரி, ஜனாதிபதி புஷ்ஷே வந்தாலும் சரி, அமெரிக்க கொள்கை மாறாத வரை, பயங்கரவாதத்தை உலகிலிருந்தே ஒழிக்கும் அமெரிக்க நோக்கம் நிறைவேறாது; இந்தியாவின் தலைவலியும் தீராது.

'மூன்றாவது அணி'யின் கோழைத்தனம்!

ஜெயலலிதாவுக்கு எதிராக ஆண்டிப்பட்டியில் போட்டியிடவிருக்கும் வைகை சேகரை முதலில் வாழ்த்தி விடுவோம்.

வெற்றிக்கான வாய்ப்பு மிகக் குறைவு என்று அறிந்தும் ஜனநாயக கடமையாற்றும் பொறுப்பை



ஏற்றுக் கொண்டிருக்கும் வீரர்!

ஜெயலலிதாவை ஒப்புநோக்க, வைகை சேகர் பிரபலமான அரசியல்வாதி அல்ல. 'நன்கு அறியப்பட்ட, தனிவலிமை படைத்த ஒரு தி.மு.க. வேட்பாளரை ஏன் ஆண்டிப்பட்டியில் நிறுத்தியிருக்க கூடாது?' என்ற கேள்வி எழுகிறது. அவ்வாறு நிறுத்தியிருப்பின் ஜெயலலிதா வெற்றி பெற்றாலும் வாக்குகள் வித்தியாசம் அபரிமிதமாய் இராது. அதுவே அ.தி.மு.க. தலைவிக்கு ஓர் எச்சரிக்கையாகவும் அமைந்திருக்கும்.

அப்படியொரு வேட்பாளரை நிறுத்த தி.மு.க. தயங்குவது, மக்கள் மத்தியில் பெயரெடுத்து விட்ட ஒருவர் தோற்றுவிடக் கூடாது என்ற நோக்கில்தான்.

இந்தக் கருத்துக்களைப் பற்றிச் சிந்தித்திருப்பின், அ.தி.மு.க.விலிருந்து பிரிந்து வந்த கட்சிகள் தி.மு.க.வின் கரங்களைப் பலப்படுத்த முற்பட்டு ஆதரவு தெரிவித்திருக்கும்.

ஆனால், காங்கிரசும் சரி, த.மா.கா. கம்யூனிஸ்டுகளும் சரி, தேர்தலில் போட்டியிடப்போவதில்லை என்றதுடன் தேர்தலைப் புறக்கணிக்கப் போவதாகவும் முடிவு அறிவித்து விட்டன. சிதம்பரத்தின் காங்கிரஸ் பேரவையும் இதே முடிவிலிருக்கிறது.

இதனால் ஜெயலலிதாவின் வெற்றி சுலபமாகப் போகிறது என்பதைப் புரிந்து கொள்ளும் அரசியல் ஞானம் அத்தனை கட்சிகளுக்கும் உண்டு.

எனினும் இப்படியொரு முடிவை அவை எடுத்துள்ளன என்பது பரிதாபம்.

தி.மு.க.வை ஆதரிக்கத் தயாராயில்லையென்றாலும் அ.தி.மு.கவை எதிர்த்தாக வேண்டும் என்ற தார்மீகக் கோட்பாடு அக் கட்சிகளை வழிநடத்தவில்லை!

அ.தி.மு.க.வை ஆதரித்து ஜெயிக்க உதவியது தமிழ்நாட்டுக்கு இக்கட்சிகள் செய்த துரோகம்.

அதைவிடப் பெரிய துரோகம் இப்போது அ.தி.மு.க. கூட்டணியிலிருந்து விலகிய பின்னர், ஆண்டிப்பட்டியில் போட்டியிடப் போவதில்லை; தேர்தலைப் புறக்கணிக்கிறோம் என்ற கோழைத்தனமான முடிவு. ○

ஆர்த்தி புடைவை ஆர்த்தி நெக்லஸ்!



ராஜ்டீ.வி.யில், ஆர்த்தி தொடர் ஆரம்பித்து, இருபத்தைந்து எபிசோட்கள் கூட ஆகவில்லை. அதற்குள் 'ஆர்த்தி' பெயரில் ஒரு புது டிசைன் புடைவையே அறிமுகப்படுத்தி விட்டார்கள். இதே பெயரில் நெக்லஸ் ஒன்றும் வந்து விட்டது.

"இந்த அளவுக்கு வரவேற்பு இருக்கும் என்று நாங்களே எதிர்பார்க்கவில்லை" என்கிறார் இதன் தயாரிப்பாளர் ஏவி.எம். குமரனின் மகன் ஷண்முகம்.

"ஒரு ஃப்ரேம் கூட நிராகரிக்க முடியாதபடி கதையை டைட்டாக பேக் பண்ணி இருக்கிறோம். காரணம், இன்று மெகா தொடர்கள் என்றால், வளவள என்று இழுத்துவிட்டு முடிகிற தருணத்தில் ஒரு சஸ்பென்ஸ் வைத்து விட்டால் போதும் என்கிற மனப்பான்மை இருக்கிறது. அதை உடைத்து, விறுவிறுப்பு குறையாமல் செய்திருக்கிறோம். இந்தத் தொடர் மூலம் எங்களுக்கு இன்னொரு உண்மையும் புரிந்தது. நல்ல தொடர் எந்த சேனலில் வந்தாலும் மக்கள் பார்ப்பார்கள் என்பதுதான் அது. ஒவ்வொரு நாளும், தொடர் முடியும் நேரத்தில், எங்கள் ஆபீசில் இரண்டு டெலிபோன்களும் ஒலிக்க ஆரம்பித்துவிடும். தினமும் குறைந்தது இருபது, முப்பது டெலிபோன் கால்கள் வருகின்றன. தொண்ணூறு சதவிகிதம், பெண்களிடமிருந்துதான் என்பதே, 'ஆர்த்தி' தொடர், எந்த அளவுக்கு மக்களுக்குப் பிடித்திருக்கிறது என்பதற்குச் சாட்சி" என்கிறார் ஷண்முகம்.



"இந்த கேரக்டரின் அமைப்பு எனக்கு ரொம்பப் பிடித்திருக்கிறது. எந்த நேரத்தில் கோபப்படவேண்டுமோ, எதிர்க்க வேண்டுமோ அப்போது எதிர்ப்பதும் அதே சமயம், ஒரு இந்தியப் பெண்ணுக்கு என்னென்ன குணாதிசயங்கள் உண்டோ அத்தனையையும் கொண்டிருப்பதும் ஆர்த்தியின் ஸ்பெஷாலிடி! நடிப்பு என்பது எனக்குத் தொழில் என்பதால், சின்னத்திரை, சினிமா என்று நான் வித்தியாசம் பார்ப்பதில்லை. சினிமாவில் பிஸியாக இருந்த போதே, மலையாள நடிகர் நெடுமுடிவேணு இயக்கிய ஒரு தொடரில் நடித்திருக்கிறேன். டெலிவிஷனின் வீச்சு என்ன என்பதை அப்போதே நன்றாகப் புரிந்து கொண்டவள் நான்" என்கிறார் ஆர்த்தி ஸாரி... சித்தாரா.

"ஆர்த்தி கதையின் ஹைலைட்டே, அதில் இடம் பெறப்போகும் கான்ட்ரவர்சிதான்! அது மக்கள் மத்தியில் ஆரோக்கியமான ஒரு விவாதத்தை எழுப்பப்போவது நிச்சயம்!" என்கிறார் இயக்குனர் ராஜா.

அது என்ன கான்ட்ரவர்ஸி?

கதாசிரியர் தேவிபாலாவைக் கேட்டால் "சஸ்பென்ஸ்!" என்கிறார். என்ன சஸ்பென்ஸோ?

— கௌதம் ராம்

ஸ்ரீ ராமஜெயம்

வடமாநில புனித யாத்திரை

32 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவம்

10.3.2002 : இது 18 நாட்கள் கொண்டது. ஆக்ரா, மதுரா, பிருந்தாவன், ஜெய்ப்பூர், நியூடெல்லி, சிம்லா, குளு, மணாலி, மணிகரன், வைஷ்ணவி தேவி, அமிர்தசரஸ்,குருக்ஷேத்திரம் - நபர் ஒருவருக்கு கட்டணம் ரூபாய் **7100/-**

24.3.2002 : இது 10 நாட்கள் கொண்ட குதூகலமான கர்நாடக யாத்திரை. ஸ்ரீரங்கபட்டிணம், மைசூர், சிருங்கேரி, அன்னபூர்ணா, சுப்ரமண்யம், தர்மஸ்தலம்,கொல்லூர் மூகாம்பிகை, உடுப்பி, முருடீஸ்வரர், கோமடேஸ்வரர், ஸ்ரவண பெலகுலா, பேலூர் ஹலபேடு கோகர்ணம், கட்டில், பெங்களூர், தலக்காவேரி - நபர் ஒருவருக்கு கட்டணம் **ரூ. 3650/-**

7.4.2002 : இது 15 நாட்கள் கொண்டது. மும்பை, நாசிக், பஞ்சவடி, த்ரியம்பகேஸ்வர், சிரிடி, சனி சிங்கனாப்பூர், குஸ்னேஸ்வர், எல்லோராகுகை, நாகநாதம், பரலிவைத்தியநாதம், கைக்கடிமகாராஜா கோயில், பண்டரிபுரம், பீமாசங்கரம், உஜ்ஜயினி, மகா காளேஸ்வரர், ஓங்காரேஸ்வர் - நபர் ஒருவருக்கு கட்டணம் **ரூ. 6500/-**

7.4.2002 : இது 12 நாட்கள் கொண்டது. பூரிஜெகன்னாத், கோனாரக், புவனேஸ்வர், கயா, புத்தகயா, காசி, சாரநாத், அயோத்தியா, அலகாபாத் - நபர் ஒருவருக்கு கட்டணம் **ரூ. 4800/-**

7.4.2002 : இது 17 நாட்கள் கொண்டது. பூரிஜெகன்னாத், கோனாரக், புவனேஸ்வர், கயா, புத்தகயா, அலகாபாத், அயோத்தியா, காசி, சாரநாத், ஹரித்துவார், ரிஷிகேஷம், நியூடெல்லி, ஆக்ரா, மதுராபிருந்தாவன் - நபர் ஒருவருக்கு கட்டணம் **ரூ. 6400/-**

24.4.2002 : இது 10 நாட்கள் கொண்ட குதூகலமான ஆந்திரபிரதேஸ் யாத்திரை. கதிரி, புட்டபர்த்தி, லேபாக்ஷி, மந்திராலயம், பஞ்சமுகி, மஹாநந்தி, ஸ்ரீசைலம், ஐதராபாத், பத்ராசலம், விஜயவாடா, பெனுகுண்டா, அன்னாவரம், சிம்மாசலம், ராஜமன்றி, மங்களகிரி, நெல்லூர், ஜொன்னவாடா, காளஹஸ்தி - நபர் ஒருவருக்கு கட்டணம் **ரூ. 3700/-**

3.5.2002 : இது 16 நாட்கள் கொண்டது. பூரிஜெகன்னாத், கோனாரக், புவனேஸ்வர், கயா, புத்தகயா, காசி, சாரநாத், நேபாளம், அயோத்தியா, அலகாபாத், நைமிசாரண்யம் - நபர் ஒருவருக்கு கட்டணம் **ரூ.6800/-**

3.5.2002 : இது 30 நாட்கள் கொண்டது. பூரிஜெகன்னாத், கோனாரக், புவனேஸ்வர், கயா, புத்தகயா, அலகாபாத், நேபாளம், அயோத்தியா, காசி, சாரநாத், நைமிசாரண்யம், ஹரித்துவார், ரிஷிகேஷம், கேதார்நாத், பத்ரிநாத், தேவப்ரயாகை, டேராடூன், முசோரி, நியூடெல்லி, ஆக்ரா, மதுராபிருந்தாவன் - நபர் ஒருவருக்கு கட்டணம் **ரூ. 10,400/-**

10.5.2002 : இது 22 நாட்கள் கொண்டது. பூரிஜெகன்னாத், கோனாரக், புவனேஸ்வர், கயா, புத்த கயா, அலகாபாத், அயோத்தியா, காசி, சாரநாத், ஹரித்துவார், ரிஷிகேஷம், கேதார்நாத், பத்ரிநாத், தேவப்ரயாகை, டேராடூன், முசோரி, நியூ டெல்லி, ஆக்ரா, மதுராபிருந்தாவன் - நபர் ஒருவருக்கு கட்டணம் **ரூ. 7700/-**

2.6.2002 : இது 39 நாட்கள் கொண்டது. பூரிஜெகன்னாத், கோனாரக், புவனேஸ்வர், கயா, புத்தகயா, சாரநாத், காசி, அலகாபாத், அயோத்தியா, ஹரித்துவார், ரிஷிகேஷ், டேராடூன், முசோரி, யமுனோத்ரி, கங்கோத்ரி, கேதார்நாத், பத்ரிநாத், நைனிடால், தேவப்ரயாகை, ஆக்ரா, மதுராபிருந்தாவன், ஜெய்ப்பூர், நியூடெல்லி, சிம்லா, குளு, மணாலி, மணிகரன், வைஷ்ணவி தேவி, அமிர்தசரஸ், குருக்ஷேத்திரம் - நபர் ஒருவருக்கு கட்டணம் **ரூ. 14,200/-**

2.6.2002 : இது 28 நாட்கள் கொண்டது. பூரிஜெகன்னாத், கோனாரக், புவனேஸ்வர், கயா, புத்தகயா, காசி, சாரநாத், அலகாபாத், அயோத்தியா, ஹரித்துவார், ரிஷிகேஷ், டேராடூன், முசோரி, யமுனோத்ரி, கங்கோத்ரி, கேதார்நாத், பத்ரிநாத், நைனிடால், தேவப்ரயாகை, ஆக்ரா, மதுராபிருந்தாவன், நியூடெல்லி - நபர் ஒருவருக்கு கட்டணம் **ரூ. 10,100/-**

2.6.2002 : இது 12 நாட்கள் கொண்டது. பூரிஜெகன்னாத், கோனாரக், புவனேஸ்வர், கயா, புத்தகயா, காசி, சாரநாத், அலகாபாத், அயோத்யா - நபர் ஒருவருக்கு கட்டணம் **ரூ. 4800/-**

10.6.2002 : இது 19 நாட்கள் கொண்டது. ஹரித்துவார், ரிஷிகேஷ், டேராடூன், முசோரி, யமுனோத்ரி, கங்கோத்ரி, கேதார்நாத், பத்ரிநாத், நைனிடால், தேவப்ரயாகை, ஆக்ரா, மதுராபிருந்தாவன், நியூடெல்லி - நபர் ஒருவருக்கு கட்டணம் **ரூ. 7650/-**

யாத்ரீகர்கள், இதில் எந்த தேதியில் எத்தனை நாட்கள் கொண்ட யாத்திரையில் கலந்து கொள்வீர்கள் என்பதை தெரியப்படுத்தினால் அதற்கான விவரங்களை அனுப்பி வைப்போம்.

ஆங்காங்கு தங்கும் அறைகள், ஊர் சுற்றிப் பார்க்க பஸ் கட்டணம், தூங்கும் வசதி கொண்ட இரண்டாம் வகுப்பு ரயில் கட்டணம், கைதேர்ந்த தென்னிந்திய பிராமணர்களைக் கொண்டு காலை காபி, டிபன், மதியம், இரவு உணவளிப்பதுடன் இங்கு குறிப்பிட்ட அனைத்துச் செலவுகளும் எங்களைச் சேர்ந்தவை.



மேலும் விபரங்களுக்கு :

ஸ்ரீ விஜயலட்சுமி டிராவல் சர்வீஸ்

புதிய நெ. 7, வெங்கடாசலச் செட்டித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005. போன் : 8440144

உரிமையாளர் : **S. ஜெயராமன்**

சமீபத்திய மிஸ் இந்தியா நேகாவாகட்டும், உள்ளூர் யுவதி ஆகட்டும், பெண்களுக்கு அழகிய தேவதை என்ற அந்தஸ்தை அளிப்பது, அழகிய, கரிய, ஆரோக்கியமான கூந்தல்.

விரிந்து பரந்த அழகு சாம்ராஜ்யத்தில் கூந்தல் தைலம் என்றாலே செம்பருத்திதான் முன் நிற்கிறது எப்போதும்.

அன்றலர்ந்த செம்பருத்தி மலர்கள் இருபத்தைந்து எடுத்து, மர





உலக்கையால் இடித்துச் சாறெடுக்கவும். அதற்குச் சம அளவு நல்லெண்ணெய்ச் சேர்த்துக் காய்ச்சவும். சிவப்பு நிறம் இறங்கி, தைலப் பதம் வந்ததும், வடிகட்டி ஆற விட்டு எடுத்து வைக்கவும். இந்தத் தைலத்தைக் கூந்தலுக்குப் பூசி வர, கூந்தல் கருமையாக, செழித்து வளரும். இளநரைக் கூட மாறிவிடும்.

தலையில் பொடுகு இருந்தால், தலைமுடி வேரோடு உதிரும். 'டிரை ஸ்கால்ப்' பிரச்னை இருந்தால், மண்டையைச் சொரிந்தாலே, வெள்ளையாகக் கொட்டும். கொஞ்சம் அசட்டையாக இருந்தால் அந்த இடத்தில் முடி கொட்டிப் போகும். ஒரு டீஸ்பூன் வால்மிளகு, ஒரு பிஞ்சு கடுக்காய், செம்பருத்தி பூக்கள் ஐந்து, வைத்து மையாக அரைத்துத் தலைக்குப் பூசி, மிருதுவாக மஸாஜ் செய்யவும். அரை மணி நேரம் ஊறியதும் குளிக்க, மண்டை மேல் ஓடு ஆரோக்கியமாகும். முடி கொட்டுவதும் நிற்கும்.

தண்ணீரைக் காய்ச்சிக் குடிப்பதுதான் சுகாதாரம். அன்றலர்ந்த செம்பருத்திப் பூவை, நீரிலிட்டுக் காய்ச்சி, அருந்தி வர, உடல் சூடு தணியும். கண் எரிச்சல் இருக்காது. குளுமை வேண்டினால் செம்பருத்திதான் உங்கள் சாய்ஸ்.

மருந்தாகும் செம்பருத்தி

மூலிகை தேவி 4

ராஜம் முரளி

செம்பருத்திப் பூக்களைச் சேகரித்து, நிழலிலிட்டு காயவிடவும். மொறுமொறு வெனக் காய்ந்ததும், மிக்ஸியிலிட்டு அரைத்துத் தூளாக்கிச் சலித்துக் கொள்ளவும். இந்தத் தூளை, ஒரு தம்ளர் பசும்பாலில் விட்டுக் காய்ச்சி, இரு வேளை அருந்தி வர, தாது புஷ்டி ஏற்படும். உடல் மினுமினுப்பு ஏறும். ஒரு டீ ஸ்பூன் செம்பருத்தித் தூளை, ஒரு தம்ளர் நீரில் சேர்த்து, அரைத் தம்ளராகச் சுண்டக் காய்ச்சி, தினமும் அருந்தினால், இருதயம் சம்பந்தப்பட்ட வியாதிகள் விலகிக் கொள்ளும்.

தாது விருத்திக்கு மட்டுமல்ல, ஆண்மையைப் பெருக்கவும் செம்பருத்திப் பொடியைப் பயன்படுத்தலாம். ஒரு தேக்கரண்டி செம்பருத்தித் தூள், ஒரு தேக்கரண்டி வெண் தாமரைக் கிழங்குப் பொடி இரண்டையும் சூடான பாலில் கலந்து தினமும் இரவில் அருந்தி வர விந்து பெருகும்.



செம்பருத்தித் தூள் அருமையான மலமிளக்கி. அதிகாலை எழுந்ததும் வெதுவெதுப்பான வெந்நீரில், ஒரு டீஸ்பூன் செம்பருத்தித் தூளைக் கலந்து குடிக்க, கழிவறையில் நீண்ட நேரம் தவமிருக்க வேண்டியதில்லை.

ஒரு தம்ளர் பசும்பாலில் ஒரு தேக்கரண்டி செம்பருத்தித் தூள், ஒரு தேக்கரண்டி தேன், அரை தேக்கரண்டி ஏல அரிசி, அரை தேக்கரண்டி ரோஜா இதழின் பொடி சேர்த்து நாற்பத்து எட்டு நாள் அருந்தி வர, மாதவிடாய்க் கோளாறுகள் குணமாகும். குறிப்பாக வெள்ளைப்படுதல், அதிக உதிரப் போக்கு போன்ற மகளிர் பிரச்னைகள் நீங்கும்.

கிராமப்புறத்தில் சிறுமிகள் பூப்படைந்ததும், செம்பருத்திப் பூவை, நெய்யில் வதக்கிச் சாப்பிடத் தருவார்கள். இதனால் அவர்களுடைய கருப்பை சம்பந்தப்பட்ட உறுப்புகள் பலம் பெறுவதோடு, நல்ல வளப்பும் பெற்று அழகோடு மிளர்வார்கள்.

நாள்பட்ட இருமலா? செம்பருத்தி வேரை உலர்த்திப் பொடி செய்து, கொள்ளவும். ஒரு தேக்கரண்டி செம்பருத்தி வேர் பொடியுடன் இரண்டு ஆடாதோடை இலைகளைச் சேர்த்து, குடி நீரில் காய்ச்சி, வடிகட்டி அருந்த, இருமல், சொல்லாமல் கொள்ளாமல் போகும்.

எதுவும் வேண்டாங்க! தோட்டம் பக்கம் போக நேரும்போதெல்லாம், ஒரு செம்பருத்திப் பூவையோ, மொட்டையோ பறித்து மென்று சாப்பிட்டு விடுங்கள். இரும்பு டானிக் சாப்பிட்ட அளவுக்குப் புஷ்டி கிடைக்கும்!

படங்கள் : ஸ்ரீஹரி



* துளிர் இரவுப் பள்ளியில்...



* பரமசிவம்



* கோர்த்துவாங்கும் கலையரசி



* திருமால்



* பட்டு இழைக்கும் சியாமாளா.

இரவு ஏழுமணி. ஒன்றிரண்டு கைத்தறிகளை மட்டும், வாழ்வின் ஜீவாதாரமாக நம்பியிருக்கும் ஏழை நெசவாளர்கள் நிறைந்த விநாயகபுரம் பகுதிக்குள் நுழைகிறோம். சின்னச்சின்னப் பூச் செண்டுகள் பிஞ்சுக்குரலில் சேர்ந்திசைப்பதுபோன்ற பாடல் ஒன்று காதுகளை எட்டுகிறது.

''குழந்தை இங்கே தெய்வமென்று பாட்டொன்று சொல்லுது!

என்னைப் போல எந்த தெய்வம் கூலிவேலை செய்யுது?''

– பொட்டில் அடித்த மாதிரியான கேள்வியைச் சுமந்து வந்த பல்லவியைக் கேட்டுக் கொண்டே படியேறுகிறோம். அது ஒரு வீட்டின் மொட்டை மாடி. இருபது இருபத்தைந்து சிறுவர் சிறுமியர் வட்டமாய் அமர்ந்து பாடிக் கொண்டிருக்கிறார்கள்.

"குருவி தலையிலே பனங்காயைப்
பாருங்க!
சித்தெறும்பு முதுகிலே பாறாங்கல்லைப்
பாருங்க!"

வேதனையும் வலியும் கலந்த தங்களின் நிலையை, அவர்களே உணர்ந்து பாடிக் கொண்டிருக்கிறார்கள். காஞ்சிபுரம் நகராட்சி எல்லைக்குள் மட்டும், கைத்தறிகளின் பட்டி ழைகள் ஊடே தங்களின் இளமையையும்,



பாரம் சுமக்கும் பட்டாம்பூச்சிகள்!

கல்வியையும் தொலைத்து விட்டு,
குழந்தைத் தொழிலாளர்களாய் வாழ்ந்து கொண்டிருக்கும் பத்தாயிரம் பேரில் இவர்கள் இருபத்தைந்து பேர். மாலை ஆறுமுப்பது மணிக்குத் தறிகளில் வேலை முடிந்த பிறகு இந்தச் சிட்டுக் குருவிகள் தேடிவரும் துளிர் இரவுப் பள்ளி இது.

1997 - ஏப்ரல் மாதம் அறிவொளி முடிந்த பிறகு, அங்கே பயின்று கொண்டிருந்த இந்தச் சிறார்களைத் தொடர்ந்து பயிலச் செய்ய, தமிழ்நாடு அறிவியல் இயக்கம் காஞ்சிபுரம் நகரில் நான்கு இரவுப் பள்ளிகளை நடத்தி வருகிறது. இன்னொரு பக்கம் நிலவொளிப் பள்ளிகளாக மாற்றப் பட்ட அறிவொளிப் பள்ளிகளும் இயங்குகின்றன. ஆனால் குழந்தைகள் ஆர்வமாகப் படிக்க வருவது இந்தத் துளிர் இரவுப் பள்ளிகளை நோக்கித்தான். காரணம் என்னவாக இருக்கும்? இந்தக் குழந்தைகளே சொல்கிறார்கள். "காலையிலேருந்து சாயந்தரம் வரைக்கும் வேலை செஞ்சிட்டு சோர்ந்து போய் வர்றோம். இங்கே வந்ததும் முதல்லே பாட்டு. அப்புறம் விளையாட்டு அதுக்குப் பிறகுதான் படிப்பு."


• பாவுபோடும் நித்யா




"எட்டு வயது முதல் பதினைந்து வயது வரையுள்ள சிறுவர்கள் இங்கே படிக்க வருகிறார்கள். வயது வரம்பு ஒரே மாதிரி இல்லாததால், ஓர் இரவுப் பள்ளிக்கு இரண்டு ஆசிரியர்கள். எழுத்தறிவு, எண் அறிவு என்று ஆரம்பித்து அதன் பிறகே பாடங்களைச் சொல்லித் தருகிறோம். பிறகு எட்டாம் வகுப்பு, பத்தாம் வகுப்பு அரசுத் தேர்வு எழுத வயதின் அடிப்படையில் பயிற்சி கொடுத்து, தேர்வு எழுதவும் ஏற்பாடு செய்கிறோம்" என்கிறார் கலைச் செல்வி வெங்கடேசன். அறிவொளி இயக்கத்தில் 1995 முதல் தன்னார்வத் தொண்டர்களைச் பயிற்றுவித்த முதன்மை பயிற்றுனர். அறிவொளி சாதனையாளர் விருதும் பெற்றுள்ள இவர், துளிர் இரவுப் பள்ளிகளை ஒருங்கிணைத்து நடத்தி வருகிறார்.


• கலைச்செல்வி


• துளிர் இரவுப் பள்ளியில்...

"குழந்தை நடை பழகும் பருவத்திலேயே தொழில் பழக்கப் படுத்தப்படுகிறது. பட்டு இழைத்தல், பாவு போடுதல், தறியில் கோத்து வாங்குதல், சாயத் தொட்டிக்குத் தண்ணீர் சுமந்து வருதல் என்று பத்திற்கும் அதிகமான வேலைகளை வயதுக்கு ஏற்றார் போல இந்தப் பிஞ்சுக் கரங்கள்தான் செய்கின்றன. தறிக்காகவே



குழந்தைகளைப் பெற்றுக் கொள்கிற குடும்பங்கள் இங்கே நிறைய உண்டு" ஆண் பிள்ளைகளைக் காட்டிலும், அடித்தாலும் வாங்கிக் கொண்டு வேலை செய்வது பெண் பிள்ளைகள்தான் என்பதால் தறிகளில் பெண் குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகம் என்கிறார் கலைச் செல்வி.

குழந்தைகள் தறிகளில் 'அடிமை'த் தொழிலாளர்களாக இருப்பது உண்மைதானா? என்பது பற்றிச் சொல்கிறார் காஞ்சி பச்சையப்பன் ஆடவர் கல்லூரியின் தாவரவியல் பேராசிரியர் டாக்டர் பி. பரமசிவம்.

''பாண்டெட், கொத்தடிமை என்ற வார்த்தைகள் இங்கே பயன்படுத்தப்படுவதில்லை. என்றாலும், ஒருதறியில் குழந்தையை விட்டுவிட்டு, பெற்றோர் ஒரு குறிப்பிட்ட தொகையைப் பெற்றுக் கொண்டு செல்கிறார்கள். குழந்தையின் சம்பளத்திலிருந்து இத்தொகையை மாதா மாதம் கழித்துக் கொள்கிறார்கள். இந்த வேலைகளுக்குப் பெரியவர்களை அமர்த்தினால் அதிகமான கூலி கொடுக்க வேண்டியிருக்கிறது. தவிர வீட்டில் தறி வைத்திருந்தால், கூலி கொடுத்து ஆட்களை வைத்துக் கொள்ள முடியாது என்பதால் தங்கள் சொந்தக் குழந்தைகளையே தறிக்குப் பயன்படுத்துகிறார்கள். இதனால் பாதிக்கப்படுவது குழந்தைகளின் படிப்பும், இளமைக்கால சந்தோஷமும்தான். இதைக் கருத்தில் கொண்டே துளிர் இரவுப் பள்ளிகளைத் தொடங்கினோம். பள்ளி நடத்துகிற இடம், மின்சாரம், புத்தகங்கள், நோட்டு இதர செலவினங்கள் எல்லாவற்றையும் கொடையுள்ளம் கொண்டவர்களின் உதவி மூலம் நடத்தி வருகிறோம். இப்பள்ளிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க மாநில அரசை அணுக திட்டமிட்டிருக்கிறோம்'' என்கிறார்.

பள்ளிக் கூடத்தைத் துறந்து பன்னிரண்டு வயதில் தறிவேலைக்கு வந்துவிட்ட இருபத்து இரண்டு வயது திருமால், இப்போது மடந்தோட்டம் இரவுப் பள்ளியின் ஒருங்கிணைப்பாளர். இவர் என்ன சொல்கிறார்?

''சாயங்காலம் எனக்குத் தறிவேலை முடிஞ்ச பிறகு துளிர் இரவுப் பள்ளிக்கு மற்ற பிள்ளைகளையும் அழைத்து வந்துவிடுவேன். காலை ஏழு மணிக்குத் தொடங்கும் வேலை, மாலை ஏழுமணிக்குத்தான் முடியும். அதிலும் மார்கழி மாசம் முழுக்க, பொங்கல் வேலைகள் நடக்கும். அதனால் இந்த ஒரு மாசமும் இரவுப் பள்ளி கிடையாது. அடுத்த வருடம் எஸ்.எஸ்.எல்.சி. எழுதி பாஸ் பண்ணிட்டு, நானும் இரவுப் பள்ளி ஆசிரியராக பல பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்கணும் என்று இலட்சியம் வைத்திருக்கிறேன்" என்கிறார்.

காஞ்சிபுரம் கைத்தறி குழந்தைத் தொழிலாளர்களோடு, பிராண்டெட் அப்பளக் கம்பெனிகளுக்கு வேலை செய்யும் குழந்தைத் தொழிலாளர்களும் இப்போது இங்கு அதிகரித்து விட்டார்கள். காரணம் தறிகளில் மாதச் சம்பளம் 150 முதல் 300 ரூபாய் என்றால் அப்பளக் கம்பெனிகளில் 450 ரூபாய். தறிகளுக்குப் பட்டுநூல் கொடுப்பது போலவே, கம்பெனிகளில் இருந்து அப்பள மாவு வாங்கி வந்து பிசைந்து, அப்பளம், மற்றும் அப்பளப்பூக்களாக மாற்றி, அதை எண்ணிக் கொடுப்பது வரை எல்லாம் குழந்தைகள்தான்.

குழந்தைத் தொழிலாளர்களை வம்படியாக ஒழித்துவிட்டு மறுவேலை பார்க்கிறேன் என்று இறங்குவதைவிட, அவர்களின் வேலை நேரத்தை ஒழுங்குபடுத்தி, அவர்களுக்கு ஆக்கபூர்வமான கல்வி வழங்கும் துளிர் இரவுப் பள்ளிகள், நிலவொளிப் பள்ளிகளின் எண்ணிக்கையை அதிகரித்து, அவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்கினால், இந்த மாவட்டத்தில் இருக்கும் குழந்தைத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடியும்!



நாட்பட்ட எக்ஸிமா, சொரியாஸிஸ், வெண்சர்ம நோய், கடி, தோல்புற்றுநோய் - போன்றவைகளுக்கு தெய்வீக மூலிகை மருத்துவத்தின் அற்புதம்!



எங்களின பல் வருட அனுபவத்தின் பயனாக, உடலில் நோய் எதிர்ப்பு சக்தி குறைவால் சில வகை பொருட்களை உட்கொள்வதாலோ (அ) உபயோகப்படுத்துவதாலோ ஏற்படும் ஒவ்வாமையினால் தோலில் சிறிய கொப்புளங்கள் தோன்றுதல், அரிப்பு, கொப்புளங்களில் இருந்து நீர் வடிதல், தோல் சிவந்து இருத்தல், தடிப்புடன் காணப்படுதல் போன்ற எக்ஸிமா தோல் நோய்க்கும், செதில் செதில்க காணப்படும் தோல், கால் பாதங்களில் வெடிப்பு தோலின் மேல் பகுதி வறட்சியாக காணப்படுதல் கொப்புளங்களை கிள்ளினால் ரத்தம் வருதல், தோல் சிவந்து காணப்படுதல், கை, கால், இடுப்பு, கழுத்து போன்ற இடங்களில் உள்ள மூட்டுகளில் வலி ஏற்படுதல், உடலின் மடிப்பு பகுதிகளில் அரிப்பு கொப்புளங்கள் தோன்றுதல் போன்ற அறிகுறிகள் கொண்ட சொரியாஸிஸ் என்கின்ற தோல் நோய்க்கும், உதடு, கை விரல்களின் நுனி, முகம், நெற்றி, முன்கை, உடலின் நடுபகுதி, இன பெருக்க உறுப்புகள் போன்ற பகுதிகளில் வெண்புள்ளிகள் தோன்றுதல், மேலும் உடல் முழுவதும், வெண்படையாக மாறும் வெண்குஷ்டத்திற்கும், தோல்புற்று நோய் மற்றும் குஷ்டத்திற்கும் எவ்வித பின் விளைவுகளும் இல்லாத தெய்வீக மூலிகைகளான வேப்பிலை, வில்வம் துளசி, அத்தி, அருகம்புல், கடுக்காய், பூவரசன், குப்பைபேனி, தும்பை அவுரி, பறங்கிப்பட்டை, நெல்லி, ஆவாரம்பூ, செம்பருத்தி போன்ற மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட மருந்துகள் மற்றும் மேல் பூச்சு மருந்துகள் மூலமும், எல்லோராலும் எளிதில் பின்பற்றக் கூடிய உணவு முறை மாற்றத்தாலும் & எளிய உடற்பயிற்சியாலும் விரைவான பலன் பெற ஆலோசனைகளும் & சிகிச்சைகளும் பெறலாம்.

மற்றும் ஆஸ்த்துமா, சர்க்கரை வியாதி, இதய நோய், சிறுநீரகக் கோளாறு, புற்றுநோய், அல்சர், ஆண்மைக் குறைவு, மூட்டுவலி, குழந்தையில்லா குறை போன்ற நோய்களுக்கும் ஆலோசனை பெற தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :



தெய்வீக மூலிகை வைத்தியர்கள்

தலைமை முகவரி : Dr.M.குருபரன் & Dr.M.சபாபதி, Dr.M.சிவசக்தி, S/o Dr.C.K.மாணிக்கவாசகம்
P.B.No.30, No.3, திருநாத முதலி நகர், (காலேஜ் எதிரில்), திருப்பத்தூர், வேலூர் Dt.- 635 601 ✆ 04179-20469, 22769
சென்னை கிளை : 115, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, (பிரின்ஸ் மேனர் பக்கத்தில்) கெல்லீஸ், சென்னை - 10
இரு முகவரிகளின் ஆலோசனை நேரம் தினமும் காலை 10 to 1, மாலை 5 to 7 ✆ 6424285, 6427638

ஒவ்வொரு மாதமும் வெளியூர்களில் டாக்டரை நேரில் சந்திக்க

வேலூர் 2ந் தேதி - 12 pm to 2 pm (N.S.R.லாட்ஜ்) 26/A, ஆரணி ரோடு, (கண் ஆஸ்பத்திரி அருகில்) ✆ : 0416 - 213159	**காஞ்சிபுரம்** 2ந் தேதி - 5 pm to 6 pm ராஜம் லாட்ஜ், (பஸ் நிலையம் அருகில்) காமராஜர் தெரு. ✆ : 04112 - 22519	**கடலூர்** (S.A.DL) 4ந் தேதி - 9 am to 11 am ஆர்காடு உட்லண்ட்ஸ் ஹோட்டல், ✆ : 04142 - 30707, 30717	**விழுப்புரம்** 4ந் தேதி - 2 pm to 3 pm ஹோட்டல் ஆனந்தா, பஸ் நிலையம் எதிரில், ✆ : 04146 - 22962, 24960	**திருவண்ணாமலை** 4ந் தேதி - 5 pm to 6 pm ராஜா லாட்ஜ், (பஸ் நிலையம் எதிரில்) ✆ : 04175 - 22536
மும்பை 7 & 8ந் தேதி - 10 am to 8 pm The South Indian Concerns Ltd., 401, Telang Road, Matunga (CR), ✆ : 022 - 4011589	**பெங்களூர்** 9ந் தேதி - 11 am to 1 pm ஹோட்டல் பிராட்வே, (கல்பனா தியேட்டர் அருகில்) கெம்பகவுடா ரோடு. ✆ : 080-2266374,2873013	**ஒசூர்** 9ந் தேதி - 4 pm to 5 pm சீனிவாசா லாட்ஜ், பாகலூர் ரோட், ✆ : 04344 - 42899, 43321	**சேலம்** 12ந் தேதி - 11 am to 1 pm ஹோட்டல் செல்வம், புதிய பஸ் நிலையம் எதிரில், ✆ : 0427 - 449333, 449332	**ஈரோடு** 12ந் தேதி - 4 pm to 6 pm ஹோட்டல் ஆக்ஸ்போர்ட், பஸ் நிலையம் எதிரில், ✆ : 0424 - 226611/12/13/14
கோயம்புத்தூர் 13ந் தேதி - 9 am to 1 pm சேரன் பேலஸ் லாட்ஜ் (சாந்தி தியேட்டர் பின்புறம்) ✆ : 0422 - 302211, 302220	**மதுரை** 14ந் தேதி - 9 am to 11 am ஹோட்டல் கிரண்ட் சென்ட்ரல், மேலப் பெருமாள் மேஸ்திரி தெரு. ✆ : 0452 - 743941	**தஞ்சாவூர்** 14ந் தேதி - 5 pm to 7 pm அசோகா லாட்ஜ், தஞ்சாவூர். ✆ : 04362 - 30021, 30022	**திருச்சி** 15ந் தேதி - 9 am to 11 am ஹோட்டல் ஆனந்த், (சென்ட்ரல் பஸ் நிலையம் அருகில்) ✆ : 0431 - 415545	**நாமக்கல்** 15ந் தேதி - 2 pm to 4 pm ஹோட்டல் தேவி அன்னபூர்ணா, நாமக்கல். ✆ : 04286 - 20433, 21336
நியூடெல்லி 18 & 19ந் தேதி - 10 am to 8 pm South Indian Hotel, 10211, Padam Singh Road, Ajmal Khan Road, Karol Bagh. ✆ : 011-5717126,5723651	**தர்மபுரி** 22ந் தேதி - 8 am to 10 am ஸ்ரீ மாதேஸ்வரா லாட்ஜ், 103, அதியமான் கோட்டை ரோடு. ✆ : 04342 - 60226, 61472	**திருப்பூர்** 22ந் தேதி - 2 pm to 3 pm ராமகிருஷ்ணா லாட்ஜ், ஈஸ்வரன் கோவில் தெரு. ✆ : 0421 - 740418	**உடுமலைப்பேட்டை** 22ந் தேதி - 6 pm to 7 pm ஹோட்டல் குறிஞ்சி, (பஸ் நிலையம் எதிரில்) ✆ : 04252 - 24353	**திண்டுக்கல்** 23ந் தேதி - 9 am to 11 am ஹோட்டல் குறிஞ்சி, பஸ் நிலையம் பின்புறம். ✆ : 0451 - 421056, 427017
தூத்துக்குடி 23ந் தேதி - 5 pm to 6 pm ஹோட்டல் ஆல்வின், தேவர்புரம் ரோடு, ✆ : 0461 - 327780	**திருநெல்வேலி** 24ந் தேதி - 8 am to 11 am ஹோட்டல் ஸ்ரீ சித்தார்த், மதுரை ரோடு, ✆ : 0462 - 333312	**நாகர்கோவில்** 24ந் தேதி - 2 pm to 3 pm ஹோட்டல் சரண்யா, மீனாட்சிபுரம் ✆ : 04652 - 36078	**விருதுநகர்** 25ந் தேதி - 8 am to 10 am அண்டன் லாட்ஜ், மதுரை ரோடு, ✆ : 04562 - 45537	**கரூர்** 25ந் தேதி - 2 pm to 4 pm அரசி லாட்ஜ், ஜவகர் பஜார் ✆ : 04324 - 63763, 62663

தகவல் : SUN, RAJ, VIJAY, DD T.V. களில் எமது பேட்டியை காணத் தவறியவர்கள், டாக்டரின் மூலிகைகள் பற்றிய 27 வருட அனுபவ ஆராய்ச்சிகள் அடங்கிய **"எளிய முறையில் பிணி அகற்றும் தெய்வீக மூலிகைகள்"** இயற்கை உணவுகளின் பெருமைகள், அதிசய உண்மைகள் அடங்கிய **"என்றும் இளமை காக்கும் இயற்கை உணவுகள்"** என்ற இரு புத்தகத்தையும் பதிவுத் தபாலில் பெற ரூ.130/- மேற்கண்ட முகவரிக்கு D.D. அல்லது M.O. அனுப்பவும்.

ஹால்டர்

1

மினி தொடர்

ம.வே. சிவகுமார்



வீட்டிற்குள் இருந்தால் வெளியே என்ன ஊர் என்றே தெரியாது. கண்களை மூடிக் கொண்டால் எந்த ஊரிலும் இருக்கலாம். சில்லென்ற குளிருக்கு இது பெங்களூராய் இருக்கலாம். ஹைதராபாத் மலைச் சரிவில் பண்ணை வீடு என்று நினைத்துக் கொண்டால் இது அதுதான். வாசல் தெளிக்கும் சாணி வாசனை ஊருக்கு ஊர் மாறுமா என்ன? அதனால் இது திருவிடைமருதூராகவும் இருக்கலாம். சியாமளா கண்களை மூடிக் கொண்டாள். திருவிடைமருதூர் வீட்டுப் புழக்கடை கண்ணில் தெரிந்தது. கிணற்றடியில் அம்மா அவளிடம் ஒரு புகைப்படத்தை நீட்டுகிறாள். இந்தப் பையன்தான் சாயங்காலம் அவளைப் பெண் பார்க்க வரப் போகிறான்.

மத்தியானம் பூராவும் காற்றில் ஏற்றிய தீபம் மாதிரி மனசு நலுங்கியது. புழங்கிய இடத்தை விட்டுப் போக வேண்டும். ஹலோ. இவன்தான் உன் புருஷன். நீ கட்டிக் காத்ததை களவாடப் போகிறவன். வலது கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொள். இது அவன் அப்பா, அம்மா. எதிர்காலத்தில் நீயும் அப்படித்தான் நினைக்க வேண்டும். இனி அவன் வீடு தான் உன் வீடு. உன் புடைவை நுனியை அவன் வேட்டியில் முடிந்திருக்கிறோம். ஞாபகம் இருக்கட்டும். இந்தா வெள்ளியில் கூஜா. இதைத் தூக்கிக் கொண்டு அவன் பின்னாலேயே போ. ராமர் இருக்கிற இடம் சீதைக்கு அயோத்தி. இனி இவன் இருக்கிற ஊர்தான் உனக்கு திருவிடைமருதூர்.

சியாமளா குளியலறையில் கதகதப்பான இடத்திலிருந்து புகைப்படத்தை வெளியே எடுத்தாள். ஃபோட்டோவில் நாராயணன் குறும்பாய்ச் சிரித்தான். பளிச்சென்ற அவன் முகத்தைப் பார்த்ததுமே பிடித்து விட்டது.

"என்னடா சிவில் என்ஜினீயர்?"

சியாமளா, ஃபோட்டோவுடன் பேச்சு கொடுத்தாள்.

"ஜபல்பூர்லே வேலை பார்க்கிறியாமே? பெரிய ஆள்தான். உனக்குத் தெரியுமா? நான் இந்த திருவிடைமருதூர் தாண்டி ஒத்தை ஊர் போனது கிடையாது. ஆனா கண்ணை மூடிண்டா நான் நிறைய ஊருக்குப் போவேன். எனக்கு கல்பனா சக்தி ஜாஸ்தி. என் ஆசையிலே பாதி உசரத்துக்கு வந்தாலே நீ நல்ல புருஷன். உன்னை நம்பித்தான் எல்லாத்தையும் விட்டுட்டு இந்த கூஜா உன் பின்னாலே வரப்போறது. வெள்ளி கூஜா. கவனமாய்ப் பார்த்துக் கொள். இந்த திருவிடைமருதூர் அமைதியை நீ ஜபல்பூரில் காட்டினால் நாம் ஜெயித்து விட்டோம். சாதித்துக் காட்டுவாயா?

புகைப்படத்தில் நாராயணன் மையமாய்ச் சிரித்தான்.

மத்தியானம் பூராவும் அவளை அலங்காரம் செய்தார்கள். அத்தை, மாமியென்று சொந்தக்காரர்கள் பூராவும் செய்தி கேட்டு வந்து இறங்கியதில் வீடே களைகட்டி விட்டது. சித்தி பையன் கோண்டு எல்லோர் முன்னாலும் கண்டபடி கிண்டல் செய்து மானத்தை வாங்கி விட்டான். சியாமளாவுக்கு எல்லாமும் வேண்டியிருந்தது. வீடு நெடுக கோலம் போட்டார்கள். சமையலறையில் நெய் மணத்தது. நான்கு மணிக்கெல்லாம் அப்பா வீட்டை அடையாளம் காட்ட தெரு முனையில் போய் நின்று கொண்டார். சற்றைக்கெல்லாம் வாசலில் முனீஸ்வரன் டிராவல்ஸ் என்று பெரியதாய் எழுதிய வெள்ளை அம்பாஸிடர் கார் வந்து நின்றது.

"வாங்கோ சார்" மூச்சிரைக்க அப்பா எதிர்த்திசையில் ஓடி வந்தார்.

"வாங்கோ வாங்கோ."

ஜன்னலில் சியாமளாவுக்குச் சிரிப்பு வந்து விட்டது. அப்பா தற்காலிகமாக தன் கம்பீரத்தை இழந்து கோமாளியாகி விட்டார். பிள்ளையின் அப்பா வண்டியிலிருந்து இறங்கினதும் சுற்றுப் புறத்தை ஒருதரம் கண்களால் அளந்தார். நல்லவேளையாய் மாமி சிரித்த முகமாய் இருந்தாள். கூடத்தில் வந்து இறங்கிய ஆரம்ப இறுக்கத்தை, கலகலப்பாய்ப் பேசி உடைத்ததும் அவள்தான். தன் கையாலேயே சியாமளாவுக்கு மேலும் ஒரு சரம் பூ வைத்து விட்டாள். நாராயணனின் கண்கள் வீட்டின் வயதுப் பெண்கள் மீது அலைபாய்ந்த மாதிரியிருந்தது. ஒரு வேளை குறிப்பாய் அவளைப் பார்க்கிறான் என்று மற்றவர்கள் நினைக்க வேண்டாமேயென்று அவன் அப்படிச் செய்திருக்கலாம். அப்புறம் என்ன? பையனுக்கும் பெண்ணைப் பிடித்து விட்டது. பெண்ணுக்கும் பையனைப் பிடித்து விட்டது. லௌகிகமாய் எதுவும் பேச வேண்டாம். உங்களுக்கும் ஒற்றைப் பெண். உங்கள் ஆசைக்கு நிறைவாகவே செய்வீர்கள். நல்ல நேரத்தில் வலது கால் வைத்து நம் வீட்டில் அவள் விளக்கு ஏற்ற வேண்டும். அதுதான் வேண்டியது.

"கெட்டிமேளம் கெட்டி மேளம்."

கூட்டத்தில் ஒரு கை உயரே அசைந்தது. தவில் சப்தம் காதைப் பிளக்க, சியாமளாவின் கழுத்தில் நாராயணன் திருமாங்கல்யத்தைக் கட்டினான். அவள் இன்னொரு வீட்டின் மருமகளானாள். சம்பந்திகள் கைகுலுக்கினார்கள். நாதஸ்வரம் ஆனந்தம் பாடியது.

ஒரு மாதம் ஓடிப் போனதே தெரிய

வில்லை. புது வீடு. புதிய மனிதர்கள். புது உணர்வுகள். புத்தம் புது ஸ்பரிஸம். வெவ்வேறு வீடுகளில் தம்பதியர் விருந்து. ஆடிக்கு வெள்ளியில் டம்ப்ளர் தந்து மறுவீடு. எத்தனையோ வருஷத்துப் புதிர்கள் விடுபட்டுப் போயின. கைக்கெட்டும் இட்டத்தில் நாராயணன் படுத்திருந்தான். சிவந்த முதுகில் விரித்த பாயின் தடம் வரிவரியாய்ப் பதிந்திருந்தது. சியாமளா புடைவை நுனியைத் திரித்து நாராயணன் காதுகளில் குறுகுறுக்க வைத்தாள். அவன் விலுக்கென்று வேகமாய்த் திரும்பியதில் நிலைகுலைந்து அவன் மார்பில் விழுந்தாள்.

"என்ன?"

"ஊருக்குப் போகணுமே."

"ம்."

"டிக்கெட்டு?"

"வாங்கியாச்சு."

"நெஜமாவா?"

"சத்தியமா."

அவன் சிரித்துக் கொண்டே பர்ஸிலிருந்து ஒரு டிக்கெட்டை எடுத்துக் காட்டினான்.

"ஒண்ணுதானே இருக்கு?"

"ஆமாம்."

"எனக்கு டிக்கெட்டு?"

"எதுக்கு? நீ இங்கே தானே இருக்கப் போறே."

சியாமளாவுக்குத் தூக்கி வாறிப் போட்டது.

"என்ன சொல்றேள்?"

"நான் மட்டும்தான் ஜபல்பூருக்கு போகப் போகிறேன்."

"ஏன்?"

"அது ஒரு ஊரா? அங்கே மனுஷா இருக்க முடியாது. அதுவும் உனக்கு ஹிந்தி வேறே தெரியாது. நான் இந்தப் பக்கம் மாத்தலுக்கு எழுதிக் கொடுத்திருக்கேன். எந்த நிமிஷமும் வந்துடும்."

"அது வரைக்கும்?"

"கும்பகோணத்துலே கூடவே இருந்து என் அப்பா, அம்மாவைப் பார்த்துக்க வேண்டியது."

சிரித்துக் கொண்டே நாராயணன் தனியே புறப்பட்டு ஜபல்பூர் போய்விட்டான்.

கும்பகோணத்தில் ஒரு மாறுதலாய் மாமியார் நல்லவளாய் இருந்தாள். மாமனார் அப்பிராணி. இரண்டு பேரும் அவளிடம் பிரியமாய் இருந்தார்கள். மாமி புதியதாய் நான்கு கீர்த்தனைகள் கற்றுக் கொடுத்தாள். பாரம்பரிய சிற்றுண்டி வகைகளைச் செய்வதற்கு கற்பித்தாள். நாராயணன் ஜபல்பூரிலிருந்து இரண்டு நாட்களுக்கு ஒரு கடிதம் வீதம் எழுதித் தள்ளினான். அவ்வப்போது ஒரு வார விடுமுறையில் அவன் வந்து போனதில் சியாமளா கர்ப்பவதியானாள். காலா காலத்தில் வளைகாப்பு, சீமந்தம் முடிந்தது. அப்பாவும், அம்மாவும் கார் வைத்து அவளை திருவிடைமருதூர் அழைத்துப் போனார்கள். டாக்டர் சொன்ன தேதிக்கு பத்து நாள் முன்னதாகவே ஜில்லு பிறந்து விட்டான். அப்பாவைப் போலவே சரியான அவசரக்குடுக்கை.

பெயர் வைக்கிற வைபவத்துக்கு கும்பகோணத்திலிருந்து அவன் அப்பாவும், அம்மாவும் வந்திருந்தார்கள். நாராயணன் டாண் என்று அன்று காலையில் வந்து இறங்கினான். அசடு வழிய அடிக்கடி அவள் அறைக்கு அவன் வந்து போனதில் காவலுக்கு அங்கே ஒரு பாட்டியை அமர்த்தினார்கள்.

"இங்கே பாத்தியா?"

"என்ன?"



"ஜில்லுவுக்கு ஒரு பவுன்லே செயின்."

"ஹை!"

"சீட்டுலே ஜெயிச்சது."

"அப்படின்னா?"

"சீட்டு...சீட்டு."

நாராயணன் சீட்டுக் கட்டைப் பிரித்து டேபிளில் நான்கு பேருக்குப் பாவனையில் போட்டுக் காட்டினான்.

"நீங்க சீட்டாடுவேளா?"

"பேஷா. எப்படி இருக்குச் செயின்?"

"இந்தச் செயின் என் குழந்தைக்கு வேணாம்."

அறை மூலையில் செயினை வீசி, சியாமளா தீர்மானமாய்ச் சொன்னாள்.

கும்பகோணத்துக்காரர்கள் போனவர்கள் போனவர்கள்தான். ஜபல்பூரிலிருந்து கடிதம் வருவதும் நின்று விட்டது. குழந்தையுடன் அவளை அழைத்துப் போவது பற்றி

அவ்விடத்தில் யாருமே யோசிக்கவில்லை. அப்பாவும், அம்மாவும் ஆடிப் போய் விட்டார்கள். மாதங்கள் உருண்டு சீக்கிரமே ஜில்லு தவழ்ந்து படி தாண்டினான். அதை விசேஷமாய்க் கொண்டாட முடிவு செய்து கும்பகோணத்தில் நேரில் அழைக்க, சியாமளாவின் பெற்றோர்கள் புறப்பட்டுப் போனார்கள். தனிமையில் கழிவிரக்கம் கொப்பளிக்க நாராயணனுக்குச் சியாமளா ஒரு கடிதம் எழுதினாள். பதிலாக நாராயணனே அவளை அழைத்துப் போக நேரில் வந்து விட்டான்.

ஜில்லுவை நிலைக் கதவில் உட்கார வைத்தார்கள். சிறிய சந்தனப் பொட்டில் அவன் கிருஷ்ணரைப் போல் வாயில் கை வைத்துச்

> ''இவ்வளவு நான் காதலிச்சு என்ன பயன்? என்னை மூணாவது மனுசனா நினைச்சுட்டியே?''
> ''என்ன சொல்றீங்க?''
> ''உனக்குக் கல்யாணம் நிச்சயமாயிடுச்சுனு சுண்டல்காரன் சொல்றான்!''
> — அம்பை தேவா

சிரித்தான். அவன் விழுங்கி விடக் கூடாதே யென்று மோதிரத்தை வளையலுடன் சிறு சங்கிலியில் சேர்த்திருந்தார்கள். கழுத்தில் மாலை விழுந்தபோது ஜில்லு பால் பல் தெரிய சிரித்தான். அம்மிணி கொழுக்கட்டை, கொத்துக் கடலை, சில்லரை காசுகள் சேர்ந்த பாத்திரத்தை ஜில்லுவின் தலையில் கவிழ்த்தார்கள். குழந்தை முதலில் திடுக்கிட்டு விட்டான். சற்று நிதானித்து தரையில் கிடந்த கொழுக்கட்டையை விட்டு விட்டு ஜில்லு குனிந்து காசை எடுத்தபோது கும்பல் சந்தோஷமாய் ஆரவாரித்தது. பலே. அப்பனைப் போலவே பிள்ளையும் மஹா காரியக்காரன்தான்.

ஜபல்பூர் புறப்பட்ட போது ரயிலில் சியாமளாவைத் தனியே தவிக்க விட்டு நாராயணன் வேறு பெட்டியில் ஜமா சேர்ந்து சீட்டாடப் போய் விட்டான். நல்ல வேளையாய் வேளா வேளைக்குச் சாப்பிட பொட்டலங்களும், ஜில்லுவுக்குப் பால் பவுடரும் இருந்தது. ஆனால் பாலைக் கலக்க சூடான வெந்நீர் வேண்டி அவள் ஓர் இளைஞனை அடிக்கடிக் கெஞ்சும்படி இருந்தது. ராஜ்கோட்டில் வண்டி மாறிய போது எதிர்காலத்தை நினைக்கவே பயமாய் இருந்தது.

சியாமளா கண்களை மூடிக் கொண்டு ஜபல்பூருக்கு முன்னாலேயே வந்திருக்கிறாள். உண்மையில் ஜபல்பூர் வேறு மாதிரி இருந்தது. ஒரு ஊர் பூராவுமே காக்ரே, பூக்ரேயென்று புரியாத பாஷையில் பேசுகிற விஷயத்தை அவளால் முன்னதாக உருவகிக்க முடியவில்லை. இப்போதோ காய்கறிக்காரன் முதற்கொண்டு எல்லோரிடமும் தெரியாத பாஷையில் மல்லுகட்ட வேண்டியிருந்தது. ஆனால் களத்தில் இறங்கியதுமே சியாமளா சற்றும் அசரவில்லை. மந்திர் என்றால் கோவில். பந்தர் என்றால் குரங்கு. பேட்டா பேட்டி. லடுக்கா...லடுக்கி. சீக்கிரமே ஹிந்தி பழகிவிட்டது. நாம் அப்பா, அம்மா என்று சொல்கிறோம். அவர்கள் எல்லாவற்றுக்கும் ஒரு ஜியை சேர்த்துக் கொள்கிறார்கள். மாதாஜி, பிதாஜி, சப்ஜி.

சீட்டாடுகிற வழக்கம் ஒன்றைத் தவிர நாராயணன் நல்லவனாய்த் தான் இருந்தான். சம்பளத்தை விள்ளாமல் விரியாமல் அவளிடம் கொடுத்தான். உத்தியோகத்தில் வருகிற மேல் வரும்படியில் தான் அவன் சீட்டாடுகிறான். கெட்டப் பழக்கம் எதுவும் இல்லாத ஆண்கள் எங்கே இருக்கிறார்கள்? நீ தான் அவனிடம் ஆசையாய் பேசி கவனத்தை மாற்ற வேண்டும். லலிதா சஹஸ்ரநாமம் விடாமல் படி. மற்றவை பகவான் கையில். குழந்தைக்கு எங்கள் ஆசீர்வாதம். தனிமையில் அம்மாவின் கடிதத்தை மேலும் ஒருமுறை படித்து சியாமளா சரமாக்குவாள்.

ஜபல்பூரில் மழை ஆரம்பித்து விட்டது. சனிக்கிழமையில் துவங்கும் மழை இலேசில் ஓயாது. முகத்தை மூடிய முக்காட்டை இழுத்துவிட்டு, பக்கத்து வீட்டு மார்வாரிப் பெண் சொன்னாள். எதிர் வீட்டில் அவள் வயதிலேயே இன்னும் கல்யாணமாகாமல் சுமன் என்ற பெண் இருந்தாள். அனைவரிடமும் அவள் பிராபல்யம் ஆக ஜில்லு தான் காரணம் என்று சொல்ல வேண்டும். கறுப்பு அரையணாக் கயிறில் இரும்பிய நாய்க்காசு தான் அவன் அடையாளம். பொதுக் பொதுக் என்று ஓடி வருவான். பெண்கள் யாருடைய இடுப்பிலும் அமைதியாய் இருப்பான். வாயில் ஜொள்ளு ஒழுகும். பார்ப்பவர்கள் கிள்ளியதில் கன்னமிரண்டும் சிவந்திருக்கும். நாவற்பழங்களைப் போல் கண்கள் பிரகாசிக்கும். கள்ளமில்லா அந்தச் சிரிப்பில் மயங்கி வாரியணைத்து முத்தமிடாத பெண்களே இல்லை.

ஜபல்பூரில் அத்தனை தனிமையிலும் சியாமளாவுக்கு ஜில்லுதான் ஆறுதலாய் இருந்தான். சாண் பிள்ளையானாலும் ஆண் பிள்ளை. நாராயணன் குறித்து மனம் யோசனையில் ஆழும்போதெல்லாம் ஜில்லு அவள் கன்னத்தை இழுத்து கவனத்தை திசை திருப்புவான்! வாலை ஆட்டி மேலே பாய்ந்து புரள்கிற நாய்க்குட்டி போல பரபரப்பாய் அவளிடம் கொஞ்சுவான். உடம்பில் துணி

உறுத்துவதே அவனுக்குப் பிடிக்காது. அப்படியே நங்காவாய் வாயில் விரல்போட்டு அவள் வயிற்றின் மேல் கவிழ்ந்து படுத்துக் கொள்வான். சியாமளா விளையாட்டாய் வேக வேகமாய் மூச்சு விட்டு அவனைக் குலுங்கச் செய்வாள். ஜில்லு சிரித்துக் கொண்டே கண்கள் சொக்கி, தூங்கி விடுவான்.

சியாமளா அலுங்காமல் ஜில்லுவை கட்டிலில் இறக்கினாள். வீட்டில் சர்க்கரை இல்லை. வெளியே மழை விட்டு விட்டுப் பெய்தது. வேறு அறையில் நாராயணன் சீட்டாட்டம் விடிய விடிய தொடர்ந்தது. கூட ஆடுகிற நுழை நரிகளை வாசலில் சொக்காய்ப் பிடித்து உலுக்க வேண்டும் என்று சியாமளா நினைப்பாள். ஆனால் ஹிந்திக்காரர்கள் பலே திருடர்கள். ஒவ்வொரு முறையும் பாபிஜி, பெஹன்ஜி என்று எதையோ சொல்லி உள்ளே நுழைந்து விடுவார்கள். ஆகக் கூடி திருவிடைமருதூரில் அவனை விட்டுவிட்டு மைனர் ஜபல்பூரில் பிரம்மச்சர்யம் கொண்டாடி இருக்கிறார்.

வெறுமனே லலிதா சஹஸ்ரநாமம் சொல்லிக் கொண்டிருந்தால் அவன் திருந்தி விடப் போவதில்லை. வேறு என்ன செய்வது? முதலில் சர்க்கரை வாங்க வேண்டும். குழந்தை எந்த நிமிஷமும் கண் விழித்து பாலுக்குச் சிணுங்குவான். சியாமளா வாசற்படியில் நின்று மழையை ஒரு கணம் தீர்மானமாய்ப் பார்த்தாள். புடவைத் தலைப்பை முக்காடிட்டுத் தெருவில் இறங்கினாள். வீட்டு வாசலில் ராட்சச சாக்கடையில் மழைநீர் நுரை தள்ளி சுழித்து ஓடியது. நடுவே குறுகிய மரப்பாலம். பயத்தில் கால் நடுங்க, சியாமளா பாலத்தைக் கடந்தாள். கடைக்காரன் சமயோஜிதமாய் சர்க்கரைப் பொட்டலத்தை பிளாஸ்டிக் பையில் கொடுத்தான். சியாமளா வேகமாய் வந்தவள் சாக்கடைக்குச் சற்று முன்னால் திடுக்கிட்டு நின்றாள். பாலத்தின் பலகையை முட்டி மோதியபடி வயிறு உப்பிய செத்த நாயொன்று வெள்ளத்தில் மிதந்து போனது.

"இவனைக் கொஞ்சம் பார்த்துக்கறேளா?"

சியாமளாவின் குரல் சீட்டாட்ட கும்பலில் ஒருத்தர் காதிலும் விழவில்லை. எதிர்வீட்டு பேனர்ஜிதான் அவள் அறைக்குள் நிற்பதை முதலில் கவனித்து சிகரெட்டை மறைத்தவன்.

"என்னடி?"

"இவனை கொஞ்சம் பார்த்துக்கணும். நான் பால் சாதம் பிசைஞ்சுண்டு வந்துடறேன்."

"உம்."

நாராயணன் தலையாட்டினான்.

ஜில்லு அப்பாவின் முதுகில் ஏற முயன்றான். சின்ன சின்ன வார்த்தைகளைச் சொல்லிப் பார்த்தான். ஆச்சரியம். யாருமே அவனைக் கவனிக்கவில்லை. ஜில்லு இத்தகைய உதாசீனத்துக்குப் பழகினவன் இல்லை. காக திரும்பிய அரையணாக் கயிறில் வாசலுக்கு வந்தான். சுமன் வீட்டு நாய் சாக்கடைக்குக் குறுக்காக பாலத்தைக் கடந்து தெருவுக்குப் போனது.

சியாமளா குட்டி வெள்ளிப் பேலாவில் பால் சாதத்துடன் திரும்பிய போது அறையில் ஜில்லுவைக் காணவில்லை. சியாமளா அவசரமாய் வாசலுக்கு வந்தாள். வெளியே சாக்கடைப் பள்ளத்தில் நீர் விரையும் சப்தம் சமுத்திரம் போல் கேட்டது. சியாமளா மீண்டும் அறைக்குள் வந்தாள்.

"நாராயண்ஜி. பாபிஜி உங்களைத் தேடி வந்திருக்கிறார்."

ஆட்டம் ஜெயித்த திருப்தியில் சீட்டைக் கவிழ்த்து நாராயணன் நிமிர்ந்தான்.

"என்ன?"

"குழந்தையை விட்டுட்டுப் போனேனே?"

கண்களில் நீர் வழிய சியாமளா கேட்டாள்.

"எப்போ?" என்றான் நாராயணன்.

(தொடரும்)

அசுரச்சாதனையாளர்!

தொண்ணூற்று இரண்டு வயதைக் கடந்துவிட்ட வித்வான் டாக்டர் எம். நாராயண வேலுப்பிள்ளைக்கு இப்போது கண்பார்வை முழுவதுமாக இல்லை. உரைநூல்கள், மொழிபெயர்ப்புகள், புராண இதிகாசங்கள், பயண இலக்கியம் என்று இதுவரை நூற்றி எண்பது நூல்கள் எழுதியிருக்கும் இவருக்கு இதுவரை கலைமாமணி விருது கொடுக்கப்படாதது பெரிய அநியாயம் என்கிறார்கள் காஞ்சிவாழ் தமிழறிஞர்கள்! இவரது புத்தகங்களைத் தொடர்ந்து வெளியிட்டு வரும் பிரபல பதிப்பகங்கள் கூட இவருக்கு முறையான ராயல்டி தரவில்லை என்பது அவரின் குற்றச்சாட்டு. காஞ்சி மகா பெரியவரின் உரைகளை 'ஞானச் செல்வரின் நல்லுரைகள்' என்ற தலைப்பில் தொகுத்திருக்கும் இவர், பார்வை குறைந்து விட்ட போதும் எழுதிக் கொண்டே இருக்கிறார். வருடத்திற்கு ஒரு புத்தகமாவது எழுதினால் தான் தூக்கமே வருகிறதாம்!





ஸ்ரீ சாரதா சக்தி பீடம்



72, காமராஜ் சாலை, பழைய பெருங்களத்தூர்,
(வழி) தாம்பரம், சென்னை - 63. Tel & Fax: 237 6129.
E-mail: sspeetam@md3.vsnl.net.in, sspeetam@hotmail.com
Please visit our Website at: www.sspeetam.org

ஏழை மாணவர்களுக்கு உதவுங்கள்

பேரன்புடையீர்! வணக்கம்

நம் சக்தி பீடத்தின் சார்பில் கடந்த 14 ஆண்டுகளாக நடைபெற்று வரும் "ஸ்ரீ ராமகிருஷ்ண சேவா குருகுலத்தில்" தாய், தந்தையற்ற, திக்கற்ற 120 மாணவர்களும் 30 மாணவிகளும் தங்கி படித்து வருகின்றனர்.

நாள்தோறும் இறைவழிபாடு, கூட்டு பிரார்த்தனை, பகவத்கீதை பாராயணம் ஆகியவைகளுடன், நல்ல கல்வி, காலை, மாலை உடற்பயிற்சி ஆகியவைகள் அளிப்பதுடன் உணவு, உடை, தங்குமிடம் ஆகியவைகளும் இலவசமாக வழங்கப்பட்டு நல்ல முறையில் வளர்ந்து வருகிறார்கள்.

மேலும் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோர்களின் உயர்ந்த லட்சியங்கள் போதிக்கப்படுவதுடன், சமுதாய சேவை பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இக்குருகுலத்தின் பராமரிப்பு செலவு முழுவதும் நன்கொடையாளர்கள் அளிக்கும் உதவிகள் மூலம் மட்டுமே நடைபெற்று வருகிறது. ஆகவே, தாங்கள் இப்புனிதப் பணிக்கு தங்களால் இயன்ற உதவியைச் செய்யும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

• காலை சிற்றுண்டி (150 பேருக்கு)	ரூ.	1,000/-
• மதிய உணவு	ரூ.	2,000/-
• இரவு சிற்றுண்டி	ரூ.	1,000/-
• இனிப்பு மற்றும் பால் வழங்குதல்	ரூ.	1,000/-
• ஒரு மாணவனுக்கு ஒராண்டிற்கு கல்வி உதவித் தொகை	ரூ.	1,000/-
• ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஒராண்டிற்கு (உணவு, உடை, கல்வி)	ரூ.	12,000/-
• குருகுலத்தின் ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு	ரூ.	2,00,000/-

மேலும் தங்களின் பிறந்த நாள், திருமண நாள், குழந்தைகளின் பிறந்த நாள், தொழில் / வியாபாரம் தொடங்கிய நாள், மற்றும் இதர பண்டிகை நாட்களான தீபாவளி, பொங்கல், கிறிஸ்துமஸ், ரம்ஜான் போன்றவைகளில் மாணவர்களுக்கு சிறப்பு விருந்து ஒன்றை அளித்து அவர்களுடன் மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்ளலாம்.

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்கிறோம். தங்கள் நன்கொடைகளை "ஸ்ரீ சாரதா சக்தி பீடம்" என்ற பெயருக்கு **Cheque / DD / MO** மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி
வருமானவரி விலக்கு உண்டு.

இறைவன் தொண்டில்
சுவாமி ஸ்ரீ ஸர்வாத்மானந்தர்

'அர்ஜென்ட்' என்று பெயருக்கு முன்பு வந்ததாலோ என்னவோ அர்ஜென்டீனா நாட்டில் இரண்டே வாரங்களில் ஐந்து அதிபர்கள் மாறிவிட்டார்கள்!

அரசின் பொருளாதார நிலைமை, மக்கள் நேரடியாகப் போராட்டத்தில் இறங்கி, அடித்து நொறுக்குகிற அளவுக்குச் சீரழிந்தது. முப்பது பேர் இதில் உயிர்விட்டார்கள்.

நூற்றி ஐம்பத்தைந்து பிலியன் (மிலியன் x1000) டாலர்கள் அந்நிய நாட்டுக் கடன்கள். போதாததற்கு, இருக்கிற டாலர் சேமிப்பையும் எடுத்துக் கொள்ள மக்கள் முனைந்தபோது பேரதிர்ச்சி. வங்கிகளில் மக்கள் போட்டு வைத்திருக்கும் பணத்தை, (ஐயாயிரம் டாலர்களுக்கு மேலிருந்தால்), அதை ஒருவருட பிக்ஸட் டெபாஸிட்டாக மாற்றிவிட்டது அரசு! டிசம்பரில் மட்டும் ஒரே நாளில் இரண்டு பிலியன் டாலர்களை மக்கள் வங்கியிலிருந்து எடுத்ததன் விளைவு இது.

உள்நாட்டுக் கடன் வகைகளுக்காக மட்டுமே நாற்பத்தியோரு பிலியன் டாலர்கள் கொடுக்க வேண்டுமாம். சப்தம் போடாமல் எல்லாருக்கும் பாண்ட் கொடுத்து விட்டது அரசு. (இதன் தற்போதைய விலை மதிப்பு, குறைந்து கொண்டே வந்து கால் பங்கை எட்டிவிட்டதாகப் பேச்சு!) நம்மூர் நிதி கம்பெனிகளில் முதலீடு செய்த அப்பாவிகள் வைத்திருக்கும் முதலீட்டாளர்கள், அசலும் வட்டியும் பத்திரமாகத் திரும்பத் தரும் பட்சத்தில், பத்து வருடங்கள்கூடக் காத்திருக்கத் தயாராம்! 'மற்றவர்கள் அப்படி இருக்க மாட்டார்கள். வெளிநாட்டிலிருக்கும் அர்ஜென்டீனாவின் விமானங்கள் கப்பல்கள் இவற்றை எல்லாம் கைப்பற்றிவிடக் கூடும்' என்கிறது 'த எகானமிஸ்ட்!'

துருக்கிக்கும்,


• கலவரம்

இரண்டு வாரத்தில் ஐந்து அதிபர்கள்!

மாதிரி, அர்ஜென்டீனா மக்களும், இந்த பாண்ட்டைத் தூக்கிக் கொண்டு போய் எப்போதுதான் பணமாகக் கொடுப்பீர்கள்? என்று கேட்டிருக்கிறார்கள். (இரண்டு வருடங்கள் ஆகுமாம், குறைந்தபட்சம்!)

இது உள்நாட்டுக் கடன் சமாசாரம். எப்படியோ சமாளித்தாயிற்று. வெளிநாட்டுக் கடன்கள்? இத்தாலியிலுள்ள பாண்ட் பாகிஸ்தானுக்கும் 'தீவிரவாத எதிர்ப்பு' சர்ட்டிபிகேட் கொடுத்த கையோடு, ஐ.எம்.எஃப் எனும் சர்வதேச நிதி அமைப்பு நிதி உதவி செய்த மாதிரி, அர்ஜென்டீனாவுக்கும் உதவிக்கு வருமா? சந்தேகம்தான்.

இப்போது அதிபராகப் பொறுப்பேற்றிருக்கும் எட்வர்டோ துஹால்டே, தம்

மீது மக்களுக்குக் கொஞ்ச நஞ்சம் நம்பிக்கையாவது வரவேண்டும் என்று, சில நடவடிக்கைகள் மேற்கொண்டார்.

தமது நாட்டு நாணயமான பெஸோவை நாற்பது சதவிகிதம் மதிப்புக் குறைத்தார். அரசு நியமனங்களில் ஐம்பது சதவிகிதம் கட்! நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கை எண்ணிக்கையிலும் கட். ஆனால் இதெல்லாம் எந்த அளவுக்குச் சேமிப்புக்கு உதவும்? என்பதுகளில் உச்சகட்டப் பண வீக்கம் காரணமாக நாடே கொந்தளித்துப் போன சூழ்நிலை உண்டாயிற்று. கிட்டத் தட்ட அதே நிலைமைதான் இப்போதும்!

ஸ்பெயினும், அமெரிக்காவும் அச்சத்துடன் பார்த்துக் கொண்டிருக்கின்றன, அவர்கள் முதலீடு செய்திருக்கும் நிறுவனங்களின் கதி என்ன ஆகுமோ என்று.

அயல்நாட்டு அரசியல் விவகாரங்களில் நுணுக்கமான பார்வையுள்ள முன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரி பி.எஸ். ராகவனிடம் அர்ஜென்டினா





நிலைமையிலிருந்து நாம் தெரிந்து கொள்ளுவ்து என்ன என்று கேட்டோம்:

● இரண்டு மூன்று வருடங்களுக்கு முன் ஐ.எம்.எஃப் நிதி அமைப்பு பேச்சைக் கேட்டு, கரன்ஸி போர்டு ஒன்றை நிறுவினார்கள். டாலருக்கு எதிராக ஒரு நிலையான, குறிப்பிட்ட 'பெஸோ' நாணயத்தை நிர்ணயித்தது, போர்டு. அதாவது ஐஎம்எஃப் பேச்சைக் கேட்டு, 'திணித்தது'. நம்முடையது போல, மாறும் தன்மையுள்ள ஃப்ளோட்டிங் கரன்ஸியாக அர்ஜென்டினாவில் இருந்திருந்தால் இந்தப் பிரச்னை வந்திருக்காது. கள்ளச் சந்தையில் டாலருக்கு எதிரான 'பெஸோ'வும் இத்தனை உயர்ந்திருக்காது.

● அவர்களுடைய செலவினங்களும் அதிகம். சப்ஸிடி எனப்படும் மானியங்களைச் சகட்டு மேனிக்கு, சக்தியை மீறி, அள்ளிக் கொடுத்தார்கள். துண்டு விழும் பட்ஜெட் என்கிற ஃபிஸ்கல் டெஃபிஸிட் அபாயகர நிலையையும் தாண்டிற்று. விலைவாசிகள் உயர்வைக் கட்டுப்படுத்த முடியவில்லை. (இவை நமக்கு எச்சரிக்கை!)

● நேரடி அந்நிய முதலீட்டை, முழு கேபிடல் அகவுன்ட் கன்வர்ட்டபிலிடி என்ற தங்களுக்குச் சாதகமில்லாத வகையில் ஏற்றுக் கொண்டு, திண்டாடித் திணறிப் போய்விட்டார்கள். நாம் இது மாதிரி எல்லாம் மாட்டிக் கொண்டு விழிக்கவில்லை. நமது நேரடி அந்நிய முதலீடு ஜிடிபியில் 0.2%தான். தவிர, நமது பொருளாதாரச் சீரமைப்பு மாற்றங்கள் எல்லாமே வெகு வெகு ஜாக்கிரதையாகச் செய்யப்பட்டு வருகின்றன. அதனால்தான் தெற்காசியப் பொருளாதாரச் சீரழிவு வந்தபோதும் கூட நாம் பாதிக்கப்படவில்லை. மன்மோகன்சிங், சிதம்பரம், யஷ்வந்த் சின்ஹா தவிர அதிகாரிகளுக்கும் நாம் பாராட்டைத் தெரிவிக்க வேண்டும்.

● நமது தனியார் துறை பலமானது. குளோபலைசேஷன் என்று பார்த்தாலும், மொத்த உலக வணிகத்தில் இந்தியாவின் பங்கு 0.3% முதல் 0.4.%தான். அதனால் உலகமயமாக்கல் விஷயத்திலும் நமக்குப் பாதிப்பு ஏற்படாது, அர்ஜென்டினாவில் ஏற்பட்டது போல!

— சாருகேசி

FORD FOUNDATION INTERNATIONAL FELLOWSHIPS PROGRAM

Investing in Education and Leadership

The Program offers 30 fellowships for Indian nationals to pursue formal post-graduate or doctoral study at any university in the world beginning in 2003. The subject areas are principally social sciences and humanities which relate to the Ford Foundation's grant-making areas.

The Program aims to support exceptional individuals who will become leaders in their field furthering development and greater economic and social justice. It is designed to support candidates from social groups that have been marginalized and lack systematic access to higher education such as women, Scheduled Castes, Scheduled Tribes, Other backward classes, physically disadvantaged, and those with other kinds of socio-economic deprivation.

Candidates will need to demonstrate academic excellence, leadership skills, commitment to community service.

Pre-Application Forms available from:

INTERNATIONAL FELLOWSHIPS PROGRAM

12 Hailey Road, New Delhi 110001. Telefax: 011 3358893

E-mail: **ask@ifpsa.org** Website: **www.ifpsa.org**

Deadline for completed Pre-Application Forms is

15 March 2002

ISHTIHAAR



வேத சாஸ்திர ரக்ஷணத்திற்கு ஓர் வேண்டுகோள்.

அத்வைத வித்யாசார்ய மஹாராஜா ஸாஹேப்

ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் புண்யஸ்மரண ஸமிதி (Regd)

89, காமாக்ஷி ஜோஸியர் தெரு, கும்பகோணம் - 612 001.

E-mail : vedagdps@sancharnet.in - Website : www.geocities.com/gdpskmu

☎ : (0435)
Off : 425948
Fax : 423777
Patasala : 422866

"வேதாத்யயனம் செய்யும் பாக்யமில்லாதவர்கள், வேதாத்யயனம் செய்துவரும் குழந்தைகளை போஷித்து ரக்ஷிப்பதன் மூலம் ஓரளவாவது தனது கடமையை நிறைவேற்ற முடியும். ஒரு வேதக் குழந்தையின் படிப்பு, பராமரிப்பு செலவை ஒரு குடும்பம் எடுத்துக்கொண்டால், பேருபகாரமாக இருக்கவும்" என்று காஞ்சி ஸ்ரீ மஹாஸ்வாமிகள் உபதேசித்துள்ளார்கள். அவரின் மூதாதயர்களான ஸ்ரீ நாகமாம்பா ஸமேத பகவான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் அவர்களால் கி.பி. 1542-ல் ஸ்தாபிக்கப்பட்டு தொடர்ந்து 459 ஆண்டுகளாக நடந்துவரும் ராஜா வேத காவ்ய பாடசாலையை மேற்படி ஸமிதியானது தாய்போல் இயங்கி காப்பாற்றி வருகிறது. தற்பொழுது 120 மாணவர்களுக்கு 12 வேத, சாஸ்திர அத்யாபகர்கள், புராதனமான குருகுல முறைப்படி ரிக் வேதம், க்ருஷ்ண, சுக்ல யஜுர் வேதம், ஸாம வேதத்தை போதித்து வருகிறார்கள். இப்புனித பாடசாலையை ரக்ஷிக்க கீழ்கண்ட திட்டங்களில் அனைவரும் பங்குகொண்டு ஸ்ரீ வேத மாதாவின் அனுக்ரஹத்தால் ஸகல ஸ்ரேயஸ்களையும் அடைய வேண்டுகிறோம். புதிய பாடசாலை கட்டிட நிர்மாணப்பணி துவங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. நன்கொடை வரவேற்கப்படுகிறது.

தங்கள் நன்கொடைக்கு U/S 80-G பிரிவின்படி வருமான வரி விலக்கு உண்டு திட்ட விபரங்கள்	ஒரு முறைக்கான நன்கொடை தொகை (One Time)	நிரந்தர வைப்பு நிதி 'Corpus Fund'
ஒரு வேளை ஆராதனைக்கு (பகுதி தொகை)	Rs. 500	Rs. 5000
அமாவாஸ்யை (or) பௌர்ணமி (or) த்வாதசி ஆராதனைக்கு [One day of a month only]	Rs. 1,500	Rs.15,000
ஒரு வேதம் பயிலும் மாணவனின் பராமரிப்பு ஒரு மாத செலவு ரூ.1000/-	Rs. 12,000 P.A	Rs. 1 Lakh

Cross செய்யப்பட்ட D.D.-ஐ A.V.M.S.G.D.P.S. Samithi என்ற பெயரில் அனுப்பக் கோருகிறோம்.

● வி. சுபாஷினி, சென்னை -13.

? செயல்திறன் தாழ்ந்துபோன இந்தியன் வங்கியைத் தனது முயற்சியால் லாபம் ஈட்டும் நிறுவனமாக மாற்றி, 2001 ஆண்டுக்கான பொன்மயில் விருதைப் பெற்ற நிர்வாக இயக்குனர் ரஞ்சனா குமார் பற்றி...?



• திருப்புமுனை...



• ...திலகங்கள்!

! மனமாற வாழ்த்தும் நேரத்தில் இதற்கு அஸ்திவாரமிட்ட டி.எஸ். ராகவனையும் நினைக்க வேண்டும்.

● வி. ராதாகிருஷ்ணன், தஞ்சை.

? ஆண்டிப்பெட்டியில் ஜெயிக்கப்போவது யார்?...

! உங்கள் பேனாவுக்கு இப்படியொரு தீர்க்க தரிசனமா! ஆண்டிப்பட்டி என்று எழுதுவதற்குப் பதிலாக, 'பெட்டி' என்றே எழுதி விட்டீர்களே? ஜெயிக்கும்!

● கு. அரவிந்தராஜ், சேலம் - 6.

? வாக்காளர் பட்டியல் முறைகேடில் அதிகாரிகளைப் பழிவாங்குவது சரியா...?

! அதிகாரிகள், அரசியலுக்கும் அரசியல் சார்புக்கும் அப்பாற்பட்டவர்களாக, வளைந்து கொடுக்காமல் செயல்படவேண்டும். அந்திக்கு உடன்பட்டால் நடவடிக்கை எடுத்துத்தானே ஆகவேண்டும். இல்லாவிட்டால் அந்தியே ஆட்சியாகி விடும். அதிகாரிகளை இயக்கிய அரசியல்வாதிகளை, வாக்காளர்தான் தண்டிக்க வேண்டும்.

● ப. இராம்முருகன், சென்னை - 68.

? விச்வ ஹிந்து பரிஷத் ஏற்பாடு செய்த ரகசிய கூட்டத்தில் ஐந்து மத்திய அமைச்சர்கள் கலந்து கொண்டது முறையா?

! ரகசியக் கூட்டம் என்பதால் என்ன நடந்தது என்பது நமக்குத் தெரியாது. ஒருவேளை அமைச்சர்கள் நிதானம் காட்டுமாறு வி.எச்.பியை வற்புறுத்தியும் இருக்கலாம். 'ஆட்சிக்கு தர்ம சங்கடம் ஏற்படுத்தாதீர்கள்' என்று கோரியிருக்கலாம். அப்படியானால் சரி. அல்லாது போனால் தப்பு!



• 'ஆண்டி' செண்டிமெண்ட்!

● ஆர். பிரபு, சென்னை -41.

? ஒரு வேளை ஆண்டிப்பட்டியில் ஜெ. தோற்றால்...?

! இரவோடிரவாக வைகை சேகர் தமிழக ஹீரோவாகி விடுவார்! உலகம் முழுதும் அறியப்பட்டவராகிவிடுவார்.



• இரட்டைத் துரோகம்

● ஆர். லட்சுமி, மதுரை - 16.

? 'சூழ்நிலை சரியில்லை; இங்கே வரவேண்டாம்' என்று புலிகளுக்கு டாக்டர் ராமதாஸ் அறிவுரை கூறியுள்ளது சரிதானா?

! இரட்டைத் துரோகம்! புலிகள் ஆதரவு என்பது ஒன்று. இங்கே சூழ்நிலை சரியில்லை என்று பிறந்த நன்னாட்டை அவர்களிடம் விட்டுக் கொடுப்பது மற்றொன்று!

● ஏ.எஸ்.யோகானந்தம், கலிங்கியம்.

?பழம்பெரும் டைரக்டர் எல்லிஸ்.ஆர். டங்கன் மறைவு...?

! 'மீரா', 'மந்திரிகுமாரி' படங்களின் இயக்குனர். அமெரிக்கர் என்றபோதும் தமிழ் உணர்வை, இந்திய உணர்வைப் புரிந்து கொண்டு செயல்பட்டார். மீரா - குறிப்பாக - கறுப்பு-வெள்ளைக் காலத்துக் காவியம்! டங்கனின் ஓவியம்.

● தேனி முருகேசன், தேனி.

? தமது கட்சியினரை விவரமானவர்களாக

மாற்ற, பா.ம.க. பயிற்சி வகுப்பு நடத்தப் போவது பற்றி..?

! விவகாரமானவர்களாக வளர்ச்சியுறா விட்டால் சரிதான்!

பவர்களும் பெருகி வருவது எதிர்மறை நிகழ்வு அல்லவா...? இது எப்படி சாத்தியமாகிறது?

! டி.வி.நிகழ்ச்சிகளை ஓரிண்டு பேர் ஸ்பான்ஸர் செய்தது போய் இப்போது ஒரே நிகழ்ச்சிக்கு ஒரு டஜன் ஸ்பான்ஸர்கள்! காரணம் நிதிப் பற்றாக் குறை. சந்தையில் பணமில்லை!

ஆண்டிப்பட்டியில் ஜெ. தோற்றால்...?

● சந்துரு கமலநாதன், நாமக்கல்.

? புலிகளை அனுமதிக்க நினைப்பதே ஆபத்து என்று ஜெயலலிதா கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளாரே..?

! நல்லது. மிகத் தாமதமாகத் தெரிவிக்கப்பட்ட எதிர்ப்பானாலும் மிக நல்லது.



• டபுள் ஓகே!


● எஸ். நிஷா, சென்னை - 64. ∗

? தமிழ்மொழி பெரும்பாலும் ஆன்மிகத்தைப் பறைசாற்றும் நிலையில், நாத்திகர்கள் அதைப் பாதுகாத்துப் போற்ற வேண்டும் என்று கூறுவது...?

! மொழி என்பது வாழ்வையொட்டியே வளர்வதால் ஆன்மிகம், கலை, பண்பாடு யாவும் அதில் பிரதிபலிக்கும். ஆன்மிகமும் வழிபாடும் வாழ்வியலின் வெளிப்பாடுகள் என்பதை முதிர்ந்த நாத்திகர்கள் ஒப்புக்கொண்டு, இறைத்தன்மையை இல்லாவிடினும் தமிழை ஏற்பார்கள்.

● ஆர். ஆர். தமன், கோவை - 38.

? பொருளாதாரம் இறங்குமுகம்; தொழில்கள் நசிவு, வாங்கும் திறன் வீழ்ச்சி, தொழில் மந்தம்... இவ்வளவும் இருந்தும் டி.வி. சீரியல்களும் அவற்றை ஸ்பான்ஸர் செய்



• 'பாதுகாப்பு' வாக்குமூலம்!

● எம். சிவகுருநாதன், தஞ்சை.

? "ஆண்டிப்பட்டி, அ.இ.அ.தி.மு.கவுக்குப் பாதுகாப்பான தொகுதி. அங்கே அதிகார துஷ்பிரயோகமோ மற்ற கட்சியினரை வளைத்துப்போடுதலோ தேவையில்லை" என்று மலைச்சாமி எம்.பி. தெரிவிப்பது பற்றி என்ன கருதுகிறீர்கள்?

! அப்படியானால், தோற்கக் கூடிய தொகுதிகளில் இவர்கள் 'வளைத்துப் போட்டு' 'வேலையைக் காட்டுவார்கள்' என்று முடிவுக்கு வரவேண்டியுள்ளது. அதைத்தான் வாணியம்பாடியிலும் சைதாப்பேட்டையிலும் செய்தார்கள் போலும். அந்த அடிப்படையில் எடை போட்டால்கூட ஆண்டிப்பட்டி தேர்தலும் ஒத்திவைக்கப்படுவதுதான் நியாயம்.



• அதிகாரபூர்வ அர்ச்சனை!

● ஜி.எஸ். நந்தினி, மயிலாடுதுறை.

? வாழப்பாடி ராமமூர்த்தி என்றொரு அரசியல்வாதி இருந்தாரே, அவர் இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறார்?

! தாய்க்கட்சியில் மீண்டும் இணைந்து மற்றக் கட்சியினரை அர்ச்சனை செய்து கொண்டிருக்கிறார்.

❐ ரூ. 100/- பரிசு பெறுபவர்:
கு. அரவிந்தராஜ்,
21, புது திருச்சிக் கிளை,
வடக்குத் தெரு,
லைன்மேடு, சேலம் - 6.

∗ ரூ. 50/- பரிசு பெறுபவர்:
எஸ். நிஷா,
25, திருப்போரூர் தெரு,
அஸ்தினாபுரம்,
சென்னை - 600 064.



நுரைவலம்

க.சீ. சிவகுமார்

அப்பா, அம்மா, அக்கா எனக் குடும்ப உறவுகள் நீங்கலாக இந்த இருபத்தியாறு ஆண்டுகளில் வாழ்வில் கூடவே தொடர்ந்து வரும் விஷயம் எது என மறுபடிமறுபடி யோசித்தான். ஏதாவது புனிதமான அம்சம் தென்படாதா? என மூளையின் மூலைகளைக் கிளறினான். ம்ஹூம். மீண்டும் மீண்டும் நினைவுக்கு வந்து கொண்டிருந்த ஒரே சங்கதி 'சோப்பு'த்தான். குளியல் சோப்பு. கனசெவ்வக டப்பாக்களில் அடைந்த குழந்தைப் பவுடர்களிலிருந்து அவன் விடைபெற்று பாண்ட்ஸ், கோகுல் சாண்டல் என குடும்பப் பொதுப்பவுடருக்கு வந்தபோதே விதவிதமான சோப்புகளும் பரிச்சயப்பட்டன.

அவனது பதின்தொடர் வயதுகளில் தேய்க்க நேர்ந்த சோப்புகள்தான் இன்றளவும் ஞாபக ஆழத்தில் மணப்பதும் மிதப்பதும். பழரசப் பாட்டில்கள் அல்லது திராட்சையின் நிறமுடைய பியர்ஸ் சோப்புத்தான் அவனுள் அலாதியான கிளர்ச்சியை உண்டு செய்தது. இன்றளவும் அவனுக்கு அது அபூர்வமாய்க் கிடைக்கும் ஒரு வஸ்து தான். ஒரு புள்ளியில் பியர்ஸுக்கு நிகராக சந்திரிகா ஆனது.

அவனது அம்மாயிக் கிழவியின் ஊரான மணுக்கட்டி பாளையத்திற்கு போகும்போதெல்லாம் கூடலூர் சந்தையில் வாங்கி வைத்த உறை பிரிக்காத சந்திரிகாவைத் தருவாள் கிழவி. பாரம்பரியம் மிக்க பச்சைச் செவ்வகம் அது. பச்சைச் சோப்புகளின் சிறப்புத் தன்மையே அவற்றைக் கவ்வியிருக்கும் வெள்ளை அட்டைகளில் பகந்தேமலைப் படர்த்தி விடுவதுதான். கமகமக்கும் பொட்டுத் திட்டுக்கள் அவை. பிரித்து வெளியே எடுக்க சந்திரிகாவைப் போல கலபமான சோப்பு அவனியில் வேறெதுவுமில்லை.

யோசித்தால் தினந்தோறும் அம்மாயி விட்டுக்குப் போனாலும் தனது சக்திக்கு மீறி புதுப்புது சோப்புகளையே அளித்திருப்பாள் என்று தோன்றுகிறது. சந்திரிகாவின் கனபரிமாணத்துக்குக் கட்டி ஈடு தருவது பச்சை நிறத்தில் பிறிதொன்றில்லை. வேறு நிறத்தில் உண்டு. மரத்திலேயே பழுத்து உதிர்ந்த எலந்தைப் பழ நிறத்து 'லைப்பாயை'ச் சொல்லலாம். அப்பா லைப்பாயை வாங்கி வருகிறாரென்றால் நிதி நிலைமை அதிசீர் கெட்டு இருக்கிறதென்று அர்த்தமாகும். ஒருதடவை அதையேகூட இரண்டாய் வெட்டி உபயோகிக்கக் கொடுத்தார்.

காதி நிறுவனங்களின் அழுக்கு நீக்கும் 'பார்'களுக்குத்தான் இந்த வெட்டப்படும் கதி நேரும். அந்தப் பார்களைத் துண்டாடுவதற்குப் பொட்டலச் சணலே போதுமானது. லைப்பாயை அறுக்க அப்பா கத்தியைப் பயன்படுத்தினார். வாழ்வில் எதுவும் துண்டாடப்படலாம் என்பதன் குறியீடு போலிருந்தது அது.

லைப்பாயில் நுரை குறைவுதான் என்றாலும் அழுக்குப் போவதை ஸ்பஷ்டமாய் உணர முடியும். வெள்ளை நுரை வெட்டியாய் விழுவதற்குப் பதிலாக அடுப்பாங்கரித் துணியைப் பிழிந்தது போல அழுக்குச் சாறு விழுவது அவனுக்குத் திருப்தி தரும். அவன் ரசித்துக் குளித்த காலங்கள் அவை. குளிக்கப் பிடிக்காத நாள் வந்திருக்கிறது இன்று.

இன்று தண்ணீரை விட அடர்த்தி குறைந்த ஷாம்புகள் வந்துவிட்டன. அவன் கொட்டு வாங்கிய நாளில் அதிகம் இறங்கியவை முட்டை ஷாம்புகள். சாஷேக்களின் உள்ளே ஷாம்புகள் நேடிரயாகத் தெரிந்தன.

மஞ்சள் கருவின் அடர்த்தியோடு.

அந்த ஷாம்புவும் இல்லாவிடினும் சீயக்காயும் இல்லாவிடினும் சோப்பையே தலைக்குப் பயன்படுத்தலாம் என்பது அனுபவ உண்மை. அப்படிக் குளித்துவிட்டு தலையைத் தொட்டால் முடியைத் தொடுகிற உணர்வே இருக்காது. நேரடியாக மண்டையோட்டையோ மூளையையோ கூடத் தொட்டு விடலாம்.

கிரிக்கெட் விளையாடி அரித்த தலைக்கு வியர்வை போக லைப்பாயைத் தேய்த்து விட்டான். அப்பா வந்தவர், அழுக்குப் போய்க் கொண்டிருக்கிற மண்டையில் நச்சென்று கொட்டினார். மெய்யாகவே அழுக்குகள் வலியிலிருந்து காப்பாற்றுகின்றன. கொட்டிய கையோடு, தலைக்குப் போடுவதென்றால், ரம்பா, மேனகா, மன்னன் முதலில் துணிச் சோப்புகளைப் பயன்படுத்துமாறு 'வலி' யுறுத்தினார். அம்மா அப்பாவைத் திட்டித் தீர்த்தாள்.

"அவன் அந்த சோப்பையே போட்டா... என்ன குறஞ்சு போச்சு. தலைக்கு ஒரு சீயக்காய்... தாடிக்கு ஒரு சீயக்காயா?"

அடி வாங்கிய அவனுக்கு அப்போது மீசைகூட முளைத்திருக்கவில்லை. விஷயமும் சீயக்காய் சம்பந்தப்பட்டதல்ல. சோப்பு சம்பந்தப்பட்டது. சோப்புத் தேய்கிற ஒவ்வொரு மில்லி மீட்டரும் அப்பாவுக்கு ரூபாய் நோட்டுகள் கிழிவதான தோற்றத்தைத் தந்திருக்க வேண்டும். அந்தக் கட்டங்களில் ஒருநாள் உடன் படித்த மாணவர்கள் தங்கள் சோப்புகள் பற்றி பறை சாற்றிக் கொண்டிருந்தபோது அவன் உபயோகிக்கும் சோப்பாகி வந்து வழக்கொழிந்த சோப் ஒன்றின் பெயரைச் சொன்னான். ஃப்ரெஷ்கா.

அது கைலாசபுர அத்தையின் வீட்டில் பரிமளித்த ஞாபகம். உலகம் துண்டாடிய சோப்புகளுடனோ இரவல் சோப்புகளுடனோ உறைந்து விடுவதில்லை.

அவனுக்கு மீசை முளைத்தபோது நடிகைகள் பரிந்துரைக்கும் சோப்புகள் மீது நாட்டம் சென்றது. சோப்புகளோ வீட்டு சாமான்களோ வாங்கி வரும்படி அப்பா இருபதும் ஐம்பதுமாகக் காசு கொடுப்பார். நடிகைகள் சொன்னால்... லக்ஸ், லைலக்ஸ், சூப்பர் லைலக்ஸ் எதுவும் வாங்க அவன் தயாராகவே வளர்ந்தான்.

நடிகையரும் மேனிச் சோப்புக்குத் தரும் முக்கியத்துவத்தை துணிச் சோப்புக்குத் தருவதில்லை என்பது விளம்பரங்கள் வாயிலாகத் தெரிய வருகிறது. அல்லது அதில் ஆராய ஒன்றுமில்லை. அவனது ஆராய்ச்சிக்கு மிகச் சில காலம் மட்டும் சோப்புக்குத் தமிழ்ப்பெயர் கண்டுபிடிப்பதில் முனைந்திருந்தது. தொல்காப்பிய காலத்தில் சோப்புமில்லையாதலின் பேருமில்லை. துணிச் சோப்புக்கு 'சவுக்காரம்' என வழங்கி வருகிறது. மேனிச் சோப்பை 'வழலை' என



வழங்கலாம் என்று அவனது +1 தமிழ் ஆசான் ஆர்.எஸ். ஐயா தெரிவித்தார். தமிழன் ஃப்யூச்சரில் அக்கரையுள்ள அவர், நவீன யுகப் பொருட்களை, தமிழில் மடக்கிக் கொண்டிருந்தார்.

அவனுக்கு சோப் உபயோகிப்பதைவிட 'வழலை' என்று கூறுவது சிரமமாயிருந்தபடியால் 'சோப்' என்றே கூறி வந்தான். பழனிச்சாமி மாமாவே சோப்பைச் 'சோப்' என்று கூறுவதால் அவன் 'சோப்' என்று கூறுவது தவறாகாது.

அப்போது வட்டாரத்துக்கு சோப்பு அறிமுகமான புதுசு. பழனிச்சாமி மாமா பெண் பார்க்கப் போய் நிச்சயமும் முடிந்த ஒருநாள் பெண்ணின் வீட்டில் குளித்திருக்கிறார். அப்போது அவர் சோப்பைக் கேள்விப்பட்டிருக்கிறாரே தவிர அறிந்திருக்கவில்லை. யாரோ ஒருவர் பாத்ரூமுக்கு வெளியிலிருந்து, "மாப்ளே, சோப்பும் இருக்குது. போட்டுத் தேச்சுக்கிட்டு வாங்க" என்று குரல் கொடுத்து விட்டார்கள்.

பழனிச்சாமி மாமா குளித்து முடித்த பின், சோப்பை நன்றாகத் தேய்த்துக்கொண்டு 'வெள்ளையேர்' என்று பாத்ரூமிலிருந்து வெளி வந்திருக்கிறார். மறுபடித் தண்ணீர் ஊற்றிப் பெண்ணும் கொடுத்துவிட்டார்கள் அவருக்கு.

மாமாவுக்குப் பெரிய புராணத்தில் இடமில்லை. ஆனால் பின்னாளில் லாரி ஓனர்ஸ் அசோசியேஷன் வெள்ளகோவிலில் உறுப்பினர் ஆகிவிட்டார். இரண்டு லாரிகள் ஓடுகின்றன. ஆனால் அவனது அப்பாவைக்

கண்டால் அவரே ஓடுவார்.

அப்பா மாமாவின் 'சோப்பு' சங்கதியையே விதவிதமாகக் கிண்டல் அடிப்பார். ஆனால் அடிப்படை விவரங்களை நம்பி வாழ்க்கை நிலைகள் இல்லை. பழனிச்சாமி மாமா லாரிகளை ஓட்டினார். அப்பா லைப்பாயை வெட்டினார். அப்பா இப்போது முன்னேறி விட்டார். சோப்புகளை வெட்டுவதில்லை. சோப்பு வாங்கக் காசு இல்லாத நாளில் சும்மா குளித்து விடுவது. இந்த வெறுங் குளியல் இரண்டு நாள் முதல் ஏழு நாட்கள் வரை நீடிக்கும். இன்றைக்குச் சோப்பு இல்லை குளிக்கப் பிடிக்கவில்லை அவனுக்கு.

"போடா, போய்க்குளிடா" என்றாள் அக்கா.

"வேண்டாம்."

"பீடை" என்றவாறு போய்விட்டான். ஆனால் அவனைக் குளிக்க வைக்காமல் அவள் ஓயவும் மாட்டாள்.

அவனுக்குப் போனவாரம் நண்பனுடன் தங்கியிருந்த லாட்ஜ் அறை நினைவுக்கு வந்துவிட்டது. பெரிதும் உறுதி கூறியிருந்தான் நண்பன். கோவையில்தான் ரூம் போட்டார்கள். 'காலையில் போய் மேற்படியானைப் பார்த்துப் பேச வேண்டும். பிறகு வேலை உனக்குத்தான்' என்றான் நண்பன். காலையில் மேற்படியானைப் போய்ப் பார்த்தார்கள். வேலை கிடைக்கவில்லை. கோணி ஊசியின் நுனியளவுக்குக்கூட வாய்ப்புமில்லை. நண்பனும் அவனும் திரும்பி வந்து அறையைக் காலி செய்தார்கள். இருவிரல் அகல சாம்பிள் சோப்பு மட்டும் லாட்ஜ்

"உள்ளே என்ன
ஒரே கும்மாளமா இருக்கு?"
"புதுசா வந்திருக்கிற இன்ஸ்பெக்டரை
கஞ்சா கபாலியோட ஆளுங்க ராகிங்
பண்றாங்க!"
– தஞ்சை தாமு

அறையில் கண்டு கொள்ளப்படாமல் கிடந்தது.

அந்தச் சோப்பு இப்போது இருந்தால் கூடக் குளிக்கலாம் என்று அவனுக்குப் பட்டது. எத்தனை சிறிய அளவிலான சோப்பு அது. ஒரு சிறிய அளவில் எவ்வளவோ கிடைக்கத்தான் செய்கின்றன. மினி மீல்ஸ், ஷாம்பு, தேங்காய் எண்ணெய், பவுடர், பேஸ்ட், டைரி, கற்பூரவில்லை... எவ்வளவோ கிடைக்கின்றன. ஒரு வேலை தவிர! சோர்வின் சல்லாத் துணி போர்த்தியது போல அவன் முகம் காணப்பட்டது. அக்காவுக்கு அவனது முகத்தைக் காணச் சகிக்கவில்லை. இன்னும் அவன் அவளுக்குப் பள்ளிக்கூடப் பையன் போலத்தான். அவன் இப்போது குளிக்காமல் மட்டும் இருந்தால் இருள் ஒரு பஞ்சார் கூடை போல அவன் மேல் கவியும் என்பதை உணர்ந்தவள் போல அருகில் வந்தாள். கையில் துண்டு வைத்திருந்தாள். அதை அவனது தோளில் போட்டவாறு...

"நீ குளிக்கிறதுக்கு கருநெல்லி வலசு அய்யனயா வரச் சொல்லணும்?" என்றாள். முகத்தில் பழங்கதையொன்றின் சுவாரசியக் குமிழி. அது 1972-இல் நடந்த சம்பவம்.

இந்த வட்டாரத்திலிருந்து கரூர் சென்று பணக்காரர் ஆன ஒருத்தர் அங்கேயே வீடு கட்டி தனது 'புதுமனை புகு விழா'வுக்கு கிராமத்து உறவினர்களை அழைத்திருந்தார். வரலாறு காணாத வசந்தமாளிகையைக் காண கிராமர்கள் எல்.ஜி.பி பஸ் பிடித்துப் போனார்கள். அங்கு சென்றவர்களில் கருநெல்லி வலசு அய்யன் முதல்காரியமாக பாத்ரூம் போய் சோப் போட்டுக் குளித்தார். பின் கண்ணாடி முன் வந்து லாக்டோ காலமைன் அப்பிக் கொண்டு அதன் மீது பவுடர் பூசினார். பிறகு வாசலுக்கு வந்தார். தனக்குத் தெரிந்தவர்களையெல்லாம் பாத்ரூம் நோக்கி ஆற்றுப் படுத்தினார்.

"சோப் போட்டுக் குளி கண்ணு!... இதப் பூசு. ஆங். அளவாப் பூசு... இப்படி... இப்படி... பவுடர் அடிச்சுக்கோ. அளவ்வா.. மூஞ்சி தைமாசச் சுவரு மாதிரியும் இருக்கப் படாது" பொட்டு விடாமல் சுகந்த சமாசாரங்களைக் காலி செய்த பின் வீட்டுக்காரரிடம் சென்றார். அவர் முறைக்காரர்தான்.

"மாப்ள... இதப் பாருங்க. இந்த ஸிந்தாலு, கூட்டிக்குர்ரா... இதெல்லாம் நமக்குத் தெரியாததல்ல. வாங்கத்தேங் கொஞ்சம் வசதி பத்தாது பாத்துக்குங்க" என்றார்.

கருநெல்லி வலசு அய்யனை நினைத்துக் கொண்டபோது சிரிப்பு சிரிப்பாக வந்தது. எங்கெங்கோ குமிழிகள் வெடித்தன. குளியலறைக் கதவைச் சாத்திக் கொண்டு முதல் தவளைத் தண்ணீரைத் தலைக்கு ஊற்றினான். பிறகு திளைத்துக் குளிக்கத் தொடங்கினான். ○

லாவண்ய மயிலம்!

குருஜி ஏ.எஸ். ராகவன்

நீலமயில் வாகனனோ
நெடிலை வேலாயுதனோ?
கோலம் நிறைந்த கோழி
கொடிபடைத்த சேவகனோ!

....

ஆறிரண்டு தோளானோ
அறுமுகத்தானோ...?
தேறுமறை கொஞ்சும்!
சிறுசதங்கை தாளானோ...!

என்று குமரக் கடவுளின் தோற்றத்தை வியந்து வியந்து கேள்வி யாக்கிப் பாடும் தாலாட்டு ஒன்று உண்டு.

முருகன் மாமயில் வாகனன் என்பதும் வேலாயுதன் என்றும் தெரியாதா...? தெரிந்த விஷயங்களையே சொல்லி வியப்பதில் கிடைக்கிற எளிய ஆனந்தத்தைத் தருகிற பாடல் இது. திருப்போரூர் சந்நிதானம் சிதம்பர சுவாமிகள் எழுதியது.

மயில்வாகனான முருகன் குன்றுதோறும் குடிகொண்டிருப்பதாகவே தமிழர்கள் நம்புகிறார்கள். குன்றே குமரன் வடிவாகிறது என்னும்போது அக்குன்று களுள் ஒன்று அவனது மயில் வாகன வடிவி லேயே காட்சி தந்தால் அது எப்பேர்ப்பட்ட சிறப்பு பெற்றுவரும்!

அந்த சிறப்பைப் பெயரிலும் பிரதேசத்தி லும் தாங்கி நிற்கிற தலம்தான் மயிலம். திண்டிவனம் தாண்டி, சென்னை – திருச்சி நெடுஞ்சாலையில் செல்கையில் மயிலம் குன்றும் கோபுரமும் தென்படும்.

குமரப்பெருமான் சூரபத்மனோடு போர் செய்தபொழுது அவன் நெடுமாமரமாக உயர்ந்து நிற்க, தனது வேலால் அதை இரண் டாகப் பிளந்தான் முருகன். அந்த இரு கூறு களும்தான் சேவலும் மயிலுமாயின – அவை சினத்தோடு முருகனை எதிர்த்துத் தாக்க முற்பட, மயில்மீது தன் பொற்பாதங்களை வைத்து அடக்கினார். முருகப் பெருமானின் பாதம்பட்டதுமே சூரபத்மனுக்கு ஞானமுண் டாகிவிட்டது. "எம்பெருமானே! எப்போதும் உன்னைத் தாங்கும் வாகனமாக நான் இருக்க வேண்டும்!" என்று வேண்டினான்.

வரம் கேட்டால் கனிந்துரு காத கடவுள் உண்டா! உடனே அளித்தார் முருகன். "ஆனால் ஒரு நிபந்தனை.. அசுரனாயிருந்த காலத்தில் செய்த பாவங்கள் தொலைய, வராக நதியின் வடகரையில் உள்ள புண்ணிய தலத்தில் மயில் வடிவிலான மலையாக நின்று தவம் புரிய வேண்டும்." என்றார்.

சூரபத்மன் உடனே அந்த ஆணையை ஏற்று வராக நதிக்கரையில் குன்றாகி மோனத் தவம் செய்தான். அவன் தவத்துக் கிரங்கி, கல்யாண முருக னாக வள்ளி தேவசேனையுடன் காட்சிதந்து ஆட்கொண்டான் முருகன்.


மயில் வடிவம் கொண்ட மலையாக சூரபத்மன் நின்ற இடம்தான் மயிலம். மயூரா சலம் என்பது பழைய பெயர்.

மயிலம் மலை மிகச் சிறிய குன்றுதான். ஒரு பக்கம் சற்று உயர்ந்து, மயிலின் விரித்த தோகைபோல் நிற்கும். மலையுச்சியில் முருகன் திருக்கோயில். அடிவாரத்தில் கோயில் மண்டபம் வழியே நுழைந்து படி ஏறிச் செல்லலாம்; அல்லது மலையைச் சுற்றி யுள்ள பாதையில் கிரிவலமாகவும் செல்ல லாம்.

தெற்கு வாசலை அடைந்து உள்ளே செல்கையில் குளிர்காற்று வீசுகிறது. அதை ஏகாந்தமாய் அனுபவித்துக் கொண்டிருக்கும் விநாயகப் பெருமானை வணங்கி உள்ளே சென்றால், காசி விஸ்வநாதரும் விசாலாக்ஷி யும் கங்கைக் கரையிலிருந்து கோடை விடு முறைக்கு வந்ததுபோல் இங்கே குன்றின்மேல் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள்!

மலையே மயில்தானென்றாலும் மூலஸ்

தலம் தோறும் தமிழ்க் கடவுள் - 12



தானத்து முருகனிடத்தில் வெகு லாவண்ய மானதொரு மயில் நிற்கிறது! வடக்கு பார்த்த நிலையில் மயில் நிற்க, முருகன் குஞ்சரியும் குறக் கொடியும் தழுவ கம்பீரமாக நிற்கிறான். திருச்சுற்றை வலம்வரும்போது அனேகம் அழகிய தோற்றங்களில் உற்சவ மூர்த்தி களைக் காண்கிறோம்.

தலத்தின் பெயருக்கேற்ப மிகப் பெரிய தங்க மயில் ஒன்று கோயிலில் இருக்கிறது. தைப் பூசம் போன்ற விசேஷ தினங்களில் இந்தப் பொன்மயில் வாகனத்தில் ஏறி வலம் வருவான் ஐயன்! மயிலின் ஒயிலும் முரு கனின் அழகும் இழைந்திழைந்து பேரழகாகத் தோன்றும் அக்காட்சி, அசுர குணங்களும் திமையும் கூட இறைவன் பாதங்களைச் சேர்கிறபோது வன்மமொழிந்து வனப்பு பெற்று பொலிவதை உணர்த்தும்.

மயிலம் தலத்தைக் குறித்து நிலவும் இன்னொரு கதையும் உண்டு.

சிவகணங்களின் தலைவர்களுள் ஒருவ ரான சங்கு கன்னன் என்பவன், தான் செய்த தவறுக்குப் பிராயச்சித்தமாக பூவுல கம் அனுப்பப்பட்டான்.


"வேத–ஆகமங்களின் பொருளை எடுத் துரைத்து நீ சைவத்தைத் தழைக்கச் செய் வாயாக! அவ்வாறு வாழ்வைக் கழிக்குங்கால் முருகனுடன் போர் புரிகிற ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டு, அதனால் நீ முக்தி அடைவாய்!" என்று சாப விமோசனத்துக்கான மார்க்கத் தையும் காட்டி அவனைப் பூவுலகுக்கு அனுப்பினார்.

சங்கு கன்னன் பூவுலகில் பிறந்தபோது,

தவம் செய்யத் தேர்ந்தெடுத்த இடம் மயிலம். இளமை முறுக்கும் சக்தியும் ததும்பும் வாலி பனாக அவன் முருகனை நோக்கித் தவமி யற்ற ஆரம்பித்தான். அதைக் கண்டவர்கள் அவனை 'பாலசித்தர்' என்று அன்போடு அழைக்க ஆரம்பித்தார்கள்.

கடுமையான தவம் செய்த போதிலும் முருகன் இலேசில் மசிந்துவிடவில்லை. சிவ அபராதம் செய்தவன் என்பதால் சங்கு கண் ணனிடம் மிகுந்த கோபம்; பாராமுகமாகவே இருந்தான்.

தேவியர் இருவரும் எடுத்துச் சொல்லிப் பார்த்தார்கள். 'இங்கே தவத்தில் இருப்பவன் சங்கு கண்ணன் அல்ல; பால சித்தர். அவரது பக்தி மெய்யானது; அதை ஏற்க வேண்டும்' என்று முருகனிடம் சிபாரிசு செய்தார்கள்.



முருகன் எந்த சிபாரிசையும் ஏற்பதா யில்லை. வள்ளியும் தெய்வானையும் 'வந்தது வரட்டும்!' என்று கோபித்துக் கொண்டு பால சித்தரின் ஆசிரமத்துக்குப் போய்விட்டார் கள்!

வேறு வழியின்றி, முருகன் வேடனாக வேஷம் பூண்டு, தேவியரைத் திரும்ப அழைத்துவரும் பொருட்டு பாலசித்தர் ஆசிர மத்துக்குச் சென்றார். வந்திருப்பது யாரென்று அறியாமல், பாலசித்தர் அந்த 'வேடனுடன்' மல்லுக்கு நிற்க, அவரைத் தோல்வியுறச் செய்து விமோசனமளித்தான் முருகன். இரு தேவியருடன் மயில்வாகனனாக கல்யாணத் திருக்கோலத்தில் காட்சி தந்து ஆட்கொண் டான். அதுமட்டுமின்றி, பாலசித்தர் விருப்பப் படி மயிலம் மலைமீது நிரந்தரமாக எழுந் தருளி கோயிலும் கொண்டான்.

இதன் பிறகு பாலசித்தர் பல சித்து விளை யாடல்கள் புரிந்து இறுதியில் மயூராசலத்தில் சிபெருமானுடன் ஐக்கியமானதாகச் சொல் வார்கள். பாலசித்தரின் முதல் சீடரான சிவஞான தேசிகர் அமைத்த பொம்மைபுர ஆதின மடத்தினால்தான் இன்று மயிலம் கோயில் நிர்வகித்து பராமரிக்கப்பட்டு வருகிறது. மயூராசலபுராணம் என்ற நூல் இந்த வரலாறுகளையெல்லாம் விரிவாய்ச் சொல்கிறது.

புன்னை மரத்தைத் தல விருட்சமாகவும் வராக நதியைப் புனிதப் புனலாகவும் கொண்ட இத்தலத்தில் மாதந்தோறும் பரணி கிருத்திகை நாட்கள் சிறப்பாகக் கொண் டாடப்படுகின்றன. கந்தசஷ்டி தவிர, ஆடிப் பெருக்கு, நவராத்திரி, மாசி மகம், பங்குனி உத்திரம் என்று ஆண்டு முழுதும் கொண் டாட்டங்கள் நிகழும். வசந்தோத்ஸவம் சிறப் பாய் நடைபெறும்.

வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமி கள், பாம்பன் சுவாமிகள் ஆகியோரது பாடல்கள் தவிர வைத்தியநாத கவிராயரின் பிள்ளைத் தமிழும் தியாகராஜ கவிராயரின் தலபுராணமும் இந்த ஊருக்கு உண்டு.

எல்லாவற்றுக்கும் மேலாக, அருணகிரி நாதரின் மயிலம் திருப்புகழ் உண்டு:

மிதமிஞ்சு போதக வேலா ஆளா
மகிழ்சம்பு வேதொழு பாதா நாதா
மயில்வந்தண் மாமலை வாழ்வே
வானோர் பெருமாளே!

என்று முடிகிற திருப்புகழ்.

நெடியமுது ககனமுக டுறவீசி
நிமிருமொரு
நீலக் கலாப மயிலாம்

என்று மயில் விருத்தத்தில் அருணகிரி நாதர் குறிப்பிடும் வர்ணனைக்கு வடிவு கொடுத்தது போல் நிற்கிறது மயிலம் இன்று. – வான முகடுவரை வீசி நிமிரும் நெடுமுது குடன் நீலப் பச்சைமயில்.

அகருமரு மணம்வீசு தணிகைஅபி
ராமவேள்
அடியவர்கள் மிடிய கலவே
அடல்வேல் கரத்தசைய ஆறிரு
புயங்களில்
அலங்கிற் குழாம் அசையவே
மகரகன கோமளக் குண்டலம்
பலஅசைய
வல்லவுணர் மனம்அசைய மால்
வரை அசைய உரகபிலம் அசையஎண்
டிசைஅசைய
வையாளி வேறு மயிலே

என மயிலின் அழகும் அது சுமக்கும் முருகன் அழகுமாகப் பின்னி வருகிற மயில் விருத்தம். மயிலம் குன்றையும் முருகனையும் ஒருசேர நினைவுபடுத்தி நெஞ்சை நிறைக் கிறது.

(அடுத்த வாரம் :
வில்லுடையான்பட்டு வேலவன்)



குடைச்சல் குப்புசாமி!

ஆண்டிப்பட்டி தி.மு.க. வேட்பாளர் ஆசையனா, மூக்கையாவா அல்லது கம்பம் செல்வேந்திரனா என்று ஊகங்கள் அடிபட்ட நிலையில், வைகை சேகர் என்ற பாலசுந்தரத்தை வேட்பாளராக அறிவித்திருக்கிறார்கள். இருமுறை ம.தி.மு.க.வுக்குச் சென்று வந்த சேகர், 1996ல் ம.தி.மு.க. வேட்பாளராக நின்று சுமார் 18000 வோட்டுக்களை வாங்கியவர். பொன். முத்துராமலிங்கத்தின் சிஷ்யனாக இருந்தாலும், மு.க. அழகிரியின் மனத்தில் இடம் பிடித்தவர். ஒன்றியச் செயலாளராக இருப்பதால் தொகுதியின் மூலை முடுக்குகளை அறிந்தவர். கட்டப் பஞ்சாயத்துக்காரர் என்று எதிரணியால் விமர்சிக்கப்படுபவர். இன்றைய சூழ்நிலையில் இந்த ஒரு குற்றச்சாட்டே அவருக்குப் பலமாக மாறி வேட்பாளர் வரை கொண்டு நிறுத்தியிருக்கிறது.

தொகுதியில் பெரும்பான்மையாக உள்ள பிறன்மலைக் கள்ளர் வகுப்பைச் சேர்ந்தவராதலால் அது கூடுதல் பலம். மூத்த தலைவர்கள், அழகிரியின் பரிந்துரையை ஏற்று, சேகரைப் போட்டுவிட்டாலும் ஸ்டாலின் முழு மனத்துடன் அவரை ஏற்கவில்லை என்றும் ஒரு பேச்சு இருக்கிறது. அறிவாலயத்தில் சேகரை அறிமுகப்படுத்தும் நிகழ்ச்சியில் ஸ்டாலின் மிஸ்ஸானது, பலருக்கு ஆச்சரியம். ஆனால் "ஏற்கெனவே திட்டமிட்டபடி, விழுப்புரம் பொன்முடி வீட்டுத் திருமணத்தில் கலந்து கொண்டு, அப்படியே திருச்சிக்குச் சம்பந்தி வீட்டு விசேஷத்துக்குச் சென்று விட்டதால்தான் கலந்து கொள்ள முடியவில்லை" என்று ஸ்டாலினுக்கு நெருங்கியவர்கள் சொல்கிறார்கள். இந்த நிலையில் பிரசார யுக்தியை வகுப்பதில் மும்முரமாக ஈடுபட்டிருக்கிறது தி.மு.க. வழக்கப்படி சரத்குமார் உட்பட நடிகர்களைக் களம் இறக்குவது ஒரு பக்கம் இருக்க, மிக, மிக எளிமையான பிரசார பாணியைக் கடைப்பிடிக்க இருக்கிறார்களாம்.

ஆண்டிப்பட்டி தேர்தல் முடிந்து, அம்மா பொறுப்பேற்ற கையோடு, தி.மு.க. மாண்புகள் மீதான நடவடிக்கைகளில் வேகம் காட்டப்படுமாம். ஊழல் கண்காணிப்பு மற்றும் குற்றப் பிரிவு போலீஸ் துறையில் முதல் தகவல் மற்றும் குற்றப் பத்திரிகை தயாரிப்பு சம்பந்தமாக இப்போதே ஓவர்டைம் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆண்டிப்பட்டி தேர்தலுக்கு முன்னரேகூட சிலரைக் கைது செய்து "தி.மு.க.வைத் தோலுரித்து காட்ட வேண்டும்" என்று சில சீனியர் அ.தி.மு.க. பிரமுகர்கள் துடித்தாலும் "அது போன்ற செயல், அனுதாபத்தைத் தேடித் தந்து விடுமே" என்ற பயமும் இருக்கிறதாம். இந்த நிலையில் ஆக்டிவ்வாகச் செயல்படும் தி.மு.க. மக்களவை உறுப்பினர் குப்புசாமி பற்றியும் "ரொம்பவும் குடைச்சல் கொடுக்கிறாரே" என்று பேசிக் கொள்கிறார்கள். ஆண்டிப்பட்டியில் தேர்தல் நடத்தக் கூடாதென்று குப்புசாமி தில்லியில் போராடியது மட்டுமல்லாமல் ஜெ.மீதுள்ள சொத்துக் குவிப்பு லண்டன் ஓட்டல் வழக்குகளை நடுநிலையான விசாரணை அதிகாரிகளிடம் ஒப்படைக்க வேண்டும் என்று உயர்நீதி மன்றத்தில் வழக்கு பதிவு செய்ததும் எரிச்சலுக்குக் காரணம்.

— சஞ்சயன்

படம் : சௌரா

கண்டு கொள்ளப்படாத காஞ்சி!

"நீதிக் கட்சி உடைந்து திராவிடர் கழகம் உருவான மண், தி.க. உடைந்து தி.மு.க. உருவான ஊர், அண்ணா மறைவுக்குப் பிறகு அடுத்த தலைவராக கலைஞரை முன்மொழிந்ததும் இதே நகரில்தான் என்றெல்லாம், தமிழக அரசியலுக்கும், காஞ்சிபுரத்திற்கும் நெருக்கமான அரசியல் பந்தம் இருந்ததென்னவோ உண்மை. ஆனால் இப்போது அரசியல்வாதிகளும் ஆட்சியாளர்களும் இந்த நகரத்தைத் திரும்பிப் பார்ப்பதேயில்லை" என்று பொருமுகிறார்கள் காஞ்சிபுரம்வாசிகள். பின்னே! காஞ்சிபுரத்தைச் சுற்றி 40 கி.மீ. தொலைவில் நான்கு எம்.பி. தொகுதிகள் இருந்தும், காஞ்சிபுரம் மட்டும் இன்னும் சட்டமன்றத் தொகுதிதான். செங்கல்பட்டு எம்.பி.யோ காஞ்சிபுரத்தைத் திரும்பிக்கூட பார்ப்பதில்லை என்கிறார்கள்.

இரண்டு லட்சம் மக்கள் தொகை கொண்ட காஞ்சிபுரத்தை, சுற்றுலா சிறப்பு நகரம் என்று அறிவித்துவிட்டு, எந்த பெரிய திட்டத்தையோ, தொழிற்பேட்டைகளையோ தராமல் மறுக்கிறார்கள். காஞ்சிபுரத்திற்கு மாவட்டத் தலைநகரம் என்று பெயர்தானே தவிர, பல மாவட்ட நிர்வாக அலுவலகங்கள் சென்னையில் இயங்குகின்றன.


உதாரணத்திற்குக் காஞ்சிபுரம் மாவட்ட கூட்டுறவு பண்டகசாலை சென்னை பிரகாசம் சாலையிலும், காஞ்சி மாவட்ட தொலைத் தொடர்பு அலுவலகம் மற்றும் காவல் துறை துணைத் தலைவர் அலுவலகம் போன்றவை தேனாம்பேட்டையிலும், காஞ்சி மாவட்ட பால் உற்பத்தியாளர் சங்கம் அயனாவரத்திலும்... என்று அடுக்கி கொண்டே போகலாம் என்கிறார்கள்.

காஞ்சிபுரம் நகர எல்லையை ஐந்து கிலோ மீட்டர் தூரம் விரிவாக்கும் திட்டத்தையும், அதிக செலவு பிடிக்கும் என்று கிடப்பில் போட்டுவிட்டார்கள் என்றும் குற்றச்சாட்டுகளை அடுக்குகிறார்கள்.

காஞ்சிபுரம் நகரசபை, எப்போதும் தி.மு.க. கோட்டை என்று சொல்லக் கேள்வி. ஆனால் கடந்த தி.மு.க. ஆட்சியின்போது அ.தி.மு.க. கைப்பற்றிக் கொண்டது. பழையபடி இப்போது அ.தி.மு.க. ஆட்சி வந்ததும் தி.மு.க. திரும்பவும் வென்றிருக்கிறது. கட்சியில் அடிமட்டத் தொண்டராக இருந்து, முன்னேறியவர் என்று வர்ணிக்கப்படும் சன்பிராண்ட் கே.ஆறுமுகம்தான் காஞ்சி நகர அவைத் தலைவர். நாற்பதைத் தொடாத இளைஞர். நம்மோடு பேசினார்.

"பதினோரு நகர சபையில் முழு மெஜாரிட்டியுடன் இருக்கிறோம். மாவட்ட பிரதிநிதியாக இருந்த எனக்குத் தலைவர் கலைஞர் முதல் வாய்ப்புக் கொடுத்திருக்கிறார். அதைச் செவ்வனே பயன்படுத்தி பெயர் வாங்குவேன். இப்போது முதல் முக்கியத்துவம் பாதாள சாக்கடை விஸ்தரிப்பு திட்டம்தான். இதற்காக முதல் கட்ட நிதி 5.67 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். ஐந்து கி.மீட்டர் தூரம் நகர எல்லை விரிவாக்கத்தையும் செயல்படுத்தியே தீருவோம். காஞ்சிபுரம் வட்டாட்சியர் அலுவலகம் ஆண்டர்சன்

• ஆறுமுகம்







• பன்னீர்செல்வம்


• ராஜகோபால்


• சீனிவாசன்


• அண்ணா


• கல்கி

அண்ணாவுக்கு 'அறிஞர்' பட்டம் கொடுத்தவர்!

அரசியல் நாகரிகத்திற்கும் தோழமைக்கும் முன்மாதிரியாக விளங்கியது காஞ்சிபுரம் என்றால் மிகையில்லை. அறிஞர் அண்ணாவின் குடும்ப டாக்டரான பி.எஸ்.சீனிவாசன், பட்டுக்கோட்டையில் பிறந்து, சென்னையில் படித்தாலும், காஞ்சிபுரத்தில் மருத்துவ தொழிலை ஒரு சேவையாகச் செய்து வந்தவர். பழுத்த காங்கிரஸ்காரரான அவர் 1924ல் இந்திய தேசிய காங்கிரசில் சேர்ந்து சுதந்திரப் போராட்டத்தில் நேரடியாகப் பங்கு கொண்டு நான்கு முறை சிறை சென்றவர். பிறகு எம்எல்ஏ., எம்எல்சி. என்று பதவி வகித்த சீனிவாசன், தொடர்ந்து பதினான்கு ஆண்டுகள் காஞ்சி நகரசபைத் தலைவராக இருந்திருக்கிறார். பொதுச் சேவையில் தம்மை கரைத்துக் கொண்டவர். டாக்டர் சீனிவாசன் - அண்ணா நட்பு குறித்து, சீனிவாசனின் மருமகன் டாக்டர் ராஜகோபால் சொல்கிறார் :


''அண்ணா முதல்வராக இருந்த நேரத்திலும் டாக்டர் வருகிறார் என்றால் எழுந்து நின்று அண்ணா மரியாதை செய்வார். அதே போல சீனிவாசனும் அளவு கடந்த பாசமும், நட்பும் அண்ணாமீது வைத்திருந்தார். 1957ல் அண்ணாவை எதிர்த்துப் போட்டியிடும்படி சீனிவாசனை காங்கிரஸ் பணித்தது. தேர்தலில் சீனிவாசன் தோல்வியுற்றார். ஆனால் இது தோல்வியே கிடையாது. குட்டுப் பட்டாலும் மோதிரக் கையால் அல்லவா குட்டுப்பட்டேன் என்று சொன்னார் டாக்டர் சீனிவாசன்'' என்று நினைவு கூர்கிறார்.

''காஞ்சிபுரத்தில் அறிஞர் அண்ணாவும், அமரர் கல்கியும் கலந்து கொண்டு பேசிய ஒரு கூட்டத்தில், தயாரிப்பு இல்லாமலேயே கொடுத்த தலைப்பில் பிய்த்து உதறினார் அண்ணா. வியந்துபோன கல்கி மேடையிலேயே அவருக்கு 'அறிஞர்' என்ற பட்டத்தை வழங்கி கௌரப்படுத்தினார். அந்த அளவு திறமையாளர்கள் பரஸ்பரம் பெருந்தன்மையோடு நடந்து கொண்ட நாட்கள் அவை'' என்று ஏக்கத்தோடு சொல்கிறார் டாக்டர் ராஜகோபால்.

மற்றும் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிகள் உள்ள போக்குவரத்து நெருக்கடியான இடத்தில் சுரங்கப்பாதை அமைக்க திட்டமிட்டுள்ளோம். அதேபோல எனது பதவிக் காலத்திற்குள், 'யாத்ரி நிவாஸ்' கட்டி முடித்து திறந்திட இருக்கிறோம். இப்போது நடைபெற்று வரும் இந்தப் பணிகள் தவிர ஒவ்வொரு புதன் கிழமையும், ஒவ்வொரு வார்டு மக்களையும் சந்தித்து அவர்களின் குறைகள், பிரச்சனைகள் கேட்டு எத்தனை நாளில் தீர்க்க முடியும் என்று அவர்களுக்கு உறுதி அளித்து வருகிறோம். மக்களோடு நேரடித் தொடர்பு வைத்திருப்பதே எங்கள் பலம்'' என்கிறார்.


அ.தி.மு.க. தொடங்கிய நாள் முதல் அதில் அங்கம் வகித்துவரும் காஞ்சி பன்னீர்செல்வம், இரண்டு முறை நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவர். உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர், இப்போது காஞ்சி நகர சபைத் தேர்தலில் குறைந்த வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி வாய்ப்பை நழுவ விட்டார். இத்தனை முறை பதவிகள் வகித்தும், காஞ்சி நகருக்கு இவர் எதுவுமே செய்யவில்லை என்பது குற்றச்சாட்டு. இதை மறுக்கிறார் பன்னீர்செல்வம்.

''நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியை முறையாக, முழுவதுமாகப் பெற்று தொகுதி முழுவதுமுள்ள பல பள்ளிக் கூடங்களுக்குக் கட்டிடம் கட்ட ஒதுக்கிக் கொடுத்திருக்கிறேன். இதில் காஞ்சிபுரம் நகரில் உள்ள சில பள்ளிகளும் அடங்கும். காமாட்சி அம்மன் கோவிலைச் சுற்றி ரூபாய் இருபது லட்சம் செலவில் சிமெண்ட் சாலை அமைத்துக் கொடுத்திருக்கிறேன். இப்படி நிறைய சொல்ல முடியும். சென்னை காஞ்சிபுரம் அகல ரயிலுக்கு அடிக்கல் நாட்டியதே நான்தான்'' என்றவர் ''காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ். திருநாவுக்கரசு மாநில அமைச்சராகி இருக்கிறார். அம்மா சொல்வதுதான் எங்களுக்கு வேத வாக்கு. எங்கள் அமைச்சரோடு இணைந்து மக்கள் பணியில் தொடர்ந்து ஈடுபடுவோம்'' என்கிறார்.




வட்டமேஜை









புலிகள் நம் இனம்தானே?

✉ விடுதலைப் புலிகள் நமது இனம்தானே; இதில் அரசியல் பாகுபாடின்றி நாம் அனைவரும் ஒருமித்த குரலில் ஆதரவு தந்திருக்க வேண்டும். ஆதரவு தராவிட்டாலும் பரவாயில்லை, எதிர்ப்பு தெரிவிக்காமல் இருக்கலாம் அல்லவா?

பேரூர், சு.சரவணன்

✉ கவிதைக் கடலான வாலிக்கு இளைய ராஜாவைப் புகழ்ந்து பாட எவ்வளவோ வார்த்தைகள் கிடைக்கும். அப்படியிருக்க 'ஜிப்பா போட்ட ரமணர்' என்று கூறியிருப்பதை மிகை என்பதோடல்லாமல், ரமணரை, அந்த மகானைத் தாழ்த்தியதாகும். ரமணருக்கு ஒப்பு உவமைகூற இயலுமா?

பெங்களூர், விஜயராஜன்

✉ கரும்பின் மூலம் கிடைக்கும் எத்தனால் மூலம் கார் ஓட்டலாம் என்கிற செய்தி, பொங்கலைக் காட்டிலும் தித்திப்பாக இருந்தது.

லால்குடி, இராஜேந்திரன்

✉ பிள்ளையார் 'பாய்' படித்தேன். மெய் சிலிர்த்தது. 'எம்மதமும் சம்மதம்' என்று, எம்மதமும் சொல்லும் காலம் வரத்தான் செய்யும்!

சென்னை, எஸ்.ஏ.பாலசுப்பிரமணியன்

✉ போர் வேணுமா? வேண்டாமா? விவாத கட்டுரை வெகு அருமை. இரு நாடுகளுக்கும் இடையே போர் தேவையற்றது. போர் நடந்தால்... நாட்டின் பொருளாதாரம் பாதிக்கும். இதனால் விலைவாசி உயர்வுக்கு வழி பிறக்கும். இப்பொழுதே இந்தியாவும் - பாகிஸ்தானும் விலை வாசியால் பாதிக்கப்பட்டுத்தான் இருக்கின்றன.

திருச்சிற்றம்பலம், சி.சுரேஷ்

✉ "எங்க பிழைப்பைக் கெடுக்கலாமா? எனக் கூறும் சின்னத்திரை நாயகி நிஷாவின் குற்றச்சாட்டிலும் நியாயம் இருக்கத்தானே செய்கிறது!

மதுரை, ஆர்.லட்சுமி

✉ ஆண்டிப்பட்டி, வாணியம்பாடி, சைதாப்பேட்டை இடைத் தேர்தல் நடக்கவிருக்கும் தருணத்தில் புகழ்பெற்ற சில மறக்க முடியாத இடைத் தேர்தல்கள் பற்றிய தகவலை வெளியிட்டு அசத்திவிட்டீர்கள்.

அயன்புரம், த.சத்தியநாராயணன்

✉ விடுதலைப் புலிகள் சென்னையில் பேச்சு வார்த்தை நடத்த, பாலசிங்கம் தங்குவதற்கு அனுமதி அளிக்கக் கூடாது என்று காரண காரியங்களுடன், அதன் பின் விளைவுகள் பற்றி ஆராய்ந்து, அலசி தலையங்கம் எழுதியிருந்தீர்கள். உங்கள் தலையங்கத்தைப் படித்த சமயத்தில், தமிழகத்தில் உள்ள பெரும்பாலான முக்கிய அரசியல் கட்சிகள் மேற்கண்ட விஷயத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து, நம் வயிற்றுக்குப் பாலை வார்த்திருக்கிறார்கள்.

மொரட்டுப்பாளையம், சு.நா.இராஜேஸ்வரன்

✉ 'தமிழ் திரையுலகம் அதளபாதாளத்திற்குப் போய்விட்டது என்று சொல்லப்படுகின்ற இக்காலத்தில் இனியதொரு படைப்பாய், வெளிவந்துள்ள 'அழகி' திரைப்படத்தின் விமர்சனம் அருமை.

பெங்களூர், ப. மூர்த்தி

✉ 'சுவடுகள்' சுவாரஸியம் மிகுந்து ஈர்ப்பு தருகிறது. வாரியார் பற்றியதை படித்து ரசித்'தோம்'தேன்' சுவைத்'தேன்'. அவரது தமிழ் ஆற்றல் கண்டு மலைத்'தேன்'. கண்ணகி சிலை பற்றி தமிழறிஞர்களின் இன்றைய நிலை கண்டு வாரியார் என்ன கூறியிருப்பார் என நினைத்'தேன்'. பரிதவித்'தேன்'.

மயிலாடுதுறை, டி.எஸ்.டி.ராயன்

சிவகாமியின் சபதம்

மூன்றாம் அத்தியாயம்

சிநேகப் பிரதிக்ஞை

ஒரு பக்கம் மாமல்லருடன் சல்லாபம் செய்துகொண்டு வந்தபோதே, மற்றொரு பக்கத்தில் காஞ்சிமா நகரின் விசாலமான இராஜ வீதிகளையும், வீதியின் இரு புறமும் காணப்பட்ட மாட மாளிகைகளையும், ஈ மொய்ப்பது போல் ஜனக் கூட்டம் நிறைந்த கடை வீதிகளையும், இடையிடையே தீபாலங்காரங்களுடன் விளங்கிய சிவாலயம் விஷ் ஆலயங்களையும் தெய்வத் தமிழை வளர்த்த சைவ வைஷ்ணவ மடங்களையும், பௌத்தர் சமணர்களின் கோயில்களையும், வேதகோஷம் எழுந்த ஸமஸ்கிருத கடிகை ஸ்தானங்களையும், சிற்பசித்திர கலா மண்டபங்களையும் பரஞ்சோதி கண்கொட்டா ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டு வந்தார்.

எட்டு மாதத்துக்கு முன்பு அவர் தெற்குக் கோட்டை வாசல் வழியாகப் பிரவேசித்த அன்றிரவு இருந்ததைக் காட்டிலும் இன்று நகரில் கலகலப்பும் களையும் அதிகமாயிருந்தன. அன்றைக்கு யுத்தச் செய்தி திடீரென்று வந்திருந்தபடியாலும் கோட்டை வாசல்கள் சாத்தப்பட்டு நகரமெல்லாம் ஒற்றர் வேட்டை நடந்து கொண்டிருந்தபடியாலும் காஞ்சி நகரம் அப்படிப் பொலிவிழந்து காணப்பட்டது போலும்! அந்த ஆரம்ப பீதிக்குப் பிறகு ஜனங்கள் மறுபடியும் ஒருவாறு மனோதைரியம் அடையவே எல்லாக் காரியங்களும் வழக்கம் போல் நடந்து வருகின்றன போலும்! ஆனால் இதெல்லாம் எத்தனை நாளைக்கு? அதி சீக்கிரத்தில் மீண்டும் இந்தச் சௌந்தரிய

அமரர் கல்கி

நகரம் அழகும் பொலிவும் இழந்து இருளடைந்து ஜனசூன்யமாகத் தோன்றப் போகிறதல்லவா? - இந்த எண்ணங்கள் எல்லாம் மாமல்லரின் ரதத்தில் வந்து கொண்டிருந்தபோது பரஞ்சோதியின் உள்ளத்தில் இடையிடையே எழுந்து கொண்டிருந்தன.

ஏகாம்பரநாதர் கோயில் சந்நிதிக்கு வந்ததும் அந்தத் திவ்ய சந்நிதியின் மகோந்நதமான தோற்றத்திலிருந்தே அதுதான் ஏகாம்பரர் கோயிலாயிருக்க வேண்டுமென்று பரஞ்சோதி ஊகித்து, தம்முடைய ஊகம் சரிதானா என்று மாமல்லரை வினவினார்.

"ஆம்; தளபதி! இந்தச் சந்நிதிக்கு இதற்கு முன்னால் நீர் வந்ததே இல்லையல்லவா?" என்று மாமல்லர் கேட்டார்.

"இல்லை; வந்ததில்லை. முன்தடவை இந்த நகரத்திற்குள் நான் பிரவேசித்த போது, ஏகாம்பரர் சந்நிதியைத்தான் தேடிக்கொண்டு வந்தேன். ஆனால் இந்த இடம் வரையில் அன்றைக்கு வந்து சேரவில்லை. கொஞ்சம் ரதத்தை நிறுத்தச் சொல்லுங்கள். காஞ்சியின் இருதய ஸ்தானத்தை நன்றாய்ப் பார்க்கிறேன்" என்றார் பரஞ்சோதி.

கோயிலுக்குள்ளே ஒரு தீப வரிசைக்குப் பின் இன்னொரு தீப வரிசையாக முடிவின்றி ஜொலித்துக் கொண்டிருந்த அலங்கார தீபங்களையும், கோயிலுக்கெதிரே, கம்பீரமான தேர் நின்ற நாற்சந்தியையும் தேரடியிலிருந்து நாலா பக்கத்திலும் பிரிந்து சென்ற தேரோடும் வீதிகளையும் குன்றுகளைப் போலப் பலவகைப் புஷ்பங்கள் குவிந்து கிடந்த கடைகளையும், தேங்காயும் கதலியும் மலை மலையாகக் குவிந்து கிடந்த கடைகளையும், அற்புதமான சிற்பத் திறமுடைய தூண்களின் மேலே அமைந்த நூற்றுக்கால் மண்டபங்களையும் பரஞ்சோதி பார்த்துவிட்டு, "ஆஹா! புலிகேசியின் காதலுக்குக் காரணம் இல்லாமற் போகவில்லை!" என்றான்.

"புலிகேசியின் காதலா? என்ன சொல்கிறீர், தளபதி?" என்று மாமல்லர் கேட்டார்.

"புலிகேசி இந்தக் காஞ்சி சுந்தரியின் மேல் கொண்டிருக்கும் காதலைப் பற்றி வீரர் வஜ்ரபாஹு எனக்குச் சொன்னார். காஞ்சி என்னும் பெயரைக் கேட்டதும் காதலியின் பெயரைக் கேட்டால் காதலனுடைய முகத்திலே என்ன மாறுதல் உண்டாகுமோ, அம் மாதிரி மாறுதல் புலிகேசியின் முகத்தில் உண்டாயிற்றாம்!"

"தளபதி! வீரர் வஜ்ரபாஹு எவ்வளவுதான் சாமர்த்தியசாலியானாலும், அப்படித் துணிந்து புலிகேசியிடம் போயிருக்கக்கூடாதல்லவா? உம் கருத்து என்ன?" என்று மாமல்லர் கேட்டார்.

அதற்கு மறுமொழி சொல்லாமல் பரஞ்சோதி, "பிரபு! இங்கே திருநாவுக்கரசர் மடம் எது?" என்றார்.

"அதோ வெறுமையாய்க் கிடக்கிறதே, அந்தக் கட்டடந்தான்..!"

"ஆஹா! இந்த மடத்தில் சேர்ந்து தமிழ்க் கல்வி கற்பதற்காகத்தான் வந்தேன். நான் கல்வி கற்பதற்காக வந்த முகூர்த்தம் மடத்தையே மூடும்படியாகி விட்டது!" என்றார் பரஞ்சோதி.

நரசிம்மவர்மர் மீண்டும் இளநகை புரிந்துவிட்டு, "பல்லவ குலத்துக்கு நீர் எவ்வளவோ மகத்தான சேவைகளையெல்லாம் செய்ய வேண்டுமென்று ஏற்பட்டிருக்கும்போது நாவுக்கரசரின் சீடராக நீர் எப்படிப் போயிருக்க முடியும்? அதோடு, என்னிடம் நீர் தமிழ் பயில வேண்டும் என்பதும் தெய்வத் தமிழ் மொழியை அளித்த இறைவனுடைய சித்தமாக ஏற்பட்டிருக்கிறதே!"

"இதைத் தெரிந்து கொண்டுதான் அன்றிரவு அந்த யானை மதங்கொண்டு ஓடி வந்ததோ, என்னவோ? அதன் காரணமாகத்தானே இப்படியெல்லாம் நேரிட்டது?" என்றார் பரஞ்சோதி. உடனே சட்டென்று நினைத்துக் கொண்டு, "ஐயா! ஆயனரும் சிவகாமியும் சுகமாயிருக்கிறார்களா?" என்று

கேட்டார்.

'சிவகாமி' என்ற பெயரைக் கேட்டதும் மாமல்லரின் முகத்தில் ஏற்பட்ட மாறுதலைப் பரஞ்சோதி கவனியாமல் போகவில்லை. 'ஆஹா! காதலைப் பற்றிய வஜ்ரபாஹுவின் கூற்றுக்கு மாமல்லரே உதாரணமாக இருக்கிறார்!' என்று மனத்தில் எண்ணிக்கொண்டார்.

மாமல்லர் மறுமொழி கூறிய போது அவருடைய குரலிலே கூட மாறுதல் இருந்தது. "சுகமாயிருக்கிறார்கள் என்றுதான் அறிகிறேன், தளபதி! ஆனால், அவர்களை நான் பார்த்துப் பல மாதங்கள் ஆயின. ஆயனரின் பழைய அரண்ய வீட்டிலேதான் அவர்கள் இருக்கிறார்கள். சக்கரவர்த்தியின் கட்டளைப்படி துறைமுகத்தில் திருப்பணி செய்த கல் தச்சர்களையெல்லாம் * பாரத மண்டபங்கள் கட்டுவதற்கு அனுப்பிய பிறகு ஆயனரும் மாமல்லபுரத்திலிருந்து தமது அரண்ய வீட்டுக்குத் திரும்பி வந்து விட்டார்" என்று மாமல்லர் கூறியபோது, அவருடைய வார்த்தைகளில் முன்னே காணப்படாத உணர்ச்சி தொனித்தது.

மறுபடியும் மாமல்லர் பரஞ்சோதியின் கரங்களை அழுத்திப் பிடித்துக் கொண்டவராய் உணர்ச்சி ததும்பிய குரலில் கூறினார். "தளபதி பல்லவ சாம்ராஜ்யத்துக்கு எவ்வளவோ சேவை சென்ற எட்டு மாதத்தில் செய்திருக்கிறீர்; இன்னும் எவ்வளவோ செய்யப் போகிறீர். ஆனால் அன்றிரவு நீர் செய்த வீரச் செயலைப் போன்ற மகத்தான சேவை வேறொன்றும் இருக்க முடியாது. ஆயனரையும் சிவகாமியையும் காப்பாற்றினீர் அல்லவா? அந்தச் செயலை நான் எவ்வளவு தூரம் பாராட்டுகிறேன் என்பதற்கு இதோ அடையாளத்தைப் பாரும்!" என்று கூறி அன்று மதயானை மீது பரஞ்சோதி எறிந்த வேலை எடுத்து நீட்டினார்.

மாமல்லரின் உணர்ச்சி ததும்பிய வார்த்தைகளினால் பரஞ்சோதியின் மனமும் கனிந்திருந்தது. எனவே, அவர் மறுமொழி கூற முடியாதவராய் மாமல்லர் நீட்டிய வேலை வாங்கிக் கொள்வதற்காக ஒரு கையினால் அதன் அடிப் பகுதியைப் பிடித்தார்.

நரசிம்மவர்மர் வேலைக் கொடுக்காமல் தாமும் அதை ஒரு கையினால் பிடித்துக் கொண்ட வண்ணம் சொன்னார்: "இந்த ஏகாம்பரர் சந்நிதியில் நான் எத்தனையோ தடவை எனக்கு ஓர் உற்ற நண்பனை அளிக்க வேண்டுமென்று பிரார்த்தனை செய்திருக்கிறேன். அந்தப் பிரார்த்தனையின் பயனாகவே நீர் இந்தக் காஞ்சிக்கு வந்ததாக நம்புகிறேன். தளபதி! இந்த சந்நிதியிலேயே நீரும் நானும் இன்று சிநேகப் பிரதிக்ஞை செய்து கொள்வோம். ஆயனரையும் சிவகாமியையும் காத்த இந்த வீரவேலின் மீது ஆணை வைத்து நம்முடைய நட்பை நிலைப்படுத்திக் கொள்வோம்" என்றார்.

ஏகாம்பரநாதரின் திருச்சந்நிதியில் அப்போது தீபாராதனைக்குரிய ஆலாட்சி மணி "ஓம் ஓம்" என்று ஒலித்தது.

அன்றிரவு கண்ணபிரான் கமலியிடம் சொன்னான்: "என் கண்ணே! உன்னுடைய சிநேகிதி சிவகாமியின் சக்களத்தியை இன்று ரதத்தில் வைத்து ஓட்டிக் கொண்டு வந்தேன். அதை நினைத்தால் எனக்குத் துக்கம் துக்கமாய் வருகிறது!"

"இது என்ன பிதற்றல்? நீ சொல்வது உண்மையானால் அவள் யார் என்று இப்பொழுது சொல்லு! உடனே போய் விஷங் கொடுத்துக் கொன்று விட்டு வருகிறேன்" என்றாள் கமலி.

*** பல்லவச் சக்கரவர்த்திகளின் காலத்தில் தொண்டை மண்டலத்துக் கோயில்களில் பாரத மண்டபங்கள் கட்டப்பட்டதுடன், பாரதம் வாசிப்பவர்களுக்கு மானியம் விடப்பட்டது என்பது கல்வெட்டுக்களின் ஆதாரம் உடைய சரித்திர உண்மையாகும்.**


''அவன் இல்லை, அவன்! மதயானை மேல் வேல் எறிந்து உன் சிநேகிதியைக் காப்பாற்றிய வாலிபன் போர்க்களத்திலிருந்து திரும்பி வந்திருக்கிறான். அவன் இப்போது காஞ்சிக் கோட்டையின் தளபதியாம். அவனோடு குமார சக்கரவர்த்தி குலாவியதைப் பார்த்தால் சிவகாமியைக் கூட மறந்து விடுவார் போலத் தோன்றியது.''

''உனக்குத் தெரிந்த லட்சணம் அவ்வளவுதான். அந்தப் பிள்ளையின் மேல் மாமல்லருக்கு ஏன் அவ்வளவு பிரியம் என்று நான் சொல்லட்டுமா? என் தோழியைக் காப்பாற்றிக் கொடுத்ததற்காகத்தான் கண்ணா! இதிலிருந்தே மாமல்லரின் மனம் எவ்வளவு உறுதியாயிருக்கிறதென்று தெரிகிறது!'' என்றாள் கமலி.

''உன் புத்திக் கூர்மையே கூர்மை! கேவலம் ஒரு ரத சாரதியைப் போய் நீ கல்யாணம் செய்து கொண்டாயே? இராஜ்யம் ஆளும் மதி மந்திரியையல்லவா நீ மணந்து கொண்டிருக்க வேண்டும்!'' என்று கண்ணன் சொன்னான்.

''அதனாலேதான் காதலுக்குக் கண்ணில்லை என்ற பழமொழி ஏற்பட்டிருக்கிறது; உனக்குத் தெரியாதா?'' என்றாள் கமலி.







நான்காம் அத்தியாயம்

சிவகாமியின் பிறந்த நாள்




ஆகா! சிவகாமியை நாம் பார்த்து எத்தனை காலம் ஆகிவிட்டது! காஞ்சியை விட்டு வெளியே போகக் கூடாது என்று மாமல்லருக்குத்தான் சக்கரவர்த்தி கட்டளை இட்டிருக்கிறாரே தவிர நாம் போவதற்கு எவ்விதத் தடையுமில்லையல்லவா? எனவே, அரண்ய மத்தியிலுள்ள ஆயனரின் சிற்ப மாளிகைக்கு உடனே செல்வோம்.

ஆயனரின் வீட்டை நெருங்கும்போது எட்டு மாதத்துக்கு முன்பு அங்கே நாம் கண்ட காட்சிக்கும் இப்போது நாம் கா ம் காட்சிக்கும் உள்ள வித்தியாசம் நம்மைத் தூக்கி வாரிப் போடுகிறது. அப்போது நாம் கண்ட கலகலப்பு இப்போது அங்கே இல்லை. 'கல் கல்' என்ற கல்லுளியின் சப்தம் கேட்கவில்லை. ஆயனரின் சீடர்கள் ஆங்காங்கு மரங்களின் அடியில் உட்கார்ந்து சிற்ப வேலை பயின்று



கொண்டிருக்கவில்லை.

காட்டு மரங்களின் தோற்றத்திலே கூட வித்தியாசம் இருக்கிறது. முன்னே நாம் வந்திருந்தபோது வஸந்த காலம். விருட்சங்கள் புதிய தளிர்கள் விட்டிருந்தன. மாமரங்களில் இளம் தளிர்களுடனே பூங்கொத்துக்கள்



குலுங்கின. அரச மரங்களும் ஆலமரங்களும் தங்க நிற இலைகளால் மூடப்பட்டிருந்தன.

இப்போதோ, மரங்களில் முற்றிய கரும் பசுமை பொருந்திய இலைகளும் பாதி காய்ந்த சருகுகளும் காணப்படுகின்றன. பூமியெல்லாம் இலைச் சருகுகள் பரவிக் கிடக்கின்றன. சில இடங்களில் குட்டை குட்டையாக மழைத் தண்ணீர் தேங்கியிருக்கிறது.

முதல் நாள் இரவு பெய்த மழை நீர் மரங்களின் இலை களில் தங்கியிருந்து, குளிர்ந்த வாடைக்காற்று அடிக்கும்போது 'சலசல'வென்று பூமியில் உதிர்கிறது. அந்தப் பிரதேசத்தில் ஏற்பட்டிருந்த மாறுதலை நினைத்து மரங்களும் துயரப்பட்டுக் கண்ணீர் உதிர்ப்பது போலத் தோன்றுகிறது.

வன விருட்சங்களில் வாழ்ந்த பட்சிகளின் அமுத கானத்துக்கு மட்டும் எவ்விதக் குறைவும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. விதவிதமான மதுரக் குரல்களில் எத்தனை எத்தனையோ கீதங்கள் கேட்கின்றன. ஆனால், அந்தக் குரல்களிலும் ஒரு வேற்றுமை தெரிகிறது. முன்னே அக் குரல்களில் தொனித்த குதூகலக் களிப்பை இப்போது காணவில்லை. சென்று போன ஆனந்தமான காலத்தை நினைத்து மனங் கசிந்து பாடும் சோக கீதமாகத் தொனித் தது!

வீட்டை நெருங்கிச் சென்றோமானால் ஒரே ஒரு விருட்சத்தினடியில் மட்டும் யாரோ இரண்டு பேர் உட்கார்ந்து வேலை செய்து கொண்டிருப்பது கண்க்குப் புலனாகிறது.

ஆம்! அவர்களில் ஒருவர் ஆயனச் சிற்பிதான்! ஆனால் அந்த மேதையின் முகத்தில் முன்னம் நாம் பார்த்த சாந்தம் இப்போது எங்கே? அந்தக் கண்களிலே இந்த ஆவல் வெறி எப்போது குடி கொண்டது? அவரும் அவருடன் இருக்கும்



இன்னொருவனும் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்?

ஏதேதோ பச்சிலைகளைச் சேர்த்து அவர்கள் கல்லில் வைத்து இடித்தும் அரைத்தும் சாறு இறக்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அருகில் அடுப்பு ஒன்று எரிந்துகொண்டிருக்கிறது. அதில் ஒரு சட்டியில் பச்சிலைச் சாறு கொதித்துக் கொண்டிருக்கிறது. சுற்றுப்புறத்தில் பற்பல சட்டிகளில் வர்ணக் குழம்புகள் இருக்கின்றன. இதையெல்லாம் பார்க்கும் போது ஆயனச் சிற்பியார் சித்திரம் எழுதுவதற்குரிய வர்ணச் சேர்க்கை முறைகளைப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார் என்று ஊகிக்கலாம்.

போர்க்களத்திலிருந்து சக்கரவர்த்தி மாமல்லபுரத்திலும் மற்ற இடங்களிலும் நடந்து கொண்டிருந்த சிற்பப் பணிகளையெல்லாம் நிறுத்தி விடும்படி கட்டளை அனுப்பிய பிறகு ஆயனர் தமது அருமை மகளை அழைத்துக்கொண்டு பழைய அரண்ய வீட்டுக்கு வந்து சேர்ந்தார். தம்முடைய சீடர்களைத் தொண்டை மண்டலத்திலுள்ள எல்லாக் கோயில்களிலும் பாரத மண்டபங்களைக் கட்டுவதற்காக அனுப்பி விட்டார். ஒரே ஒரு சிற்றாளை மட்டும் தம்முடைய உதவிக்கு வைத்துக்கொண்டிருந்தார்.

சில காலமாகவே ஆயனருடைய உள்ளமானது சிற்பக் கலையிலும் நாட்டியக் கலையிலும் ஈடுபடவில்லை. நாகார்ஜுன பர்வதத்துக்கே அனுப்பிய பரஞ்சோதி திரும்பி வருவதை அவர் வெகு ஆவலுடன் எதிர்பார்க்கலானார். சில நாளைக்கெல்லாம் அவருக்குப் பரஞ்சோதியைப் பற்றிய வெகு விசித்திரமான செய்திகள் கிடைத்தன. அவன் பல்லவ சைனியத்தில் சேர்ந்து, பல்லவக் குதிரைப் படையின் தளபதியாகிவிட்டான் என்றும் அதிசயமான, வீரச் செயல்களைப் புரிந்து வருகிறான் என்றும் வதந்திகள் உலாவின.

அதற்குப் பிறகு நாகநந்தியடிகளும் அங்கு வரவில்லை. ஆயனருக்கு என்று மழியாத வர்ண இரகசியத்தை அறிந்து கொள்ளும் ஆவல் ஒன்றுக்குப் பத்து மடங்காகப் பெருகியது. எனவே அவர் சிற்பக் கலை முதலியவற்றையெல்லாம் ஒரு பக்கத்தில் கட்டி வைத்துவிட்டு வர்ணச் சேர்க்கை சம்பந்தமான பரிசோதனைகளை ஆரம்பித்தார். சிவகாமியின் நாட்டியக் கலை வளர்ச்சியிலேகூட அவருக்குச் சிரத்தை குறைந்துவிட்டது. இது சிவகாமிக்கும் சௌகரியமாகவே இருந்தது. ஏனெனில் அவளுடைய வாழ்க்கையாகிய வானத்திலே ஜகஜ்ஜோதியாக உதயமாகி அவளுடைய இதயத் தாமரையை மலரச் செய்திருந்த பிரேம சூரியனைப் பாடிப் பரவி வாழ்த்தி வணங்குவதற்கே அவளுக்குக் காலம் போதாமலிருந்தது. உலகத்தில் இதுகாறும் யாரும் கண்டும் கேட்டுமறியாத அதிசயக் காதற் செல்வம் தனக்குக் கிட்டியிருப்பதாக எண்ணிய சிவகாமி அந்தக் காதலையும் காதலனையும் பற்றிச் சிந்திப்பதிலும், மனோ ராஜ்யம் செய்வதிலும் வருங்காலத்தைப் பற்றிய ஆகாசக் கோட்டைகள் கட்டுவதிலும் எல்லையற்ற இன்பத்தை அடைந்து வந்தாள். அந்த மனோராஜ்ய வாழ்க்கையிலேதான் எத்தனை ஆனந்தம்! எத்தனை ஏமாற்றம்! கூடிக் குலாவும் நேரம் எவ்வளவு! சொல்லம்புகளினால் துன்புறுத்தல் எவ்வளவு? – அந்த எட்டு மாதத்து மனோராஜ்ய வாழ்விலே எத்தனையோ யுகயுகாந்திரங்களில் அனுபவிக்க வேண்டிய சோகச் சாயை படர்ந்த ஆனந்தங்களையும் இன்ப ரேகை கலந்த வேதனைகளையும் சிவகாமி அனுபவித்து விட்டாள் என்றே சொல்ல வேண்டும்.

இருக்கட்டும்; இப்போது சிவகாமியைப் போய்ப் பார்ப்போம். அவள் அநேகமாக வீட்டுக்குள்ளே தன்னந் தனியாக இருக்கலாம். உள்ளே போய் நேரிலேயே சிவகாமியைப் பார்த்து அவளுடைய நிலையைத் தெரிந்து கொள்வோம்.

வீட்டை அணுகும்போது, உள்ளே பேச்சுக் குரலைக் கேட்டுச் சற்றுத் திகைத்து நிற்கிறோம். சிவகாமி ஏகாந்தமாயிருப்பாள், அவளுடன் மனம் விட்டுப் பேசி அவளது மனோ நிலைமையை அறியலாம் என்றல்லவா நினைத்தோம்? அவளுடன் பேசிக் கொண்டிருப்பது யார்? ஒருவேளை அவளுடைய செவிட்டு

அத்தையாயிருக்குமோ? - இல்லை; ஆடவரின் குரல், - அதிலும் இரண்டு மூன்று ஆடவர் குரல்கள் அல்லவா கேட்கின்றன?

உள்ளே நுழைவதற்கு முன்னால் வாசற்படிக்கு அருகில் நின்று சம்பாஷணையைச் சற்று ஒட்டுக் கேட்டுவிட்டு உள்ளே போகக்கூடிய சந்தர்ப்பந்தானா என்பதைத் தெரிந்து கொள்வோம்.

"அம்மணி! எங்களிடம் கோபித்துக் கொண்டு என்ன பயன்? பல்லவ குமாரரின் கட்டளையைத்தானே நிறைவேற்றுகிறோம்?" என்று ஓர் ஆண் குரல் சொல்லிற்று.

"பல்லவ குமாரரும் ஆயிற்று! கட்டளையும் ஆயிற்று! மாமல்லருக்கு இன்றைக்கு வேறு வேலை இல்லை போலிருக்கிறது! திடீரென்று சிற்பியின் மகளை நினைத்துக் கொண்டாராக்கும். இருக்கட்டும்; அந்தத் தந்தப் பெட்டிக்குள்ளே என்ன இருக்கிறது? திறந்து காட்டுங்கள்!" என்று கோபங் கொண்ட கோமகளின் அதிகாரக் குரலில் சிவகாமி ஆக்ஞாபித்தாள்.

"தென்பாண்டி நாட்டிலே கொற்கைத் துறைமுகத்தில் குளித்து எடுத்த அற்புதமான முத்துமாலைகள் இந்தத் தந்தப் பெட்டியில் இருக்கின்றன அம்மணி! இதோ பாருங்கள்! கன்யா குப்ஜத்து ஹர்ஷவர்த்தன சக்கரவர்த்தியின் பட்டமகிஷி கழுத்திலேகூட இம்மாதிரி முத்துமாலை கிடையாது! எப்படி ஜொலிக்கிறது, பார்த்தீர்களா?" என்று ஏவலாளன் கூறினான்.

"போதும், போதும்! இந்த முத்து மாலைகள் யாருக்கு வேண்டும்? உங்கள் குமார சக்கரவர்த்தியிடம் நான் சொன்னதாகச் சொல்லு; ஆயனச் சிற்பியின் வீட்டுக்கு அருகே தாமரைக் குளக் கரையில் புன்னை மரம் ஒன்று புஷ்பித்திருக்கிறது. காலை நேரத்தில் அம்மரத்தடிக்குச் சென்றால் தரையிலே ஆயிரமாயிரம் முத்துக்கள் சொரிந்து கிடக்கும். அந்தப் புன்னை மலர் முத்துக்களின் அழகுக்கு உறை போடக் காணாது இந்தக் கொற்கை முத்து என்று சொல்லு. வேண்டுமானால், ஒரு நாள் காலையில் வந்து பார்த்துவிட்டுப் போகட்டும். அதோ! அந்தத் தங்கப் பேழையிலே என்ன இருக்கிறது?" என்று சிவகாமி கேட்டாள்.

"அம்மணி! அலைகடலின் ஆழத்திலே சௌந்தரிய தேவதை ஒளித்து வைத்திருந்த பவளங்கள், - சமுத்திர ராஜனின் கடுங்காவலை மீறி அபகரித்துக் கொண்டு வரப்பட்டவை, - மன்னாதி மன்னர்களெல்லாம் தங்கள் மணி மகுடத்தில் புனைவதற்கு ஆசைப்படக் கூடியவை, - ஒப்பற்ற பவளங்கள், - இந்தத் தங்கப் பேழையில் இருக்கின்றன. பாரத நாடெங்கும் புகழ் பெற்ற பரத சாஸ்திர ராணியின் மேனியை அலங்கரிப்பதற்கு உகந்தவை என்று இந்தப் பவள மாலைகளைப் பல்லவ குமாரர் அனுப்பியிருக்கிறார்...!"

"அழகுதான்! இந்தப் பவள மாலைகள் உங்கள் பல்லவ குமாரருக்கு அதிசயமாய்த் தோன்றலாம். ஆனால் அவரிடம் நீ போய்ச் சொல்லு; ஆயனச் சிற்பி வீட்டின் இரண்டாம் கட்டிலே அந்தச் சிற்பியின் மகள் வளர்க்கும் கிளிகள் இருக்கின்றன. அந்தக் கிளிகளின் வாயில் உள்ள செம்பவளத்துக்கு எப்பேர்ப்பட்ட கடல் பவளமும் இணையாகாது. வேண்டுமானால் நேரிலே வந்து பார்த்துவிட்டுப் போகும்படிச் சொல்லு. இருக்கட்டும்; அதோ அந்தக் கூடைகளிலே என்ன?"

"அரண்மனை உத்தியானவனத்திலே மலர்ந்த சண்பகப் பூக்கள், குண்டு மல்லிகைகள், பிச்சி மலர்கள்..."

"வேண்டாம், வேண்டாம்! உடனே எல்லாவற்றையும் வெளியே கொண்டு போங்கள். உங்கள் பல்லவ குமாரரிடம், 'சிவகாமி ஒரு காலத்தில் பூ என்றால் பிராணனாயிருந்ததுண்டு. ஆனால், ஏதோ ஒரு காரணத்தினால் இப்போது பூவைக் கண்டால் பிடிப்பதேயில்லையாம்!' என்று தெரியப்படுத்துங்கள்... ஆமாம்; இதையெல்லாம் எதற்காக இப்போது பல்லவ குமாரர் அனுப்பினாராம்?"

"இன்றைக்குத் தங்களுடைய பிறந்த தினம் என்பதற்காக அனுப்பியுள்ளார், அம்மணி!"

"அப்படியா? மிகவும் சந்தோஷம்.

இந்த ஏழைச் சிற்பி மகளின் பிறந்த தினத்தைக் குமார சக்கரவர்த்தி நினைவு வைத்துக்கொண்டிருப்பது பற்றி நிரம்பச் சந்தோஷம். ஆனால், அவருடைய ஞாபக சக்தியில் ஏதோ கோளாறு ஏற்பட்டிருக்க வேண்டும். நீங்கள் இந்தப் பொருள்களையெல்லாம் எடுத்துக் கொண்டு போய் 'இன்று சிவகாமியின் பிறந்த நாள் இல்லை' என்று சொல்லி விடுங்கள். 'சிவகாமி என்கிற பெண் பூமியில் பிறக்கவே இல்லை' என்று பல்லவ குமாரரிடம் சொல்லி விடுங்கள்!''

இதென்ன விந்தை? சற்று முன்னால், ஆயனச் சிற்பியின் வீட்டுக்கு வெளியே மரத்தடியில் பார்த்தோமல்லவா? இப்போது வீட்டுக்குள்ளேயிருந்து அவருடைய கனிந்த குரலைக் கேட்கிறோம்:

''குழந்தாய்! சிவகாமி! உனக்கு என்ன வந்துவிட்டது? ஏன் இப்படி இவர்களை விரட்டியடிக்கிறாய்? குமார சக்கரவர்த்தியே உன்னுடைய பிறந்த தினத்தை ஞாபகம் வைத்துக்கொண்டிருந்து வரிசைகள் அனுப்பியிருக்கும் போது...''

''சும்மா இருங்கள், அப்பா! குமார சக்கரவர்த்தியை இலேசுப்பட்டவர் என்று நினைக்காதீர்கள். முத்து மாலையையும், ரத்தின ஹாரத்தையும், புஷ்பக் கூடைகளையும் அனுப்பி நம்மை ஏமாற்றி விடப் பார்ப்பார். யாரை நம்பினாலும் மாமல்லரை நம்பக் கூடாது. ஏவலாளர்களே! ஏன் நிற்கிறீர்கள்? எடுங்கள் இவற்றை எல்லாம்! உடனே நடையைக் கட்டுங்கள்! எடுக்கிறீர்களா, இல்லையா!''

''இதோ எடுத்துக்கொண்டு போகிறோம், அம்மா! இதோ எடுத்துக் கொண்டு போகிறோம்!''

இவ்வாறு பயந்து நடுங்கிக் கொண்டு கூறிய ஏவலர்கள் வரிசைப் பொருள்களை எடுத்துக்கொண்டு வீட்டுக்கு வெளியே வருவார்களென்று நாம் எதிர்பார்க்கிறோம். ஆனால், யாரும் வெளியே வருகிற வழியைக் காணோம்!

நல்ல மர்மம் இது! வீட்டுக்குள் பேச்சுக் குரல் மட்டும் கேட்கிறதே தவிர, வேறு நடமாடும் சந்தடியைக் காணோமே? வியப்பாக அல்லவா இருக்கிறது! உள்ளே போய்ப் பார்த்து விடலாம்.

உள்ளே போனால், நமது வியப்பு ஒன்றுக்குப் பதின் மடங்காகிறது. ஏனெனில், உள்ளே சக்கரவர்த்திக்காக ஆயனர் அமைத்திருந்த சிற்ப சிம்மாசனத்திலே சிவகாமி மட்டுந்தான் தன்னந்தனியாக உட்கார்ந்திருக்கிறாள்! இத்தனை நேரமும் அவள் சம்பாஷணை நடத்தியதெல்லாம் யாருடன்?

இதோ மர்மம் வெளியாகிறது. சிவகாமி பேசுகிறாள்; தனக்குத் தானே பேசிக் கொள்கிறாள்:

''ஏவலாளர்களே, இங்கே வாருங்கள்!'' என்கிறாள்.

ஒருவரும் வரவில்லை. ஆனாலும் எதிரில் யாரோ இருப்பதாக எண்ணிக் கொண்டு பேசுகிறாள்.

''உங்கள் பல்லவ குமாரரிடம் இதையும் சொல்லுங்கள். 'மாமல்லர்' என்

அருள்வாக்கு

''யுத் யஸ்வ!'' - ''உம்! போடுடா சண்டை!'' என்று அர்ஜுனனை நன்றாகக் காரியத்தில் உசுப்பிக் கிளப்பினார் பகவான். ''நான் ஞானியாகப் போகிறேனே! யுத்தம் எதற்கு?'' என்றவனை, ''அதெல்லாம் கூடாது. யுத் யஸ்வ - விகத ஜ்வர:'' என்றார்.


'விகத ஜ்வர' என்றால் என்ன? ''ஜ்வரமில்லாதவனாக'' என்று அர்த்தம். 'அர்ஜுனனுக்கு ஜ்வரமா அடிச்சுது?' என்றால் ஆமாம், தன் மனுஷ்யாளைக் கொல்வதா என்ற பாச ஜ்வரம் அடித்தது. மனஸ் அவனுக்குக் கொதியாகக் கொதித்தது. அது ஜ்வரம்தான்! இந்த பந்துத்வ ஆசையினால், தர்மத்துக்காகப் பண்ண வேண்டிய யுத்தத்தைப் பண்ணப்படாது என்று நினைத்தான். இப்படி ஆசாபாசம் மனஸிலே இருக்கும்போதே, தர்மத்துக்கும் மேற்பட்ட ஞானத்தில் தனக்கு ரொம்ப ஈடுபாடு

ஏற்பட்டு விட்டாற் போல, ''ராஜ்யாதிகாரத்தில் என்ன இருக்கு? நான் ஸந்நியாசியாகிப் பிச்சை வாங்கிச் சாப்பிடறேன்'' என்று வேதாந்தமெல்லாம் சொன்னான்.

ரஜோகுண ப்ரதானனான மஹாவீரன் அர்ஜுனனை மெஜாரிட்டியினரான ஸாதாரண ஜனங்களின் 'ரெப்ஸன்டேடிவ்' ஆக வைத்தே பகவான் கர்மாவை உபதேசித்தார். பெரிய ஸாதகனாக வைத்தல்ல. கர்மா பண்ணுவது. ஆனாலும் மனஸின் கொதிப்பு முதலான ஸொந்த உணர்ச்சி க்ருத்ரிமங்கள் இல்லாமல் பண்ணுவதுதான் அவனுக்கான வழி என்பதாக உபதேசித்தார்.

ஆனால் வெறும் வறட்டு கர்மாவாயில்லாமல் பக்தி சேர்ந்தால்தான் கர்மயோகத்தைச் செவ்வனே செய்து, பூர்த்தி பண்ண முடியுமென்பதால், ''சண்டை போடு'' என்று முதலில் சொன்னதற்கு அப்புளறம் ஒரு qualifying clause சேர்த்து,

''மாம் அநுஸ்மர யுத்ய ச''



என்றார். ''வெறுமனே சண்டை போடாதே! என்னை நினைச்சுக்கோ - மாம் அநுஸ்மர! வெளி ஸ்மரணை யுத்தத்தில் இருந்தாலும், அதற்குத் துணையாக உள்ளே இருக்கிற அநுஸ்மரணை என்னிடம் இருக்கட்டும்! அப்படி, பக்தியைத் துணை சேர்த்துண்டு சண்டை போடு! அதாவது தேவாஸுர யுத்தத்திலே அஸுர சக்திகளை ஸத்கர்ம, ஸத்குணங்களின் படையைக் கொண்டு ஸத்பக்தியின் துணையில் சண்டை போடு!'' என்று சொல்லியிருக்கிறார்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்

றைக்கு மனம் கனிந்து சிற்பி மகள் சிவகாமியைப் பார்ப்பதற்கு வருகிறாரோ, அன்றைக்குத்தான் அவளுக்குப் பிறந்த தினம் என்று சொல்லுங்கள், தெரிகிறதா?''

இவ்விதம், சொல்லிவிட்டுச் சிவகாமி சற்றுச் சும்மா இருந்தாள். பிறகு மறுபடியும் பேசினாள். ஆனால் இந்தத் தடவை குரல் மாறுபட்டிருந்தது. இப்போது நாம் கேட்பது ஆண் பிள்ளைக் குரல்; ஏற்கெனவே கேட்ட ஏவலாளனின் குரல்தான்.

''அம்மணி! மன்னிக்க வேண்டும். தங்களுடைய பிறந்த தினத்தை முன்னிட்டு இந்த வரிசைப் பொருள்களை அனுப்பிய பல்லவ குமாரர், சற்று நேரத்துக்கெல்லாம் தாமே தங்க ரதத்தில் வருவதாகவும் தெரியப்படுத்தச் சொன்னார்!''

மறுபடியும், சிவகாமியின் மகிழ்ச்சி ததும்பிய உண்மைக் குரல். ''ஆஹா! மாமல்லரே வருவதாகச் சொன்னாரா! அப்படியானால் இன்றைக்கு என் பிறந்த நாள்தான்...! அப்பா! இன்றைக்கு உங்கள் மகளின் பிறந்தநாள் தெரிகிறதா? என்ன பேசாமல் இருக்கிறீர்கள்! இன்றைக்கு ஒரு நாளாவது பச்சிலை அரைப்பதை நிறுத்துங்கள்... அதோ ரதம் வரும் சப்தம் கேட்கிறதே!''

சிவகாமி, சிம்மாசனத்திலிருந்து துள்ளி எழுந்தாள். அப்போது, உண்மையாகவே வீட்டுக்கு வெளியில் ரதம் வரும் சப்தம் கேட்டது. முகத்தில் சொல்ல முடியாத ஆவல் ததும்பப் பரபரப்புடன் வாசற்புறம் ஓடி வந்து பார்த்தாள்.

வீட்டை நெருங்கி ரதம் வந்து கொண்டிருந்தது. அது குமார சக்கரவர்த்தியின் தங்க ரதம்தான். ரத சாரதியும் கண்ணபிரான்தான். ஆனால், ரதத்தில் இருப்பது யார்? வேறு யாரோ போல் இருக்கிறதே!

ஆஹா! என்ன ஏமாற்றம்! வருகிறவர் யாராயிருந்தாலும், நிச்சயமாக மாமல்லர் அல்ல! - சிவகாமி, அந்தச் சிற்ப வீட்டின் வாசல் தூணைப் பிடித்துக் கொண்டு கற்சிலையைப் போல் நின்றாள்.

(தொடரும்)



சென்னையில்
டீலக்ஸ் அபார்ட்மெண்டுகள்
ரூ.3.45 லட்சம் முதல்

HANSA GARDEN

ராஜகீழ்ப்பாக்கம்

ஹன்ஸா கார்டன்

தாம்பரத்திற்கு 5 கி.மீட்டருக்கு முன்னால் அமைந்துள்ள ஹன்ஸா கார்டன், நேர்த்தியான வடிவமைப்பு, மற்றும் தரமிக்க கட்டுமானத்துடன் 1-2 படுக்கையறை கொண்ட அபார்ட்மெண்டுகளை வழங்குகிறது.

பிரிவு 1 மற்றும் பிரிவு 2-ல் ஏற்கனவே குடும்பங்கள் குடியேறிவிட்டன.

- விலை ரூ.3.45 – ரூ.6.10 லட்சம் *
- செராமிக் டைல் ஃப்ளோரிங்
- டெலிபோன் மற்றும் டிஷ் ஆண்டெனா
- விளையாட போதுமான இடவசதி மற்றும் புல்வெளியமைந்த சுற்றுச்சூழல்
- காம்ப்ளக்ஸிற்கே சொந்தமான போக்குவரத்து வசதி
- பாரிமுனை, அண்ணாசாலை, வேளச்சேரி, தி.நகருக்கு நேரடி அரசு பேருந்து
- சிறந்த பள்ளிகள் மற்றும் கல்லூரிகள் அருகில் உள்ளன.
- சுய கடனுதவி மற்றும் வரிச் சலுகைகள்

இடம் : மாடம்பாக்கம் பிரதான சாலை, ராஜகீழ்ப்பாக்கம், வேளச்சேரி - தாம்பரம் சாலை பிரிவில்.

- வரிகள் மற்றும் டெபாசிட்டுகள் நீங்கலாக

ஹன்ஸா வந்தனா

குரோம்பேட்டை ரயில் நிலையம் அருகில் அமைந்துள்ள ஹன்ஸா வந்தனா, 2 படுக்கையறை கொண்ட அபார்ட்மெண்டுகளை வழங்குகிறது.

HANSA VANDANA

குரோம்பேட்டை

- விலை ரூ.6.50 லட்சம் * முதல்
- செராமிக் டைல் ஃப்ளோரிங்
- தண்ணீர் சுத்திகரிப்பு வசதி

இடம் : நாயுடு ஷாப் ரோடு, ராதா நகர், குரோம்பேட்டை

ஹன்ஸா எஸ்டேட்ஸ்
பிரைவேட் லிமிடெட்

கில்ராஜ் எஸ்டேட்ஸ், நான்காம் தளம்,
624, அண்ணா சாலை, சென்னை - 600 006.

போன் : 8293135 / 2315 / 2323
ஃபேக்ஸ் : 8293135.

email : hansaest@md4.vsnl.net.in
visit us at : www.hansaestates.net

சிக்கனமான விலையில் வசதியான வாழ்க்கை



மேஷம்: ராசிநாதன் 12லும், சனி 2லும் உலவுவது அனுகூலமாகாது என்பதால், மிதமான அல்லது மிக மிக சொற்பமானப் பலன்களே நடைபெறும். குரு 3ல் இருக்கிறார் என்பதால் ஒரு சில நன்மை மேகங்கள் சூழ்ந்திருக்கின்றன. இருந்தாலும் பலத்த முன்னேற்றம் எதிர்பார்க்காதீர்கள். கணிதத்துறை, எழுத்து, எலக்ட்ரானிக்ஸ், கம்ப்யூட்டர், நவீன விஞ்ஞானம் போன்ற பிரிவினருக்கு மைசூர் தசரா சீஸன் போல வண்ணமிகு வசந்த காலம். அரசாங்க உத்தியோகஸ் தர்கள் ஓரளவு முன்னேற்றம் காண்பார்கள். மற்றவர்கள் வீண் ஆடம்பரங்களைத் தவிர்ப்பது நல்லது.



ரிஷபம் : உச்சி வெயில் மண்டையைப் பிளந்தாலும், உறைய வைக்கும் ஐஸ் மழை பொழிந்தாலும், ரிஷப ராசிக்காரர்களுக்கு மட்டும் ஸ்விட்சர்லாந்து போல சுகமான சீஸன்தான். ராசிநாதன் 9ல், செவ்வாய் 11ல் உலவுவதால், ஆதாயமான பலன்கள் அதிகரிக்கும். சிலருக்கு வெளிநாடு போகும் வாய்ப்பு கிட்டும். சிவப்பு நிறப் பொருட்கள் அதிர்ஷ்டத்தைக் குவிக்கும். கூட்டுத் தொழிலா? அப்போ, லாப மழைதான். புதியவர்களிடம் பழகும்போது, எச்சரிக்கை தேவை. உணவுப் பழக்கத்தில் கட்டுப்பாடு இருக்கட்டும். கிரக வழிபாடு நன்மை தரும்.



மிதுனம் : குற்றாலம் ஐந்தருவியில் நீர் போக்குவரத்து அதிகரித்ததும், மொய்த்துக் கொள்ளும் சுற்றுலாப் பயணிகள் போல, உங்கள் ராசிக் கட்டத்திலும் இந்த வாரம் கோலாகல சீஸன். புத்திசாலித்தனம் அதிகரிக்கும். முகவசீகரம் கூடும். உடல்நலம் அபார திருப்தி. போட்டி, பந்தயங்களில் வெற்றி. தெய்வப் பணிகளில் நாட்டம். பெண்களின் அபிலாஷைகள் நிறைவேறும். வார பிற்பகுதியில், சிறு பிரச்னைகள் உருவாகலாம். தந்தை நலனில் கவனம் தேவை. தான, தருமம் மனசாந்தி தரும்.



கடகம் : சோதனை மின்னல்களும், நஷ்ட மேகங்களும் காணாமல் போயிருக்க, கடக ராசிக்காரர்களுக்கு இனி ஆனந்த மழைக் காலம் ஆரம்பிச்சாச்சு. கொல்லிமலை பூந்தூறல் போல, மனம் மகிழ்ந்து சிலிர்க்கும். புனிதமான காரியங்களிலும், தான தருமங்களிலும் நாட்டம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலைக்கும். கறுப்பு, கருநீலம் போன்ற நிறங்கள் அதிர்ஷ்டமானவை. தொழிலாளிகளின் நிலை உயரும். சுப காரியங்களில் பங்கு கொள்வீர்கள். 7ல் சூரியன், சுக்ரன், புதன் மற்றும் 12ல் ராகு சிறப்பாகாது. எனவே, பயணத்தில் எச்சரிக்கை தேவை.




சிம்மம் : கிழக்கு வெளுத்தாச்சு. தூறல் நின்னு போச்சு. தை பொறந்தாச்சு. வழி பிறக்காமலா போகும்? அதிலும் சூரியன் 6ல் புதனுடன் உலவுவதால், கோவளத்தின் மேல் காற்று போல குளிர்ச்சி நிறையும். அரசாங்க விவகாரங்கள் அனுகூலமாகும். உத்தியோகஸ்தர்கள், மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவார்கள். காடு, மலை, வனம், துறைக்காரர்களுக்கு நல்ல அபிவிருத்தி. மாணவர்கள் படிப்பில் முழு கவனம் செலுத்தினால் முன்னேற்றம் காணலாம். செவ்வாய் 8ல் என்பதால் எதிர்ப்புகள் கூடும். கூட்டுத் தொழிலில் பிரச்னை வரலாம். உஷார்.



கன்னி : குறிஞ்சிப் பூ சீஸன் வந்ததும், ஏற்காட்டு மலையே, நீலக் கம்பளம் போர்த்திக் கொண்டு மினுக்குவது போல, உங்களுக்கும் தளுக்கு மினுக்கு நேரம்தான். மனதுக்கினிய சம்பவங்கள் நடக்கும். எதிர்ப்புகள் குறையும். எதிரிகள் விலகி ஓடுவார்கள். பண நடமாட்டம் திருப்திகரமாக இருந்து வரும். பங்கு மார்க்கெட் ஆதாயம் காட்டும். பயணத்தால் அனுகூலமுண்டு. 4ல் கேது, 7ல் செவ்வாய் என்பதால், உடல்நலத்தில் கவனம் தேவை.




மீன ராசிக் காரரான நடிகை நிஷாவுக்குப் புகழ், மதிப்பு கூடப் போகுதாம்.



துலாம் : கன்யாகுமரியில் இறைந்து கிடக்கும் வண்ண நிறமான மணல் போல, உங்களுக்கும் நிறைய கலர் கலர் கனவுகள் இருந் திருக்குமே. அதெல்லாம் நிறைவேறும் காலம் வந்தாச்சு. பராக் கிரமம், துணிச்சல், மகிழ்ச்சி மூன்றும் எவரெஸ்டை எட்டும். மனை, நிலம், வீடு, ரியல் எஸ்டேட் இனங்கள் ஆதாயம் கொண்டு வரும். வேலை இல்லாதவர்களுக்குத் தகுந்த வாய்ப்பு கூடிவரும். வேலையில் இருப்பவர்களுக்குப் பதவி உயர்வு, ஊதிய உயர்வு, இடமாற்றம் போன்ற நற்பலன்கள் ஏற்படும். புதன், குரு வக்ரம் என்பதால், சிறு இடர்பாடுகள் நேரலாம். கவனம் தேவை!



விருச்சிகம் : ஏரிக் கரையில் நடக்கும்போதே துரத்தி வரும் கொடைக் கானல் பஞ்சுப் பொதி மேகக் கூட்டங்கள் போல, உங்களையும் இனி வெற்றி துரத்தப் போகுது. பிரபுதனவான்கள் முக்கியஸ்தர்கள் பாராட்டு பெறுவீர்கள். பெண்கள் எண்ணம் நிறைவேறும். உல்லாசம், விருந்து போன்றவைகளில் பங்கு கொள்வீர்கள். அரசியல்வாதிகளின் அந்தஸ்து உயரும். கேது 2ல், ராகு 8ல் என்பதால் சிறுசிறு இடர்பாடுகள் ஏற்படும். பண விஷயத்தில் கவனம் தேவை. கலபமாய் கயிறு திரித்து விடுவார்கள். உஷார்.




தனுசு : குளிர் முடிய நந்தி ஹில்ஸில் வளைந்து வளைந்து செல்லும் ஹேர்பின் பெண்டுகள் போல, உங்கள் வாழ்க்கையிலும் எதிர் பாராத இனிய திருப்பங்கள் காத்துக் கிடக்கின்றன. திறமைக்கும், உழைப்புக்கும் நல்ல பயன் கிடைக்கும். பேச்சில் சாமர்த்தியம் தெரியும். குடும்பத்தில் பரிபூரண அமைதி நிலவும். கலைத்துறை ஆட்களுக்கு நல்ல காலம். வியாபாரிகளுக்கு அரசுப் பணியாளர் களுக்கும் அந்தஸ்து உயரும். கணவன் - மனைவி உறவுநிலை சீராக இருக்கும். குரு 7ல் வக்ரம் என்பதால், குருவின் சுப பலன் குறையும். குரு ப்ரீதி செய்யவும்.



மகரம் : சேதி எதுவும் தெரிவிக்காமலேயே, வெளிநாட்டிலிருந்து வந்து சீஸன் பரப்பும் வேடந்தாங்கல் பறவைகள் போல, உங்களுக்கும் நல்ல விஷயங்கள் தடாலடியாக வந்து அதிசயம் காட்டும். வழக்கு, விவகாரங்களில் அனுகூலமான போக்கு தென்படும். சட்டம், இராணுவம், காவல் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு வெற்றி வாய்ப்புகள் அதிகரிக்கும். குடும்பத்தில் குதூகலம் கும்மாளம் போடும். உடன் பிறந்தவர்கள் உதவி கிடைக் கும். மனைவி-கணவன் சுமுகம். மகான் தரிசனம் மேன்மை தரும்.



கும்பம் : காஷ்மீர் படகு வீடு, வெள்ளை மழை, கொள்ளை நிலா - பனிநீர் ஏரி - ஆஹா அருமையான இடம்தான். ஆனால் சுற்றுலா போக பயமா இருக்கே. அதுமாதிரிதான். உங்களுக்கும் நல்ல திறமை, கடுமையான உழைப்பு, எல்லாம் இருந்தும், கிரக சஞ்சாரங்கள் படு சுமாரா இருப்பதால், பிரச்னைகள் பயம் காட்டுகின்றன. எந்தக் காரியத்தில் ஈடுபட்டாலும், ஒரு முறைக்குப் பலமுறை யோசித்து செயல்படவும். வீண் அலைச்சல் தவிர்க்கவும். சூடான வார்த்தை கள் வேண்டாம். குறுக்கு வழி எண்ணமே கூடாது. நல்ல பண் பாளர்கள் சகவாசம் மட்டும் பேணவும்.



மீனம் : திருச்சூர் பூரம் விழாவில் ஆடி அசைந்து வரும் அலங்கார அழகு யானைகள் போல, ஆடி அசைந்து வந்து கொண்டிருந்த உங்கள் எண்ணங்கள் எல்லாமே, படு வேகம் பெறும். பதவி உயர்வு, பட்டம், புகழ், மதிப்பு என சொடுக்கு போட்டதுபோல வந்து குவியும். கம்ப்யூட்டர், விஞ்ஞானம், எலக்ட்ரானிக்ஸ் துறைக்காரர்கள் செழிப்பு பெறுவார்கள். மத போதகர்கள், பிரசங்கிகள் தத்தம் கடமைகளைப் பொறுப்புடன் செய்து வருவது நல்லது. உறவினர் க[illegible] சிறு பிரச்னை நேரும். உஷார்!

அக்னி சர்மா பக்கம்

ஜனவரி 30 முதல் பிப்ரவரி 5 வரை

நல்லவர்!



மறைந்து இருந்தபடி அமெரிக்கத் துருப்புகளுக்கு வெறுப்பேற்றி வரும் தாலிபான் தலைவர் முல்லா உமருக்கு, கார் டிரைவராக இருந்த க்வாரி சாஹப், முல்லா உமர் பற்றி சொல்கிறார்:

முல்லா உமர் பதுங்கியிருந்த கட்டடத்தின் காம்பவுண்டு சுவர் மீது அமெரிக்கக் குண்டுகள் சரமாரியாக விழுந்தபோது, அவரைச் சுற்றியிருந்தவர்கள், 'எப்படியாவது இங்கிருந்து தப்பிப் போய் விடுங்கள்' என்று வேண்டிக்கொண்டார்கள். ''ஜார்ஜ்புஷ் வந்தால்கூட, நான் இங்கிருந்து நகரப் போவதில்லை!'' என்று பிடிவாதமாகச் சொல்லிவிட்டாராம் அவர். ரசாயனப் புகை வீசுவார்கள் என்று சொன்னதும் மாஸ்க் ஒன்றை எடுத்துக் காட்டி, 'இது இருக்கிறதே!' என்றார். 'ஒரு மணி நேரம்தான் சாமி அது தாங்கும்' என்று எச்சரித்த பிறகுதான் மண்ணால் மூடிய லாரி ஒன்றில் ஒளிந்துகொண்டு குடியிருப்புப் பகுதிகளுக்கு வந்தார். பிறகு வீடு வீடாக மாறி, பல வாரங்கள் பல வீடுகளின் கீழே உள்ள அறைகளில் தங்கினார்!

''ஒழுக்கம் இல்லாதவர், புத்தர் சிலைகளை உடைத்தவர் என்றெல்லாம் உமரை வர்ணிக்கிறார்கள். ஆனால் ஒரே குளறுபடியாக இருந்த நிலைமையைச் சரிப்படுத்தியவர்; லஞ்சத்தை ஒடுக்கியவர் அவர் என்று எத்தனை பேருக்குத் தெரியும்? அதனால் மக்கள் அவரை விரும்பினார்கள். உமர் ரொம்ப சாதாரண மனிதர். இந்தச் சாதாரணத் தன்மையை வைத்துக் கொண்டு தம்மை ஓர் உத்தமர் போல அவரால் வெளியுலகத்துக்குக் காண்பிக்க முடிந்தது. முல்லா உமரிடம் நிறைய லக்சரி கார்கள் இருந்தாலும் அவர் என்னவோ சிம்பிளாகவே இருந்தார்.

''மாறு வேஷம் போட்டுக் கொண்டு மக்களைச் சந்தித்துக் குறைகள் கேட்ட ஏழாம் நூற்றாண்டு இஸ்லாமியத் தலைவர் காலீஃப் உமர்தான், உமருக்குப் பிடித்தவர். அடிமட்டத்திலிருந்து வந்தவர். சாலை ஓரத்தில் பிறந்தவர். படிப்பும் கொஞ்சம்தான். அவர் கையெழுத்தைப் படித்துப் புரிந்து கொள்ளுவதற்குள் மண்டை காய்ந்துவிடும். சோவியத் தாக்குதலின் போது ஒரு கண்ணை இழந்தார். 90களில் ஆப்கானிஸ்தானில் நிகழ்ந்த போராட்டங்களின் போதுதான் அவரை எல்லோரும் 'தலைவா!' என்று கூப்பிட ஆரம்பித்தார்கள். ஒரு நிகழ்ச்சி: ஒரு பெண்ணை யாரோ ஒருவன் பாலியல் பலாத்காரம் செய்துவிட்டான். அவனைப் பிடித்து வந்து, பீரங்கியின் வாயில், தூக்கில் தொங்கவிட்டார் உமர். இது அவரை ஆப்கானிஸ்தான் முழுக்க பிரபலப்படுத்தியது!

''கொடுக்கிறது என்றால் அள்ளி அள்ளிக் கொடுப்பார். கமாண்டர்களுக்கு விதம் விதமாக கார்கள் கொடுத்திருக்கிறார்.

''பின்லாடனின் மகளை அவர் திருமணம் செய்து கொண்டிருக்கிறார் என்று சொல்வது தவறு. அதைச் சமாளிக்கத்தான் வேறு ஒரு பெண்ணை நாலாவது மனைவியாகக் கல்யாணம் செய்து கொண்டார். பின்லாடனின் குடும்பச் சிக்கல்களில் மாட்டிக் கொள்ள அவர் விரும்பவில்லை.''

முல்லா உமருக்கே இறுதி மூச்சு வரை டிரைவராக இருப்பேன் என்று சொன்ன க்வாரி சாஹப், கொஞ்சம் யோசித்துவிட்டு, ''இப்போது புதிதாகப் பொறுப்பேற்றிருக்கும் கர்ஸாய் கூப்பிட்டால், அவரிடம் போகத் தயார்!'' என்று சிரிக்கிறார்.

தொகுப்பு: **சித்தார்த்**

நன்றி: நியூஸ்வீக்

‘நதியில் உறவாடிக் கொடியில் தலைசீவி நடந்த இளந்தென்றலே’ _ கண்ணதாசனின் இந்தப் பாடல் இனிமை ஒருபுறம் இருக்கக் கூடும். தென்றல் காற்று கொடிகளில் தலை சீவுகிறது என்பது எத்தனை உண்மையானது தெரியுமா?

மரங்களின் ஊடேயும், செடிகொடிகளின் ஊடேயும் காற்று புகுந்து வருகிறபோது, அதில் மிதந்து வருகிற தூசுதும்புகளை அப்படியே தம் இலைகளில் வாங்கிக் கொள்கின்றன இந்த மரங்கள்; செடி கொடிகள்.

அதிலும், தேக்குமரம், மாமரம், அரசமரம் போன்று அகலமான ஒற்றை இலைகளைக் கொண்ட மரங்கள் தாம், அதிக அளவில் தூசு தும்புகளை வடிகட்டுகின்றன. அழகுக்காக வளர்க்கப்படுகிற கோல்டு மோகர் போன்ற மரங்களும், புளிய மரம், வாழை மரம்போல் தொகுப்பு இலைகளை உடைய மரங்களும் அவ்வளவு தூரம் வடிகட்டுவதில்லை. சவுக்கு மரம் போன்ற ஊசியிலை வகை மரங்களால் காற்றைத் தூய்மைப்படுத்த முடியவே முடியாது.

செம்பருத்திச் செடியின் இலைகளைப் பார்த்திருக்கிறோம். மேல்புறம் வழுவழுப்பாகவும், அடிப்புறம் உப்புத் தாள் மாதிரி சொரசொரப்பாகவும் இருக்கும். நன்கு முற்றிய செம்பருத்தி இலைகளின் அடிப்பாகத்தை உப்புத்தாள்களைப் போலவே பயன்படுத்தி மரப் பலகைகளில் தேய்த்து மெருகு தருவதுண்டு. இந்த மாதிரி இலைகள் மேலும் கீழும் காற்றில் மிதந்து வருகிற அழுக்குகளைக் கவர்ந்து இழுத்துக் கொண்டு விடும்.

தூசுகள் என்பவற்றுள் மணலின் பொடியும் அடங்கும். கல் குவாரிகள் உள்ள பகுதிகளைச் சுற்றியுள்ள இடங்களில் குடியிருப்பவர்கள் கவனித்திருக்கலாம். மரம் செடிகள் என்ன, அரைமணிநேரம் உட்கார்ந்தால் போதும், நம் மீதே மரமரவென்று மணல் துகள் படிவதைக் கவனிக்கலாம். இவை மூச்சுக் குழல் வழியே எத்தனை சதவிகிதம் உள்ளே போகுமோ?

இந்த மாதிரி மண் துகள்கள், பாலைவனப் பகுதியையும், கடல் பரப்பையும் ஆயிரக் கணக்கான கி.மீ. தொலைவு கடந்து செல்கின்றன. இந்த நுண் துகள்கள் மேலே மேலே பறந்து போய் மேகங்களுக்குக் கிச்சுக் கிச்சு மூட்டி மழை பொழிய வைக்கவும் செய்கின்றன என்றாலும், சுகாதாரக் கேடுகளும் உண்டாக்கவே செய்கின்றன. ஆஸ்துமா, ஒவ்வாமை, மார்ச்சளி போன்ற சங்கடங்கள் தூசுகளாலேயே ஏற்படுகின்றன.

பசுமையான சூழலுக்கு உட்புறத்திலும் வெளிப்புறத்திலும் நிலவுகிற காற்றுத்தூய்மை பற்றி நிறையவே ஆராய்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன.

லண்டன் நகரத்தின் மையப் பகுதியில் உள்ள ‘ஹைட் பார்க்’ பூங்கா ஒரு சதுர கிலோமீட்டர் பரப்பளவில்தான் உள்ளது.







காற்றுக்குத் தலை சீவும் மரங்கள்!



இருந்தும் புகை மண்டலத்தின் அடர்த்தியில் 27 சதவிகிதம் வரை, இந்தப் பூங்காவில் உள்ள மரங்களால் குறைந்து விடுகிறது என்று கண்டறிந்திருக்கிறார்கள்.

சோவியத் யூனியனில், எந்த எந்த வகை மரங்களால் எவ்வளவு தூசு வடிகட்டப்படுகிறது என்று ஆராய்ந்தார்கள். ஓர் இலையின் பரப்பில் எத்தனைத் தூசு படிகிறது என்பதைப் படு நுட்பமாய்ச் சேகரித்துக் கணக்கிட்டார்கள். சாதாரணமாக ஓவியர்கள் பயன்படுத்துகிற ஒட்டக மயிரிலான பிரஷ் _ மிகவும் சுத்தமான பிரஷ் மூலம் தூசுகளை வழித்தெடுத்து, எலக்ட்ரானிக் நுட்பத்தில் நிறுத்திக் கணக்கிட்டார்கள்! இந்தியாவிலும் கொல்கத்தாவிலுள்ள வேளாண் பல்கலைக் கழகத்தில் உள்ள மாசுகட்டுப்பாட்டு ஆய்வகத்தில் இது போன்ற ஆராய்ச்சி இருபதாண்டுகளுக்கு முன்பே நடைபெற்றது.

ஹௌரா, ஷிப்பூர் தாவரவியல் பூங்காவிலுள்ள மரங்களிலிருந்து எடுக்கப்பட்ட தூசுகளின் அளவைப் பட்டியலிட்டார்கள். ஒரு சதுர மீட்டர் பரப்பில், _ தேக்குமர இலைகளின் மேல் பகுதியில் 4.10 கிராம் தூசும், அடிப்பகுதியில் 1.25 கிராம் தூசும் படிவதாகக் கணக்கிட்டார்கள். இது புளிய மரத்தில் 1.56/0.52 கிராம்களாக இருந்தது.

ஆனால் மோட்டார் வாகனப் புகைகள் ரசாயனப் புகைகள் போன்றவற்றால் தாவரங்களுக்கே தீங்கு ஏற்படும். அவையும் நம்மைப்போல் காற்றை சுவாசித்தே உயிர் வாழ்கின்றன. அளவுக்கு அதிகமான புகை மூட்டங்களால் தாவரங்களும் மூச்சு முட்டித் திணறும் என்பதை நினைத்தாவது பார்க்க வேண்டும்.

மரங்களையெல்லாம் அழித்து விட்டுக் கான்கிரீட் காடுகளை உருவாக்கிக் கொண்டிருக்கும் காலத்தில் 'ஏழை'யின் குரல் அம்பலத்தில் ஒலிப்பது சிரமம்தான். இருந்தாலும் 'மரங்களை வளர்ப்போம்! காடுகளை வளர்ப்போம்' என்று பிரசாரம் பண்ணிக் கொண்டே இருப்பது நம்முடைய கடமையாகிறது.

சுதந்திர பாரதத்தில் இதை ஓர் இயக்கமாகவே அறிமுகப்படுத்தியவர் கே.எம். முன்ஷி இப்போது பசுமைத் தாயகம் அன்புமணி வரை இந்த முயற்சி தொடர்கிறது. மரம் வளர்க்கிறவர்களை, சொல்கிறவர்களை, நினைப்பவர்களையெல்லாம் பாராட்டலாம்.

— சுப்ர. பாலன்



பேராசிரியர் சரத்ஜி!

தாம் பிறந்த ஊரான காரைக்குடி பகுதியிலுள்ள தளக்காவூருக்கு 'சித்தி'யுடன் வந்திருந்தார் நடிகர் சரத்குமார்!

"சமஸ்தானம் படப்பிடிப்புக்காக வந்தேன். ஒரு மாசம் இங்கதான் டேரா. பிறந்த மண்ணுல கால் வைக்கறதுல எவ்வளவு சந்தோஷம் இருக்கு தெரியுமா?" உற்சாகமாய்ப் பேசிவிட்டு அருகில் உள்ள டீக்கடைக்குச் சென்று விட்டார்.

கிராம மக்கள் எல்லாரும் "எப்படிய்யா இருக்கே. நம்மூர் பக்கமும் கொஞ்சம் வந்து போ அய்யா!" என்று அனுசரணையாக விசாரிக்க, புல்லரித்துப் போய் விட்டார் சரத்ஜி.

பேசிக் கொண்டிருக்கும்போதே ஸ்பெஷல் டம்ளரில் டீ கொண்டு வந்த கடைக்காரரிடம், "எல்லாரும் குடிக்கிற கிளாஸில கொடுங்க, எனக்கு மட்டுமென்ன ஸ்பெஷல்" என்று சரத் சொன்னதும் "என்னா மனசு" என்று புகழ்ந்துவிட்டார்கள்.

மாநிலங்களவை உறுப்பினர் நிதியில் இருந்து தளக்காவூரைத் தன்னிறைவு கிராமமாக மாற்ற உள்ளதாகவும், முதற்கட்ட வேலைக்காக கிராமத் தலைவரிடம் பட்டியல் ஒன்றையும் பெற்றிருக்கிறார். "எங்க ஊருக்கும் ஏதாவது பண்ணுங்க" என்று பக்கத்து ஊர்க்காரர்கள் கேட்க, மறுக்கவில்லை சரத்.

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் நுண்கலை பாடப்பிரிவு ஆரம்பிக்க ரூ. 15 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார். பரதநாட்டியத்திற்கு மூன்றாண்டு இளங்கலை பட்டப்படிப்பு பிரிவு ஆரம்பிக்கப் பட்டிருக்கிறது. இந்தத் துறைக்கு வருகைப் பேராசிரியராக பணியாற்ற விருப்பம் தெரிவித்துள்ளாராம் இவர்...!



பிள்ளையார்பட்டிக்கு அருகில் உள்ள சிராவயல் கிராமத்தில் சரத்குமாரின் குல தெய்வ கோவில் இருக்கிறது. அங்கு ராதிகாவுடன் சென்று சாமி கும்பிட்டு மாலை மாற்றிக் கொண்டார். (கலைஞருக்குத் தெரிஞ்சிடப்போகுது!)

யார் குழந்தையுடன் வந்தாலும் '…ாய்..புச்.புச்..!' என்று அவர்களின் குழந்தையைத் தூக்கி வைத்துக் கொண்டு வாஞ்சையுடன் கொஞ்சிய சரத்குமார், ஒரு குழந்தைக்குக் 'கார்த்திகேயன்' என்ற பெயரையும் சூட்டினார்.

"காரைக்குடி எனக்கு ரொம்ப பிடிச்சுப்போச்சு... இனிமேல் ஒப்பந்தமாகிற படங்களோட படப்பிடிப்புகளை காரைக்குடி பகுதியில் வைத்துக் கொள்ள படத் தயாரிப்பாளர்களிடம், இயக்குநர்களிடம் கேட்கலாம்னு இருக்கேன்" என்றார்.

"அடுத்த எலெக்ஷன்ல காரைக்குடிக்கு தி.மு.க. வேட்பாளர் கிடைச்சாச்சு" என்கிறார்கள் இப்பகுதி உடன்பிறப்புகள். நெசமா?

— சிங்காரவடிவேல்



ஒரு பழைய தமிழ்த் திரைப்படத்தில் வரும் பாடல்: 'புருஷன் வீட்டில் வாழப் போகும் பெண்ணே; தங்கச்சி கண்ணே; சில புத்திமதிகள் சொல்லுறேன் கேளு முன்னே' என்று துவங்கி, 'மாமனார், மாமியாரை வணங்கணும், மாலையிட்ட கணவனையே துதிக்கணும்' என்று தொடரும். புகுந்த வீட்டில் நாத்தனார்களை எப்படி சமாளிக்க வேண்டும்; மைத்துனர்களிடம் எப்படி நல்லிணக்கமாக நடந்து கொள்ள வேண்டும்; என்று மணப்பெண்ணுக்கு பல டிப்ஸ்கள் அந்தப் பாட்டில் சொல்லப்பட்டிருக்கும். இது போன்ற பாட்டுக்கள் ஒரு வழிகாட்டுதல் என்றால், வீட்டுக்கு வீடு இருக்கும் பாட்டி, பெரியம்மா, அத்தை, சித்தி ஆகியோர் தங்கள் பங்குக்குப் புகுந்த வீடு செல்லும் பெண்களைப் புத்திமதிகள் மூலம் திக்குமுக்காட வைப்பார்கள். இது அந்தக்காலம். குடும்பம் என்பது மைக்ரோவாக சுருங்கி, அத்தைகளும், பெரியம்மாக்களும், எங்கோ தூரத்தில் வசிக்க, பெண்ணுக்குக் கவுன்ஸலிங் வாய்ப்பு குறைகிறது. விஞ்ஞான பூர்வமாகவும், வித்தியாசமாகவும் பிரச்னைகளை அணுகும் காலம் இது. அதை மனத்தில் கொண்டு துவங்கப்பட்டிருக்கிறது. Wife to be School. புகுந்த வீடு செல்லும் பெண் சந்திக்கப் போகும் சவால்களை, சங்கடங்களைச் சந்தோஷமாக மாற்றும் வித்தைகளைக் கற்றுத் தரும் பள்ளிக்கூடமாம் இது. இந்தியாவிலேயே புதுமையான முயற்சி. நான்கு வார பயிற்சியில் மணப்பெண்ணை மனரீதியாக எதிர்காலத்திற்குத் தயார் படுத்திவிடும் வகுப்புகள். இந்த பள்ளி துவங்குவதற்கு முழு முயற்சி எடுத்திருப்பவர் ரேஷ்மா. இந்த ரேஷ்மாவைப் பற்றி சின்ன அறிமுகம்.

அண்ணா ஆதர்ஷில் பட்டப் படிப்பு படிக்கும்போது ஆட்டோ டிரைவர் அவள் தோழிகளைக் கிண்டல் செய்ய, தமது கராத்தே அடிகளால் அவனை மடக்கி, போலீஸில் மாட்டி விட்டவர். அந்த வீரத்துக்காக 'கல்கி' அட்டையிலும் அப்போது இடம் பிடித்தவர். கராத்தேயில் இரண்டாவது டிகிரி பிளாக் பெல்ட் வாங்கியவர் சென்னையிலே இவர் மட்டும்தான். சிறுவர்களுக்கு கராத்தே வகுப்புகள் எடுத்துக் கொண்டிருந்த ரேஷ்மாவுக்கு இது போன்ற பள்ளி துவங்க எப்படி பொறி தட்டியது?





"எங்கள் மார்வாடி இனத்தில் பெண்களை முறையாக, பள்ளி, கல்லூரியில் சேர்த்துப் படிக்க வைக்க மாட்டார்

புகுந்த வீட்டில் வாழப் போகும் பெண்ணே!

பாடம் சொல்லித் தரும் பள்ளிக்கூடம்!



கள். ஆனால் தையல் வகுப்பு, சமையல் பயிற்சி என்று பல வகுப்புகளுக்கு அனுப்புவார்கள். கல்யாண மாகிப் போகும் எங்கள் பெண்கள் கணவன் வீட்டில் மனரீதியாக அட்ஜஸ்ட் செய்து கொள்ள பெரும் பாடு பட வேண்டியிருக்கும். பெரும்பாலும், தொழிலதிபர்களாக, வர்த்தகர்களாக இருக்கும் கணவன்மார்கள், தங்கள் மனைவிகளிடம் சமூகம் விரும்பும் சில மென்மையான அணுகு முறைகளை, நடத்தைகளை எதிர்பார்ப்பார்கள். ஆனால் அந்தப் பெண்களுக்கு ஏது பயிற்சி? இது எங்கள் இன பெண்களுக்கு மட்டுமல்லாமல், இன்றைய நிலையில் மத்திய, உயர்தர பெண்களுக்கும் பொருந்தும். ஆகையால்தான் இது போன்ற பயிற்சிகளைக் கொடுத்தால் என்ன என்று தோன்றியது." இந்த பயிற்சியை புகுந்த வீடு செல்லும் பெண்ணின் இறுதி கட்டத் தயாரிப்பு என்கிறார் ரேஷ்மா.

"இரு மனம் கலந்தால்தான் திருமணம். திருமணத்திற்குச் சமூக, சட்ட அங்கீகாரம் இருந்தாலும், அவை மட்டுமே, ஒரு வெற்றிகரமான மண வாழ்க்கைக்கு அடிப்படையாக அமைந்து விடாது. அந்த அன்பு மாளிகை கட்டப்படுவதற்கும், கட்டி முடிக்கப்பட்டுப் பாதுகாக்கப்படுவதற்கும், தம்பதிகளுக்குள் அனுசரணையும் நல்லிணக்கமும் தேவை. இல்லாவிட்டால், சின்னச் சின்ன விஷயங்கள்கூட பூதாகரமாக வளர்ந்து விவாகரத்து வரை போய்விடும்" என்கிறார் ரேஷ்மா.

பாடத்திட்டத்தை மூன்று பகுதிகளாகப் பிரித்து வைத்திருக்கிறார்கள். சாப்பாட்டு மேஜையில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதில் ஆரம்பித்து, அழகாக ஆடை அணிவது, துணிகளைப் பாதுகாப்பது, மெகந்தி ரங்கோலி பயிற்சி, திருமணச் சட்டங்கள், கணவரை வெற்றி கொள்வது எப்படி? சமையல், மாமியார் சைக்காலஜி, செல்லப் பிராணிகளை வளர்ப்பதெப்படி, ஆபத்து சமயத்தில் முதலுதவி, டைம் மேனேஜ்மென்ட் என்று ஏகப்பட்ட விவகாரங்களைப் பாடதிட்டத்தில் நுழைத்திருக்கிறார்கள்.

இந்த தலைப்புகளுக்குள் ஏராளமான உட்பிரிவுகள்.

"பல பெண்களுக்குத் தாங்கள் அழகாக இருக்கிறோமா? என்ற சந்தேகம் மனத்தில் ஊசலாடிக் கொண்டே இருக்கும். அழகாக இருந்துவிட்டால் பிரச்னையில்லை. அப்படி ஒரு அவுட்லுக் இல்லாத பெண்களை, ஆடைகள், நகைகள், சிகையலங்காரம் போன்றவற்றில் எப்படி அழகு படுத்திக் கொள்ளலாம் என்றும் சொல்லிக் கொடுத்து, தன்னம்பிக்கை உருவாக்குவோம். ஒவ்வொரு கணவனும், தன் மனைவி

மற்றவர் கண்ணுக்கு அழகாக இருக்க வேண்டும் என்று மனத்தளவில் விரும்புவான். இது கணவன் சைக்காலஜி. அந்த அடிப் படையில்தான் அழகுக்கு முக்கியத்துவம் தரப்படுகிறது. விலையுயர்ந்த பட்டுப் புடைவை வாங்கினால், அதை ஒரு தரம் கட்டிவிட்டு, பெட்டியில் வைத்துப் பூட்டி விடுவார்கள். காரணம் தொடர்ந்து அதே புடைவையைக் கட்டினால் 'இவளிடம் வேறு புடைவையே இல்லை போலிருக் கிறது' என்று மற்றவர்கள் கிண்டல் செய் வார்கள் என்ற பயம்தான். ஆனால் ஒரு புடைவையை இருபது, முப்பது விதமாக மாற்றிக் கட்ட முடியும். அப்படி மாற்றிக் கட்டும்போது, வெவ்வேறு புடைவையாக அது மற்றவர்களுக்குத் தோன்றும். எங்கள் சிலபஸில் இதெல்லாம் உண்டு" என்கிறார் ரேஷ்மா.

மாமியாரைப் புரிந்து கொள்வது என்பது மிக முக்கியமான விஷயமாகச் சொல்லித் தரப்படுமாம். "ஒரு வெற்றிகரமான மண வாழ்க்கைக்கு மாமியாரின் பங்களிப்பும் முக்கியம். மணமாகப் போகும் பெண்களிடம் பெரும்பாலும் 'மாமியார் பயம்' நிறையவே இருக்கிறது. மாமியாருக்கு வரும் மருமகளை நினைத்து பயம். கணவருக்கோ இந்த இருவரையும் பாலன்ஸ் செய்து எப்படி நடந்து கொள்வது என்ற குழப்பம். "மருமகள் ஒரு குடும்பத்தில் நுழையுமுன்னர், மாமியாரி டம் வீட்டையும், நிதியையும் நிர்வகிக்கும் அதிகாரங்கள் இருக்கின்றன. அவை எங்கே பறிபோய்விடுமோ என்று அவருக்குள்ள பயத்தில் உரசல்கள் துவங்குகின்றன. மரு மகள் இந்த விஷயத்தில், முதலில் மாமி யாருக்கு நல்ல உதவியாளராக, கட்டளை களைச் செயல்படுத்துபவராக, நடந்து கொண்டிருக்க வேண்டும். காலப் போக்கில் கொத்துச்சாவியும் கூடவே அதிகாரங்களை யும் மாமியாரே மடியில் போட்டு விட்டுச் செல்வதைப் பார்க்கலாம்" என்கிறார் ரேஷ்மா.

கணவன் மனைவியிடம், சின்னச்சின்னச் சந்தோஷங்களை எதிர்பார்க்கிறான். அவனுக்கு வேண்டிய துணிமணிகளை அவன் செலக்ட் செய்து எடுத்து வந்தால் ஜில்'லாகி விடுவான். அதேசமயம் அவனே எடுத்து வரும் துணியைப் பார்த்து 'அட இது உங்களுக்கு பிரமாதமாக இருக்குமே' என்றால் 'தாங்க்யூ' என்று உருகிவிடுவான். "இது நல்லாத்தான் இருக்கு. ஆனால் இன்னமும் கொஞ்சம் லைட் கலர் கிடைக் கலையா?" என்றால் அடுத்தமுறை உங்கள் விருப்பம் நிறைவேறும்.

பாட திட்டங்கள் மூன்று பகுதிகளாகப் பிரித்து வைக்கப்பட்டிருந்தாலும், இவற்றைச் சுருக்கி, ஒரே பாட திட்டமாக, ஒரு குறுகிய கால பயிற்சியைப் பற்றி கேள்விப்பட்டு, சில படித்த கணவர்கள் அதிகம் படிக்காத தங்கள் மனைவிகளை இந்த வகுப்புகளுக்கு அனுப்பலாமா? என்று கேட்கிறார்கள். அதற்கும் ஓ.கே சொல்லிவிட்டேன்" என்கிறார் ரேஷ்மா.

"பெண்கள் தற்காத்துக் கொள்ளு தல் என்பது இப்போதைய காலகட்டத் துக்கு மிக முக்கியமான விஷயம். அடுக்கு மாடி வீட்டில் தனித்திருக்கும் பெண்மணிக்கு பல விதங்களில் ஆபத்துகள் வருகின்றன. அந்த நிலையில் தற்காத்துக் கொள்வ தெப்படி?

"மிகச் சுலபம். உங்கள் சமையலறை மிளகாய்ப் பொடி பத்து பேரைக்கூட விரட்டி விடும்" என்கிறார் ரேஷ்மா. இந்த மிளகாய் பொடி ஐடியா, தென்கிழக்கு ஆசியாவி லேயே மிகச் சிறந்த யோசனையாகக் கருதப் பட்டு, சில காலம் முன் ஒரு தன்னார்வ தொண்டு நிறுவனத்தால் அமெரிக்காவுக்கு அழைத்துச் செல்லப்பட்டார் ரேஷ்மா. "பல பெண்களுக்குக் கணவர் எங்கு வேலை செய்கிறார் என்பதே தெரியவில்லை (அல்லது தெரிந்து கொள்ள முடியவில்லை)



ஒரு அவசரத்தின்போது அவர் டெலிபோன், செல் நம்பர் தெரியாமல் அவதிப்படுகிறார்கள். எனவே பெண்கள் கணவர், குழந்தைகள் ஆகியோர் தொடர்புடைய முக்கியமான டெலிபோன் எண்களை வீட்டில் குறிப்பிட்ட இடத்தில் மாட்டி வைக்க வேண்டும். அதேபோல திருமணச் சட்டங்களைப் பற்றியும் மேலோட்டமாகத் தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டும். "பெண்களுக்குச் சொத்தில் உரிமை, ஜீவனாம்சம் ஆகியவற்றைப் பற்றி இன்றைய கால கட்டத்தில் ஒரு பெண் அவசியம் தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டும். இவையும் பாடத் திட்டத்தில் உண்டு."

"ஐயோ... கணவர் வீட்டில் எப்படிச் சமாளிக்கப் போகிறேனோ... என்று பலவித பயங்களுடனேயே ஒரு பெண், புகுந்த வீட்டுக்குச் செல்லத் தயாராகிறாள். நீ பயப்படும் விதத்தில் விஷயங்கள் இல்லை. ஒரு சுமுகமான அணுகுமுறை மூலம் வாழ்க்கையைச் சுகமாக்கிக் கொள்ளலாம் என்பதுதான் எங்கள் பயிற்சியின் அடிப்படை" என்கிறார் ரேஷ்மா. இந்த பிராஜெக்டில், அவருக்கு உதவியாக பத்து பேர் கொண்ட ஆலோசனை குழுவும் இருக்கிறது. பயிற்சி கொடுக்க, ஒவ்வொரு துறையிலும் சிறந்த நிபுணர்கள் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள்.

"பெண்ணானவள் தன் குடும்பத்தில் உள்ள மற்ற மூத்த பெண்களை 'ரோல் மாடல்களாகக் கொண்டே வளர்கிறாள். அந்த நிலையிலேயே கணவன் வீட்டுக்கும் செல்கிறாள். எனவே, உங்கள் பயிற்சிகள் எந்த அளவுக்கு அவளுக்கு உதவும்?"



"இப்போதெல்லாம் குடும்பத்தில் பெரியவர்கள் எங்கே இருக்கிறார்கள்? முக்கியமான முடிவுகள் எடுக்கும்போது பெற்றோர், குழந்தைகளைக் கலந்தாலோசிப்பதில்லை. அந்த முடிவுகள் எப்படி எடுக்கப்பட்டன என்பதையும் விளக்க மாட்டார்கள். இந்த நிலையில் தற்காலத்து பெண்களுக்கு இது போன்ற பயிற்சிகள் நிறையவே தேவைப்படுகின்றன. பெரியவர்கள் கற்றுத் தருவதையும் கூடுதலாக வைத்துக் கொள்ளட்டுமே."

"இப்போது வரும் தமிழ் டெலி ஸீரியல்களில் புகுந்த வீட்டிற்குப் போகும் பெண்தான் அந்த குடும்பத்துக்கு அச்சாக இருந்து, பல சிக்கலானச் சுழல்களில் முடிவுகள் எடுத்து குடும்பத்தைக் காப்பாற்றுவது போல காட்சிகள் வருகின்றன. இது நிசர்சன நிலைக்கு பொருத்தமாக இருக்கிறதா?"

"இந்த ஸீரியல்கள் மணமாகாத பெண்களிடம் நெகடிவாகவும், பாஸிடிவாகவும் இருவிதமான விளைவுகளை ஏற்படுத்தும். 'புகுந்த வீட்டில் இத்தனை அதிகாரங்களை நாம் எடுத்துக் கொண்டு விளையாடலாம் போலிருக்கிறது' என்று ஒரு நெகடிவ் எண்ணத்தையும், 'ஆகா... இது போன்ற பிரச்னைகள் வரும் போலிருக்கிறது. அதைச் சமாளிக்கத் தயாராவோம்' என்று பாஸிடிவ் வான எண்ணத்தையும் உருவாக்கும். முதலில் சொன்னதை அழித்து இரண்டாவதாக சொன்னதற்கு ஆக்கம் கொடுக்கும் பயிற்சியே எங்கள் வகுப்புகள்."

"பொதுவாக பெண்களுக்குப் பதிமூன்று பதினான்கு வயதிலேயே பொறுப்புகள் வரும் நிலையில்தான் குடும்ப அமைப்பு இருக்கிறது. ஆனால் இருபது வயதிலும் ஆணுக்குப் பொறுப்பு வருவதில்லை. இந்த நிலையில் கணவனாகப் போகிறவனுக்குத் தானே பயிற்சிகள் தேவைப்படுகின்றன?"

"இது உங்கள் கருத்தாக இருக்கலாம். ஆனால் husband to be school என்ற எண்ணமும் இல்லாமல் இல்லை. முதல் முயற்சியின் வெற்றியின் அடிப்படையில்தான் அது பற்றி முடிவெடுக்க வேண்டும்."

— ஸ்ரீநிவாசன்

படங்கள்: ராஜன்



சீனப் பயணம் இல்லை!

போர்கள் அதிகரித்து வருவதற்கு, ஆன்மிக உணர்வு தேய்ந்து வருவதும் ஒரு காரணம்தானே?

போருக்கும் ஆன்மிகத்திற்கும் சம்பந்தமில்லை. போர் சொந்தப் பிரச்னை, நாட்டுப் பிரச்னை, அரசியல் பிரச்னை, தனி மனிதர்களின் பிரச்னை. ஆனால் அபாரமான அறிவியல் வளர்ச்சி காரணமாக அணு ஆயுதம், இரசாயன ஆயுதம், இப்போது நுண்ணுயிர் ஆயுதம் என்று கண் இமைப்பதற்குள் பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்கள் வந்து விட்டன என்பதால் பயம் வருகிறது. இந்த பயத்தினாலேயே ஆன்மிகம் நிறைய வளர்கிறது. இன்று வளர்ந்திருப்பதைப் போல உலகில் என்றைக்குமே வளர்ந்திருக்காது.

ஆன்மிகமும், அரசியலும் இணைந்து செயல்படும் இந்தியாவில் விரும்பத்தகாத விளைவுகளை நிறைய சந்தித்து வருகிறோம் இல்லையா?

என்றைக்கும் ஆன்மிகம் ஆன்மிகம்தான். அரசியல் அரசியல்தான். ஆனால் ஆன்மிக ஈடுபாடு கொண்டவர்கள் அரசியலில் இருந்தால்தான் அரசியலே நன்றாக இருக்கும். ஆன்மிகத்தை அரசியல் ஆக்கக் கூடாது.

இந்து ஆலயங்கள் அரசின் இந்து அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் இருப்பது சரியா? இதுபற்றி உங்கள் தனிப்பட்ட கருத்து?

சுதந்திரத்திற்கு முன்னால் போட்ட கமிஷன். அன்றையிலிருந்து அந்தத் துறை இருந்து கொண்டேதான் இருக்கிறது. அரசாங்கத்திற்குப் பலமாக வளர்ந்துவிட்டது. அவ்வளவு சுலபமாக அரசாங்கம் பிரித்துவிடமாட்டார்கள். பக்தர்கள்தான் தாங்களே முன் வந்து, கோவில்களை எடுத்து திருப்பணி செய்ய வேண்டுமே தவிர, அரசாங்கத்தை நம்பிப் பிரயோஜனம் இல்லை.

ஆனால் அரசாங்கத்தைவிட்டு வெளியே இயங்கும் பல அறநிறுவனங்கள், சேவை நோக்கத்தை மறந்து லாப நோக்கத்தோடு செயல்பட்டு வருகின்றன என்ற குற்றச்சாட்டு பலமாக எழுந்திருக்கிறதே?

எங்கேயிருந்தாலும், என்றைக்கு இருந்தாலும் அரசு நிறுவனத்தைக் காட்டிலும், தனியார் நிறுவனங்கள் நன்றாகத்தான் நடக்கும். அங்கொன்று, இங்கொன்று சிறு தவறுகள் நடக்கலாம். அரசு நிறுவனங்களில்தான் தவறுகள் அதிகம் நடக்கின்றன.

அருளுக்கும் கருணைக்கும் பெயர்போன காஞ்சியில் நாற்பதாயிரம் குழந்தைத் தொழிலாளர்கள், தறிகளில் வாடுவது குறித்து சிந்தித்ததுண்டா?

திடீரென்று குழந்தைத் தொழிலாளர்களை அடியோடு நிறுத்திவிட்டால், அவர்களை நம்பியிருக்கிற குடும்பங்களுக்குக் கஷ்டம் ஏற்படலாம். அதானல் அவர்களை வேலை மட்டும் வாங்கிக் கொண்டு, விட்டுவிடாமல், காலை, மாலை கல்வி அறிவு கொடுத்து, வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும். இதைத்தான் ஆதி முதல் சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

சீனப் பயணம் இப்போதைக்கு இல்லை என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் உறுதியாகப் பயணம் உண்டு என்று எடுத்துக் கொள்ளலாமா?

இல்லை என்றே எடுத்துக் கொள்ளுங்கள்!

மும்பை மசாலா

பச்சை விளக்கு?

"மும்பையின் முன்சிபல் கமிஷனர் யார்? மொத்தம் எத்தனை வார்டுகள்? கார்ப்பரேஷனின் வருடாந்தர பட்ஜெட் என்ன?" இவை எல்லாம் இம்முறை உள்ளாட்சித் தேர்தலுக்கு நிற்கின்ற வேட்பாளர்களிடம் கேட்கப்பட்டக் கேள்விகள். பாதி பேருக்குப் பதில் தெரியவில்லை. பெண் வேட்பாளர்கள் நிம்மதியாக 'வீட்டுக்காரரைக் கேளுங்க' என்று கைநீட்டிவிட்டார்கள். இதில் கைநாட்டுகளும் அடக்கம். இம்முறை பெண்களுக்கென்று ஒதுக்கீடு இருப்பதால் பல குடும்பத் தலைவிகளுக்கு, செல்வாக்குள்ள கணவர்கள் புண்ணியத்தில் அடித்தது யோகம்.



• சோனாலி

மெக்கானிகல் எஞ்சினீயரிங்கில் டிப்ளமா வாங்கிவிட்டு 'வடாபாவ்' கடை வைத்திருக்கும் வேட்பாளர் ஒருவர், தாம் வென்றால் நடைபாதைக் கடைக்காரர்களுக்கு இருக்கும் இன்னல்களைக் களைவதாக வாக்குறுதி அளித்துள்ளார். காமாத்திபுரா பகுதியிலிருந்து ஒரு 'கமர்ஷியல் செக்ஸ் வர்க்கரும்" (இப்பல்லாம் அப்படித்தாங்க பெயர்) நிற்கிறார். இவருடைய இரண்டு குழந்தைகளும் பள்ளிகளில் படிக்கிறார்களாம். 'இந்தப் பகுதியிலுள்ள பெண்களின் துயர் களைவேன்' என்கிறார். ம்ம்.. சிவப்பு விளக்குப் பகுதியை, பச்சை விளக்காக(?) மாற்றினால் போதாதா?

போதாத காலம் தான் மஹா விஷ்ணுவுக்கு. இனிமேல் விஷ்ணு சஹஸ்ரநாமத்தைக் கேட்டாலே, ஃபா-ஃபெமீனா அழகிகளின் பூனை நடைதான் கண்ணெதிரே வந்து நிற்கும் போலிருக்கிறது. ஃபைனல்லை பார்த்தவர்கள் இன்னும் 'ஷாக்'கிலிருந்து விடுபடவில்லை. ஒரு நெருப்புச் சட்டி நடனத்தை இரண்டு ஆம்பிளையிஷ் பெண்களும், நாலு பெண்களுமாக ஆடி பயமுறுத்தினார்கள். அந்தப் பயங்கரத்திலிருந்து மீள்வதற்குள்ளேயே "சாந்தாகாரம் புஜக சயனம்.." என்ற வரிகள் ஒலிக்க ஆரம்பித்தன. பாற்கடலில் ஆனந்த சயனத்தில் இருக்கும் திருமாலையே தட்டி எழுப்பி சிறப்பு விருந்தினராக அழைத்து வந்து விட்டார்களோ? என்று பார்த்தால்... பங்கு கொண்ட அழகிகளெல்லாம் அரைகுறை ஆடையில் நடையோ நடை என்று நடக்கிறார்கள்! 'ஞான' வழியில் சென்றால் 'நிர்வாண' நிலை அடையாலம் என்று இதைத்தான் சொன்னார்களோ?

இதைத்தான் சொன்னார்கள், அதைத்தான் சொன்னார்கள் என்று சிண்டு முடிவதும் வம்புக்

கலைவதும் 'பரஸ்பர' பத்திரிகைகளின் 'குறுகுறு' குணம். அதனால்தான், ஜஹாங்கிர் ஆர்ட் காலரியில் ஓவியக் கண்காட்சி நடத்த வந்த ஓவியர் ஜஹாங்கிர் சபாவாலா, புகழ் பெற்ற ஓவியர் எம்.எஃப். ஹுசைனைப் பற்றி 'அவர் ஒன்றும்' பெரிய ஜீனியஸ் இல்லை, சுய விளம்பரப் பிரியர் அவ்வளவுதான்'' என்று கருத்து தெரிவித்ததை, பத்திரிகைகள் பிரசுரித்ததும், ஹா... பூகம்பம் வெடிக்கப் போகிறது என்று எல்லோரும் வாய் பிளந்து காத்துக் கிடந்தார்கள். ஆனால்.... "சபாவாலா ஒரு ஜெண்டில்மேன். அவர் சொன்னால் சரியாகத்தானிருக்கும். நான் பெரிய ஜீனியஸ் இல்லை. அவர் சொல்வதை நூறு சதவிகிதம் ஏற்றுக் கொள்கிறேன்'' என்று சொல்லி விட்டாரே ஹுசைன்! அவர் நாணயமாகப் பேசுவதாகச் சொன்னார் என்றால் இவர் நாநயத்தால் அவர் நாண நன்னயம் செய்துவிட்டாரே!



• மருமகனும் மகனும்



• பால் தாக்கரே

செய்துவிட்டும் இருக்கிறார் சோனாலி பிந்த்ரே. ஆம்... கங்கையில் ஸ்நானம் செய்தும் இருக்கிறார், பண்ணிய பாவங்களை எல்லாம் கழுவி விட்டும் இருக்கிறார்.

நடுங்கும் குளிரில் வெட வெடத்துக் கொண்டே புனித கங்கையில் நின்று கொண்டு அவர் உதிர்த்த பொன்மொழி என்ன தெரியுமா? ''பழைய பாவங்களைக் களைந்து விட்டேன். இனி புதிய பாவங்களைச் செய்ய ஆரம்பிக்கலாம். ''பழையன கழிதலும் புதியன புகுதலும்' என்பதன் அர்த்தத்தைப் புரிந்து கொண்டு விட்டீர்களா?


புரிந்து கொண்டுதான் விட்டார் ராஜ் தாக்கரே - என்னதான் இருந்தாலும் பிள்ளை பிள்ளைதான். மருமகன் மருமகன் தானென்று. உள்ளாட்சித் தேர்தலுக்கு வேட்பாளர்களைத் தேர்வு செய்யும் விஷயத்தில் தன்னை ஒரேயடியாக ஓரங்கட்டிவிட்டு, தாக்கரேவின் மகன் உதவ் தாக்கரே தம் இஷ்டத்துக்குச் செயல்பட்டது இவரை நொந்து, வெந்து போக வைத்துவிட்டது. "என்னுடன் கட்சித் தொண்டர்கள் இணையக் கூடாது. என்னுடன் தொடர்பு வைத்துக் கொண்டாலே அவர்களை ப்ளாக் லிஸ்ட் செய்து விடுவோம் என்று மிரட்டுகிறார்கள். என் உள்ளக் குமுறலை தாக்கரே சாஹேப்பிடம் கொட்டிவிட்டேன். அவர்தான் 'வித்தியாசங்களை எல்லாம் இப்போது மூட்டை கட்டி வைத்துவிட்டு, பிரசார வேலைகளைக் கவனி' என்று கூறியிருக்கிறார். அவர் காதில் போட்டுவிட்டால் நடவடிக்கை எடுப்பார் என்று தெரியும். அவருக்காகத்தான், எதிர்க் கட்சிக்காரர்கள் என்னை வெற்றிலை பாக்கு வைத்து அழைத்தாலும் அதை உதாசீனப்படுத்தி விட்டு, பிரசார வேலைகளில் ஈடுபடுகிறேன்'' என்கிறார். உள்ளாட்சி தேர்தலுக்கு முன் உட்கட்சி தேர்தல் வந்துவிடுமோ?

- ஜெயஸ்ரீ ராஜ்





புக் ஷங்க்!





மானாவாரிப்பூ —
சிறுகதைகள்:
மேலாண்மை பொன்னுசாமி.

அழுத்தமான கிராமத்துப் பாத்திரங்களை மனம் முழுவதும் பரவ விடுகிற படைப்பாளி மேலாண்மை பொன்னுசாமி. கல்கி உட்பட பல்வேறு பத்திரிகைகளில் வெளியான அவரின் முத்தான முப்பத்திரண்டு சிறுகதைகளின் தொகுப்பு இந்நூல். தொகுப்பை முழுவதுமாகப் படித்து முடித்தால் தென் மாவட்டங்களில் உண்டு, உறங்கி வாழ்ந்து வந்த மனநிலை ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது. வாசிக்கப்படவேண்டிய சிறுகதைகள்.

வைகை வெளியீடு, 6/16, புறவழிச்சாலை,
மதுரை - 18, விலை ரூ. 100/-

தணல் கொடிப் பூக்கள் —
கவிதைகள்: மாலதி

இனிமையான அழகியல் பார்வையுடனான, உணர்வு சார்ந்த அனுபவங்களைத் தொகுப்பு முழுவதும் காண முடிகிறது.

நீ என்
பிச்சைப் பாத்திரத்தில் விழுந்த
வைரமாலை.
விளிம்புகளில் வந்த வானவில்
யுகதீபம், கருணைக்கடல்
என் நெற்றிப் பொட்டின்
நேர்விளக்கம்.
முழுசாய் அன்பின் விரிவுநீ
அப்படியும் உன்னுடன்தான்
என் சச்சரவுகள்.

சாந்தினி பதிப்பகம்.
ஆர்.என்.6, பட்டினப் பாக்கம்.
சென்னை - 28.
விலை ரூ. 45/-

உயிர்ச்சுழி—
சிறுகதைகள் : பாரதிபாலன்

மனித உறவுகளை இயல்பாகப் பேசுகிற இவரின் சிறுகதைகள் ஆற்றின் நீரோட்டம் போல் இயல்பாகச் செல்கின்றன. மொழியும் கதை சொல்லும் பாங்கும் பிரயத்தனமின்றி இலகுக்கு வருகிறது. 'கானல்' — ஓர் உதாரணம்.

சந்தியா பதிப்பகம், 52, முதல் தளம்,
அஞ்சுகம் நகர், அசோக் நகர்,
சென்னை -83. விலை ரூ. 50/-

நைலான் ஊஞ்சல் —
கவிதைகள் : ஜீவி

எந்த முக்காட்டுக்குள்ளும் முடங்கி விடாமல் தோளில் கைபோட்டு, தோழமையோடு இயல்பாய் அழைத்துச் செல்கின்றன ஜீவியின் கவிதைகள்.

வண்டி நிறுத்தும் போதெல்லாம்
மனைவி சொல்வாள்
"கையோடு அந்தக்
கவரப் போட்டா என்ன?
வெய்யிலிலே கிடந்து
வெளுத்துப் போகுதில்ல"
ஒவ்வொரு முறையும்
காதில் விழாதது மாதிரி
நகர்ந்து விடுவேன் நான்.
வண்டிக் கண்ணாடியில்
வாகாய் அமர்ந்து
கொத்தி விளையாடும்
சிட்டுக்குருவி பாவம் என்று
எப்படிச் சொல்ல அவளிடம்.

காலம் வெளியீடு,
19/1, பிள்ளையார் கோவில் தெரு,
கோரிப்பாளையம், மதுரை - 2.
விலை ரூ: 20/-

கார்க்கி

13.2.2002

திருப்பூர் கிருஷ்ணன்


சில தொடர்கதைகளின் கதைகள்...

கதிருக்கு நா.பா. ஆசிரியராகப் பதவி ஏற்றவுடன் ஆடிட்டர் குருமூர்த்தி, கே.ஆர். வாசுதேவன் இருவருக்கும் மனப்பூர்வமாக நன்றி தெரிவித்தார். பெரு மதிப்பிற்குரிய ராம்நாத் கோயங்கா கதிருக்கு ஆசிரயராகும்படி நா.பா.வை அழைத்ததில் இவ்விருவருக்கும் பெரும் பங்கு இருந்தது. அதன்பிறகு தாம் பெரிதும் மதிக்கும் இரண்டு முக்கியமான பிரமுகர்களிடம் வீடு தேடி நேரில் சென்று ஆசி பெற்றார். அவர்களில் ஒருவர் கல்கி அதிபர் சதாசிவம். இன்னொருவர் கி.வா. ஜகந்நாதன்.



புகழ் பெற்ற சரித்திர நாவலான 'ராணி மங்கம்மாள்', சமூக நாவல்களான 'நிசப்த சங்கீதம்', 'சாயங்கால மேகங்கள்' இவையெல்லாம் தாம் ஆசிரியராக இருந்தபோது நா.பா. கதிரில் எழுதிய படைப்புகள்.





• கஸ்தூரி ரங்கன்

தாம் கதிர் ஆசிரியரானதும் தம் உற்ற நண்பர் ஒருவரின் தொடர்கதையைக் கதிரில் வெளியிட வேண்டும் என்று நா.பா. விரும்பினார். நட்புரிமையோடு 'கதிரில் நீங்கள் விரைவில் தொடர் தொடங்குகிறீர்கள்' என்று அவரிடம் தெரிவித்து விட்டு, 'இன்னார் தொடர் எழுதப் போகிறார்' என்று அறிவிப்பையும் தயார் செய்யச் சொல்லிவிட்டார். அறிவிப்பும் தயாராகியது. ஆனால் தம் உடல் நிலை காரணமாக அப்படி ஒரு தொடரைத் தம்மால் எழுத இயலாது என்று அந்த நண்பர் தயக்கம் தெரிவிக்கவே அந்த அறிவிப்பு கடைசி நேரத்தில் நிறுத்தப்பட்டது. அதன் பிறகு எந்தப் பத்திரிகையிலும் அவர் தொடர் எழுதவுமில்லை.



• நா.பா.வுடன் கிருஷ்ணன்

ரான டாக்டர் எஸ். ராமநாதனுக்கும் ஒரு சேர ஆதர்ஸ் கில்ட் மூலமாக இரங்கல் கூட்டம் நடத்த ஏற்பாடு செய்தார் எஸ்.வி.எஸ். நா.பா. பற்றி நான் பேசினேன். எஸ். ராமநாதன் பற்றி மிகச் சிறப்பாகப் பேசினார், கல்கியின் புதல்வி திருமதி ஆனந்தி ராமசந்திரன், நா.பா.வின் அந்த உற்ற நண்பரைப் பற்றி உள்ளம் உருகப் பேசியவர் அந்த நண்பரின் புதல்வரான 'அகிலன்' கண்ணன்.

நா.பா. கதிர் ஆசிரியராக இருந்த காலத்தில் ஜெயந்தன் உள்படப் பல முக்கியமான எழுத்தாளர்கள் கதிரில் தொடர்கதை எழுதினார்கள். ர.சு. நல்ல பெருமாளின் எழுத்து மேல் நா.பா.வுக்கு மதிப்பும் மரியாதையும் உண்டு. அவரிடம் தொடர்கதை கேட்டுக் கடிதம் எழுதினார் நா.பா. அதற்கு நல்ல பெருமாள் எழுதிய பதிலைப் பார்த்து வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்தேன் நான். 'நல்ல பெருமாள் என்ற அந்தப் பெயர் அவருக்குக் காரணப்பெயரும்கூட' என்று சொல்லிச் சிரித்தார் நா.பா. அந்தக் கடிதம் இப்படி இருந்தது:

'உங்கள் அன்புக்கு நன்றி. என்னிடம் இப்போது கதைக்குக் கரு எதுவும் இல்லை. விரைவில் தோன்றலாம். அவ்விதம் தோன்றினால் உங்களுக்கு கதைச் சுருக்கத்தை எழுதுகிறேன். நீங்கள் பரிசீலியுங்கள். பொருத்தமாக இருந்தால் வெளியிடுங்கள். இப்போது கேட்டதற்காக அப்போது கட்டாயம் வெளியிட்டாக வேண்டிய அவசியம் எதுவுமில்லை.'

கொஞ்ச காலம் கழித்து ஒரு கதையின் சுருக்கத்தை அனுப்பினார் நல்லபெருமாள். மூற்பட்ட சமுதாயத்தின் பிரச்னை பற்றிய கதை அது. உடனடியாக நாவலின் சில அத்தியாயங்களை அனுப்பச் சொல்லி எழுதினார் நா.பா. ஓரிரு மாதங்களில் நாவல் முழுவதையுமே அனுப்பி விட்டார் அவர். கதிரில் தொடராக வந்த அந்த நாவல்தான் வாசகர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றதும் பின்னர் வானதி பதிப்பகத்தில் புத்தகமாக வெளியிடப்பட்டதுமான 'தூங்கும் எரிமலைகள்' பிறகு 'மருக்கொழுந்து மங்கை' என்ற ஒரு சரித்திர நாவலையும் கதிரில் எழுதினார் அவர்.

அந்த நண்பரும் நா.பா.வும் சாகித்ய அகாதமி உள்படப் பல்வேறு குழுக்களில் இணைந்து அங்கம் வகித்தவர்கள். அவரும், நா.பா.வும் சுதந்தரப் போராட்ட வீரரும் எழுத்தாளருமான கு. ராஜவேலுவும் இணைந்த அணியை மூவர் கூட்டணி என்று சில நண்பர்கள் குறிப்பிடுவதுண்டு.


நா.பா.வின் மனைவி திருமதி சுந்தரவல்லியைத் தம் சொந்த சகோதரியாகவே மதித்த அந்த நண்பர், நா.பா. காலமானபோது துயரம் தாங்காமல் இரண்டு முறை நா.பா.வின் மனைவியிடம் வந்து துக்கம் விசாரித்து விட்டுச் சென்றார். நா.பா. காலமான கொஞ்ச காலத்திலேயே அவரும் காலமாகி விட்டார். நா.பா.வின் அந்த உற்ற நண்பருக்கும் நா.பா.வுக்கும், இசைத்துறைப் பிரமுக

கி. கஸ்தூரிரங்கன் வாழ்க்கை வரலாற்றுப் பிரியர். ரகமியின் ரசிகர். ரகமியின் வாழ்க்கை வரலாற்றுத் தொடர்களை நிறைய வாங்கி வெளியிட்டார். தீரர் சத்தியமூர்த்தி, ஜெய்ஹிந்த் செண்பகராமன் போன்றவற்றையெல்லாம் வெளியிட்ட பெருமை அவருடையது. (ரகமி பாரதியார் திரைப்படம் பார்த்துக் கொண்டிருக்கும்போது மாரடைப்பால் காலமானார்.)

அறந்தை நாராயணன் எழுத்திலும் கஸ்தூரிரங்கனுக்கு

மரியாதை உண்டு. தொடர்ந்து திரைத்துறை பற்றிய அவரது பல தொடர்களை வெளியிட்டார். நான் சுஜாதாவை ஒருங்கிணைப்பாளராகக் கொண்ட அம்பலம் இணைய இதழில் கொஞ்ச காலம் ஆசிரியராக இருந்தேன். அப்போது அறந்தை நாராயணன் கட்டுரைகள் பலவற்றை வாங்கி வெளியிட்டேன்.

திடீரென்று ஒருநாள் அறந்தை நாராயணன் மனைவி சகோதரி கல்பனா அறந்தை என்னுடன் பேச விரும்புகிறார் என்று தொலைபேசியில் தெரிவித்தார். அறந்தையின் உடல் நலம் மிகவும் குன்றியிருந்த நேரம் அது. தொலைபேசியிலேயே 'என்ன அறந்தை! சௌக்கியமா?' என்று கேட்டேன். 'சௌக்கியக் குறைவுதான்' என்றார். திடீரென்று, 'கஸ்தூரிரங்கன் மிக நல்ல மனிதர்' என்று சொன்னார். இதைச் சொல்லவா ஃபோன் என்ற ஆச்சரியத்தோடு 'உண்மைதான்' என்றேன் நான். 'நீங்கள் கஸ்தூரிரங்கன் மாதிரி ஆக முயல வேண்டும்' என்றார். 'முயற்சி செய்கிறேன்' என்றேன். ஃபோனை வைத்துவிட்டார். மிகச் சில நாட்களில் அறந்தை காலமாகிவிட்டார். அவரின் இறுதி அஞ்சலிக்கு முதுபெரும் பத்திரிகையாளர் சின்னக்குத்தூசி உள்படப் பல பிரமுகர்கள் வந்திருந்தார்கள். நானும் போயிருந்தேன். எந்தச் சடங்கும் செய்ய வேண்டாம் எனக் கம்பீரமாக அறிவித்துவிட்டுக் காலமான அந்தப் பொதுவுடைமைவாதியின் உடல் கண்ணாடிப் பெட்டிக்குள் கிடத்தப்பட்டிருந்தது. கணவர் விருப்பப்படியே எந்தச் சடங்குக்கும் அந்த உடலை உட்படுத்தாத தீர்மானத்தோடு வீற்றிருந்த சகோதரி கல்பனா மேல் எனக்கு மிகுந்த மரியாதை எழுந்தது. அந்த உடலுக்கு அஞ்சலி செலுத்தி என் கண்களைத் துடைத்துக் கொண்டேன். என் ஆசிரியரான கஸ்தூரி ரங்கன் மேல்தான் அவருக்கு என்ன மரியாதை...!



''இன்டர்வியல எல்லா கேள்விக்கும் பதில் சொல்லிட்டேன். கடைசி கேள்விக்கு மட்டும் பதில் சொல்ல முடியலை.''

''அப்படி என்ன கேட்டாங்க?''

''லஞ்சம் எவ்வளவு கொடுப்பீங்க?''

- எஸ். மோகன்

இந்திரா பார்த்தசாரதி, ஜெயகாந்தன் ஆகியோர் எழுத்துக்களின் ரசிகர் கேயார்வி. அந்த இருவரது தொடர்கதைகளையும் வாங்கி வெளியிட்டார் அவர். ஜெயகாந்தன், கே.ஆர். வாசுதேவன் கதிருக்கு ஆசிரியராய் இருந்த காலத்தில் எழுதிய தொடர்தான் 'அப்பவுக்கு அப்பா சொன்ன கதைகள்' கோபுலுவின் அழகிய ஓவியங்களோடு அது கதிரில் சிறப்பாக வெளிவந்தது. தொடங்கி நாலைந்து வாரங்கள் சென்றிருக்கும். ஒரு வாரம் அந்தத் தொடர்கதையில் தலைப்பு இடம் பெற்றதே ஒழிய, எழுதிய ஆசிரியரின் பெயரான ஜெயகாந்தன் என்பது அச்சேறாமல் விடுபட்டுப் போய்விட்டது. அச்சாகி வந்த கதிர்ப் பிரதியைப் பார்த்த கேயார்விக்குக் கவலையும் வருத்தமும். 'இது மாதிரி நேர்ந்துவிட்டதே! ஜெயகாந்தன் எவ்வளவு பெரிய எழுத்தாளர். அவர் வருத்தப்படுவாரே' என்று அங்கலாய்த்தார். நான் ஜெயகாந்தனுக்கு முன்கூட்டியே ஃபோன் செய்து, 'ஒரு சின்னத் தவறு நடந்துவிட்டது. இந்த வாரம் உங்கள் பெயர் விடுபட்டுப் போய்விட்டது. நீங்கள் பொருட்படுத்தாதிருக்க வேண்டும்' என்றேன். என்ன ஆச்சரியம்! 'அதனால் என்ன கிருஷ்ணன்! அது தொடர்கதைதானே? சென்ற வாரம் என் பெயர் வெளியாகியிருக்கிறது. அடுத்த வாரமும் வெளிவரப் போகிறது. என் வாசகர்கள் என் எழுத்தை வாசித்தால் என் பெயர் இல்லாவிட்டாலும் அது என் எழுத்துத்தான் என்பதைப் புரிந்து கொள்வார்கள். கவலையை விடுங்கள். அடுத்த அத்தியாயத்தை விரைவில் அனுப்புகிறேன்' என்றார் ஜெயகாந்தன். கேயார்வியின் மகிழ்ச்சிக்கும் நிம்மதிக்கும் அளவே இல்லை. இதன் பொருட்டாகவே கேயார்வி அன்று எனக்கு இரண்டு ஐஸ்க்ரீம் வாங்கி கொடுத்தார் என்ற விவரம் இன்று வரை ஜெயகாந்தனுக்குத் தெரியாது!

அம்மாவின் பஞ்சுபோன்ற விரல்களை ஒரு கையால் பற்றிக் கொண்டு மற்றொரு கையில் குச்சி ஐசை சூப்பிக் கொண்டே அவளின் வேகத்திற்கு நடக்கக் கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருக்கிறது. ஆனாலும் அம்மா வேகமாகத்தான் நடக்கிறாள்.

"ஏழா மெதுவா நடமா.." என்று எத்தனைமுறை அவளை நச்சரிப்பது?

"உனக்கென்ன கொஞ்சுத... வயலுக்குப் போய்ட்டு வந்து பீடி சுத்தனும், பன்னெண்டு மணிக்கு பீடிக்காரன் வந்துருவான். அவன்ட்ட பீடிய கொடுத்தாதான் காச தருவான். பேசாம வா... நச்சரிக்காம.." என்பாள். தெரியாதா?

ஒற்றையடிப் பாதை தாண்டி வயல்களின் வரப்புக்குள் கால் இறங்கியதும் அம்மாவின் வலப்புறமாக நடந்து வந்த நான், பின்பக்கம் வர வேண்டியதாகிவிட்டது. வரப்பை ஓர்



சுருக்குப் பை

ஆள் செல்லக்கூடிய அளவுக்குக் கொஞ்சம் கொஞ்சமாக வெட்டிச் சுரண்டியிருந்தார்கள் வயல்காரர்கள்.

"இதுல மாட்டுவண்டி போவும். இப்ப பாரு மனுஷன் போவ கூட எடமில்லை" என்று ஒருமுறை அம்மா சொல்லியிருக்கிறாள்.

அவளின் பின்பக்கமாய் வருவதும் நல்லதுதான். வயல்களை ஒட்டிச் செல்லும் ஓடைகளில் தண்ணீர்ப் பாம்புகள், சாரைப் பாம்புகள் சர்புர்ரென்று செல்வதைப் பார்க்கலாம். ஒருமுறை இப்படிச் செல்லும் போது தவளை ஒன்றை ஒரு சாரைப் பாம்பு கவ்விக் கொண்டு இருந்தது. விழுங்கவும் முடியவில்லை. குண்டான தவளை அது. 'க்கேக்...க்கேக்... என்று மட்டும் தவளை கத்திக் கொண்டிருந்தது. பக்கத்தில் கிடந்த இரண்டு கல்லைத் தூக்கிச் சரியாக குறி பார்த்து எறிந்தேன் அதன் மீது. பாம்பு தவளையை விட்டுவிட்டுப் பாய்ந்து தண்ணீருக்குள் சென்றது. தவளை பிழைக்குமென்று பார்த்தால்... பாவம்.. வயிறு கடிபட்டு ரத்தமாய் விழுந்து கிடந்தது வரப்பில். பிறகு அது இறந்துவிட்டது என்பது அம்மாவுடன் மறுநாள் வரும்போது, அதே இடத்தில் அது உயிரற்றுக் கிடந்தது கண்டு தெரிந்து கொண்டேன்.

கோடைக் காலங்களில் இந்த வரப்புகளில் இறங்கினால் ஒரு வயலில் கடலை, ஒரு வயலில் பயத்தங்காய், தட்டாம் பயறு என்று பிடுங்கிக் கொறித்துக் கொண்டே செல்லலாம்.

வயல் வரப்புக் கோணல்மாணலாய்ச் சென்று கொண்டிருந்தது. இந்த வரப்பிலிருந்து வடக்கு பக்கமாய்ப் பார்த்தால் இரும்புத் தடிகளால் ஆன ரயில் பாலம் தெரியும். அதன் மீது புகைவிட்டுக் கொண்டே ரயில் போகும்போது எழும் தடக் தடக், தடக் தடக் ஓசையைக் கேட்டால்

கைகளைத் தட்டிக் கொண்டு துள்ளிக்குதிப் பேன் நான்.

அம்மாவுக்கு மொட்டை போடும்போது ரயிலில் என்னைக் கூட்டிப் போயிருக்கிறாள். அது சாத்தூரா? திருச்செந்தூரா?என்று ஞாபகமில்லை. ஆனால் யாருமற்ற, அழகான மரங்களடர்ந்த கிழாம்பூர் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து ரயில் ஏறினோம். ஜன்ன லோரம் இருந்து கொண்டு வெளியில் தெரி யும் மரங்களையும் தூரத்தில் பறக்கும் பஸ், கார்களையும் பார்க்க எனக்குக் கொள்ளை ஆசை.

வயல் வந்திருந்தது. புன்னை மரத்தி னருகில், "இங்ஙன உட்காருல வாரேன்" என்று சொல்லிவிட்டு அம்மா, வயலில் உடைப்பு இருக்கிறதா? என்பதைப் பார்த்துக் கொண்டிருந்தாள். வயலுக்கு அடுத்து இருக்கும் தென்னந்தோப்பும் எங்களுடை யதுதான். அதையடுத்து கடனாநதி ஆறு இருக்கிறது. தோப்பின் ஒரு பகுதியை மழைக் காலங்களில் வந்த வெள்ளம் அரித்துச் சென்றுவிட்டது. இதில் நான்கைந்து தென்னம்பிள்ளைகளும் அரித்து அரித்து விழுந்துவிட்டன. இன்னும் மூன்று பின் ளைகள் பாதி அரிக்கப்பட்டு கறுப்பான அதன் வேர்கள் நீட்டநீட்டமாய் வால்டியூப் போல ஆற்றுத் தண்ணீரிலும் வெளியிலுமாகத் தெரிந்து கொண்டு இருக்கிறது.



எந்தக் கோடையிலும் தண்ணீர் வற்றவே வற்றாது இந்த ஆற்றில். ஆனால் மழைக் காலங்கள் தவிர முட்டளவு தண்ணீர்தான் எப்போதும்.

களையெடுக்கும் சமயத்தில் அம்மாவுடன் வந்தால் மத்தியானம் தென்னந்தோப்பில் உட்கார்ந்து சாப்பிட்டுவிட்டு ஆற்றில் குளிப்பதுதான் வாடிக்கை. காலையிலிருந்து சாயந்தரம் வரை தண்ணிக்குள் கண்கள் சிவக்க குதிகுதியென்று குதித்துக் குளிப்பது ஆனந்தம். இதில் சித்திமகள் பிரேமா எதிர்வீட்டு முத்துசாமி, மாரி, பரமசிவம் எல்லோரும் வந்துவிட்டால் கேட்கவே வேண்டாம். குதியாட்டம்தான்.

இம்மாதிரியான நேரங்களில் சில வேளைகளில் அம்மாவுக்குக் கோபம் வரும். வந்தால் அம்மணமாக குளித்துக் கொண்டிருக்கும் என்னைப் புளியங்கம்பால் அடி பிய்த்து விடுவாள்.

இப்படித்தான் போனமுறை களையெடுப்பில் நான் குளித்துக் கொண்டிருக்கும்போது அவள் கொஞ்சம் ஓங்கி அடித்த அடி சிவந்த என் காலில் பதிந்து ரத்தம் கன்னி, சிவப்புத் தடம் விழுந்துவிட, நான் அழுவதற்குப் பதில் அம்மா அழுது அரண்டு விட்டாள். பிறகு எனக்கும் அழுகை வந்துவிட்டது. ஆறாம் வகுப்பு படிக்கும் நான் மூன்று நாள் பள்ளிக்கூடத்துக்குப் போகவில்லை. என்னை இடுப்பில் தூக்கி வைத்துக் கொண்டு தெருவில் செல்வதைப் பார்த்து, "இவன் என்ன பச்சைப் புள்ளையா தாயீ... இடுப்புல ஏத்தி வச்சுட்டு அலையுதே!" என்று அம்மாவின் தோழிகள் 'இடக்குப்' பண்ணுவார்கள். நான் ஓட்டைப் பல்லைக் காண்பித்துக் கொண்டு சிரிப்பேன்.

தென்னந்தோப்பைப் பார்த்த அம்மா ஏசிக் கொண்டிருந்தாள். கெட்டவார்த்தைகளால் சப்தமாக ஏசுவது மட்டும் புரிந்தது. அவள் இப்படி ஏச ஆரம்பித்தால் தென்னை மரத்திலிருந்த தேங்காய்களை யாரோ திருடிவிட்டார்கள் என்று அர்த்தம். அவள் ஏசுவதைப் பார்த்து பக்கத்து வயல்காரரான வயித்துப் பாப்பா வந்தார். அவர் அம்மாவுக்குத் தூரத்துச் சொந்தம். "ஏய்..சீதை ஏன் ஏசிட்டிருக்கே. நீ பொம்பளை... உனக்கு இதெல்லாம் தேவையா? இங்க வந்து பறிச்சா எவன் வந்து கேப்பாம்னுதான் எல்லா பயலும் பறிச்சுட்டுப் போறான். வித்துட்டு வேற எதாவது வேலை செஞ்சி பிழைப்பியா அத விட்டுட்டு ஏசிட்டிருக்கே... போக்கத்தவளே... உன்னால தனியா இதப் பாக்க முடியுமா? சொல்லு" என்று சொல்லிவிட்டு ஒரு பீடியைப் பற்றி வைத்துக் கொண்டு சென்றுவிட்டார்.

அவர் போகும்வரை அம்மா எதுவும் பேசவில்லை. ஆனால் கோவம் குப்பென்று முகத்தில் ஏறியதைப் பார்த்தேன். அவர் மூன்று வயல்களைத் தாண்டிச் சென்றதும் அம்மா ஆரம்பித்து விட்டாள்.

"எதடா அடிச்சு புடுங்கலாம்னுதான் அலையுதானுவோ! அங்ஙன இங்ஙன எங்கயுமில்ல, எதிரி முடங்கி கிடக்கான் கருக்கு பையில'ன்னு சும்மாவா சொன்னாவோ? சுடுகாட்டுல பொணம் சும்மாதான் எரியுது. போய்த் தின்னுங்களேன். பொம்பளைன்னா காடு, கரை வச்சுப் பார்க்கக் கூடாது. எல்லாத்தையும் இவனுககிட்டக் கொடுத்துட்டுப் பிச்சையெடுக்கணும். அடுத்தவன் சொத்துக்கு அலையுத பயலுவோ நாளைக்குச் சோத்துக்குத்தான் அலையப் போறான். ஆமா, பேதியில போறவனுவோ இப்படி என் வயிறை எரிய வுடுதானுவளே... எம்மா தாயி வடக்குவா செல்வி. உன் கண்ணுமுன்னால வயலையும் தோப்பையும் வச்சிட்டு நான் இப்படி பரிதவிக்கணுமா? உனக்குக் கண்ணுமாயில்லே... பாத்துட்டுச் சும்மாதான் இருக்கியா?" என்று சாமியிடம் பேச ஆரம்பித்து விட்டாள்.



"கபாலி சரியான மோசடிப் பேர்வழி சார்!"

"என்னாச்சு?"

"மாமூல் கேட்டு அவன் வீட்டு காலிங் பெல்லை அமுக்கினா 'திருடன்...திருடன்'னு சத்தம் வருது!"



— அம்பை தேவா

திடீரென்று அம்மாவின் பேச்சுத் தடைபட்டது. இரு கைகளையும் சாமி கும்பிடுவது போலாக்கி சேர்த்து வைத்துக் கொண்டு கும்பிட்டாள். எதிரில் சரசரவென்று கன்னங்கரேலென்று ஒரு பெரிய பாம்பு தோப்புக்குள் நுழைந்து கொண்டிருந்தது.

"தாயீ.... என் தோப்புல தேங்காய் எளநீ களவாங்கற பய அடுத்த தடவை இந்த இடத்துல பொணமாதான் கிடக்கணும்" என்று பாம்பைப் பார்த்து வேண்டினாள்.

எனக்குப் பயமாகிவிட்டது. இதே வயித்துப் பாப்பா பலமுறை 'வித்திரு, வித்திரு' என்று அம்மாவிடம் சொல்லியிருக்கிறான். நானும் கூட அம்மாவிடம் இதைத் தெரியாத்தனமாகக் கேட்டுவிட்டேன்.

"ச்சிய்.... வெறுவாகெட்ட பயலே... ஊர்க்காரப் பய சொல்லுதானுவோன்னு நீயும் சொல்லுதியால... அது வெறும் வய மட்டுமில்லைல... உங்கப்பன் உசுரு. நான் பிச்சை எடுத்தாலும் எடுப்பேனே தவிர, அத மட்டும் விக்க மாட்டேன்" அம்மா அழ ஆரம்பித்துவிட்டாள்.

எனக்கு ஆர்வம் அதிகரித்துவிட்டது. அப்படியென்ன இருக்கிறது அந்த வயலில்?

"அது ஆயிப்போச்சி, பத்து பன்னெண்டு வருஷம். உங்க தாத்தாவுக்குக் கொஞ்சம் போண்டு மனை உண்டு. தாத்தா போய்ச் சேர்ந்த பெறவு உங்க சித்தப்பன் மாருக எல்லோரும் பங்குபோட்டு இடத்தை வித்தாக. அதுல வந்த ரூபாயைப் பிரிச்சு உங்க சித்தப்பாமாருங்கட்ட குடுத்துட்டு மிச்சம் இருந்ததை வச்சு இந்த வயலை வாங்குனாரு உங்கப்பன். வயல் வாங்குறது உங்கப்பாவுக்கு ரொம்ப நாள் கனவு. கல்யாணம் முடிஞ்சு மூணு வருஷத்துக்குப் பிறகுதான் நீ பிறந்தே. உங்கப்பா எப்ப பார்த்தாலும் வயல்லதான் கெடப்பாரு. நல்ல உழைப்பாளி. தென்னங்கன்னு எல்லாம் அவரு தனிமனுஷனா நின்னு நட்டதுதான். அதுதான் இப்ப வளந்து கெடக்கு. இதுல உங்கப்பாவ பாத்து உங்க இரண்டாவது சித்தப்பனுக்குப் பொறாமை. உனக்கு மூணு வயசுல வாய்க்காலுக்குப் போன உங்கப்பனை சண்டாள பாவி பஸ்காரன் ஏத்திக் கொன்னுட்டாம்... என் ராசா....நீ..."

— அழ ஆரம்பித்துவிட்டாள் அம்மா. சிறிது நேரத்துக்குப் பிறகு பேசினாள்:

"ஆஸ்பத்திரிக்குத் தூக்கிட்டுப் போவயில உயிருக்குத் துடிச்சிட்டிருந்த உங்கப்பன் சொன்ன கடைசி வார்த்தை: 'அந்த வயலை வச்சு எம்புள்ளைய பெரிய படிப்பு படிக்க வைக்கணும் சிதை; அதமட்டும் வித்துறாதன்னு சொன்னதுதான். பெறவு கொஞ்ச நாள் கழிச்சு இந்த வயலையும் தோப்பையும் எப்படியாவது வளைச்சிறணும்னு உங்க சித்தப்பன் என்னவெல்லாமோ பண்ணுனான். ஒண்ணும் முடியலை. இப்ப இந்த வயித்துப் பாப்பா ஆரம்பிச்சிருக்கான்...!"

மீண்டும் அழ ஆரம்பித்துவிட்டாள். பிறகு என்னைக் கட்டிப் பிடித்து, "நீ படிச்சு பெரிய ஆளா வந்து இத போல நாலஞ்சி வயக்காடு வாங்கணும்டா கண்ணு" என்று முத்தமிட்டாள்.

அது செவ்வாய்க்கிழமை. அம்மா எப்போதும் போல குளித்து, சாமி கும்பிடும்போது, மந்திரமாமா பொண்டாட்டி ஓடி வந்தாள். "ஏ மைனி கதைய கேட்டியளா... உங்க தோப்புல ஒருத்தன் விழுந்துகிடக்கானாம். உங்க அண்ணன் குளிக்கப் போய்ட்டு வரும்போது பாத்துட்டு வந்திருக்கு, எவன்னு தெரியலையாம்."


குப்பென்று வியர்த்துவிட்டது அம்மாவுக்கு. என்னைப் பிடித்துக் கொண்டு வேகமாக நடந்தாள் வயலுக்கு. எதிரில் வந்த பலவேசம் சொன்னான். "உன் கொழுந்தன்தான் விழுந்து கிடந்தான். மூச்சு பேச்சு இல்லை. ஆழ்வார்க்குறிச்சி ஆஸ்பத்திரிக்குத் தூக்கிட்டுப் போயிருக்கு."

"அம்மா... நம்ம சித்தப்பாவாமா?" என்றேன் நான். அவள் என் தலையைத் தடவி அணைத்துக் கொண்டாள். "அங்ஙன இங்ஙன எங்கயுமில்லை. எதிரி, முடங்கிக் கிடக்கான் கருக்குப் பையில."

அம்மா சொன்னது எனக்கு ஞாபகத்துக்கு வந்தது. ○

காஞ்சிப் பட்டுக்குச் சீன ஆபதது?

இந்தியப் பெண்களுக்கு மிகவும் பிடித்த மான இரண்டு விஷயங்களில் ஒன்று தங்கம். மற்றொன்று பட்டு. அதிலும் காஞ்சிபுரம் பட்டென்றால் சந்தோஷத்தில் பொட் டென்று மயக்கம் போட்டு விழுந்து விடுவார் கள் என்று வேடிக்கையாகச் சொல்வதுண்டு. ஆனால் இன்று காஞ்சிபுரத்தில் பட்டு நெசவும், பட்டு விற்பனையும் குற்றுயிராகக் கிடப்பதை மத்திய, மாநில அரசுகள் வேடிக் கைப் பார்த்து வருகின்றன.



• கலைக்கோ பி



• கிருஷ்ணா



• வீரப்பன்



என்னதான் விசைத்தறிகள் வந்து விட்டாலும் கைத்தறி மூலம் நெய்யப்படும் பட்டுப் புடைவைகளுக்கே முதல் மரியாதை. காரணம் கைத்தறியில்தான் நிறைய டிசைன்களையும் பல்வேறு வண்ணங்களை யும் ஒரே புடைவையில் கொடுக்க முடியும். கைத்தறி நெசவின் வார்ப்பும், கோத்து வாங்கி நெய்யும் முறையும் புடைவையின் ஆயுளை நூறாண்டுகள் கூட நீட்டிக்கச் செய்யும் உறுதி மிக்கது. இதையும் தாண்டி ஒரு சேலை நெய்யவே அதிக நாட்கள் தேவைப்படும் என்பதால் பலருக்கு வேலை கிடைக்கும். அப்புறம் ஏன் நிறைய நெச வாளர்கள் தங்கள் தறிகளை இழுத்து மூடி விட்டு வேறு பிழைப்புத் தேடிப் போகிறார் கள்? மத்திய பட்டு வளர்ச்சித் துறையின் முன்னாள் இயக்குனரும், பாரம்பரிய டிசைன்களை உருவாக்கி தேசிய விருது பெற்றவருமான என்.வி.சில்க்ஸ் வீரப்பனிடம் கேட்டோம்:

"முதல் காரணம் நடுத்தட்டு மக்களிடம் வாங்கும் சக்தி குறைந்துவிட்டதால், விலை குறைவான பட்டுப்புடைவைகளை நாடி னார்கள். இதனால் தரமற்ற ஜரிகையும், நூலும் கொண்டு உருவாக்கப்படும் போலிப் பட்டுப் புடைவைகள் புழக்கத்திற்கு வரத்



தொடங்கின. காஞ்சிபுரத்தில் புடைவை வாங்கினால் தரமாக இருக்கும் என்று நம்பி வரும் வாடிக்கையாளர்களை ஏமாற்றவென்று, புகழ்பெற்ற கூட்டுறவு கடைகளின் பெயர்களைப் போலவே பெயர் வைக்கப்பட்டுக் குழப்பம் ஏற்படுத்தும் பல கடைகள் புற்றீசல் போல பெருகிவிட்டன. ரிக்ஷா ஓட்டிக் கொண்டிருந்தவன்கூட இடைத்தரகர் ஆகி, காஞ்சிபுரம் வந்திறங்கும் வாடிக்கையாளர்களை மடக்கி தங்களுக்குக் கமிஷன் வெட்டும் கடைகளுக்கு அழைத்துப் போவதும் புரையோடிவிட்டது. வாடிக்கையாளர்களில் பெரும்பாலானோர்க்கு எது காஞ்சிபுரம் கைத்தறிப்பட்டு புடைவை என்பதைக் கண்டுபிடிக்க முடியாமல் போய்விடுவதும் போதிய வழிகாட்டுதல் இல்லாமையும் காஞ்சிப் பட்டு விற்பனைக்குப் பெரிய சவால்களாகிவிட்டன" என்கிறார்.

சாமி சில்க்ஸ் அதிபர் கிருஷ்ணா கவலைப்படுவதோ சீனாபற்றி. "எதிர் வரும் 2005ஆம் ஆண்டு முதல், உலக வர்த்தக ஒப்பந்தமான 'காட்'டில் (GATT) கையெழுத்திட்ட நாடுகள் இடையே சுதந்தரமான வர்த்தகம் சாதாரணமாகிவிடும். இந்த நிலையில் காஞ்சியின் கைத்தறி நெசவு நுட்பத்தைத் தெரிந்து கொண்டு, பட்டுப் புடைவைகளைத் தயாரித்து குறைந்த விலையில் இந்தியாவில் சந்தைப்படுத்தச் சீனா தயாராகிவருவதாக நம்பத் தகுந்த தகவல்கள் வருகின்றன. இங்கிருந்து தேர்ந்த நெசவாளர்களைச் சீனாவுக்கு அழைத்துச் செல்லும் முயற்சியும் தொடங்கிவிட்டதாக செய்திகள் வருகின்றன. இந்நிலையில் காஞ்சிப் பெரியவரை சீனா அரசு அழைத்ததன் பின்னணியில் இதுபோன்ற தொழில்நுட்பத் திருட்டுகளை இலகுவாக நிறைவேற்றி விடலாம் என்பதும் சீன அரசின் திட்டமாக இருக்குமோ என்று அஞ்சுகிறோம்" என்று சொல்லும் கிருஷ்ணா, "ஏற்கெனவே விலை உயர்ந்த புடைவைகளை யாரும் சீந்துவாரில்லை. இந்நிலையில் நமது தொழில்நுட்பம், தரம்,

கு.ப.கி.க்கு வந்த திடீர் ஜுரம்!



அ.தி.மு.க.வில் மீண்டும் ஐக்கியமாக தூதனுப்பியிருக்கிறார் முன்னாள் அமைச்சர் கு.ப.கிருஷ்ணன்.

கடந்த வாரத்தில் திருச்சியில் நடைபெற்ற எம்.ஜி.ஆர். பிறந்த நாள் விழாவின் போது, தடாலடியாக ஜெ. புகழ் பாடிய கு.ப.கி. தி.மு.க. கூட்டணியிலிருந்து விலகி விட்டதாகவும், நடைபெற இருக்கிற ஆண்டிப்பட்டி இடைத் தேர்தலில் அத் தொகுதியில் இருக்கும் 'தமிழர் பூமி' இயக்கம் சார்ந்த இருபத்தைந்தாயிரம் வாக்குகள் ஜெ.க்கு ஆதரவாகத் திரும்பும் எனவும் பேசி எல்லோரையும் அசத்தினார்.

'இதெல்லாம் நெசம்தானா?' என்பதையறிய அவரை பலமுறைத் தொடர்பு கொண்டும் பலன் இல்லை. 'ஐயாவுக்கு ஜுரம்' என்ற பதிலே வந்தது.

அ.தி.மு.க. கட்சி வட்டாரத்தில் வேறு விதமாக பேசுகிறார்கள். 'அ.தி.மு.க.வில் மீண்டும் இணைய தனக்கு வாய்ப்பும், மாவட்ட செயலாளர் பதவியும் கேட்டு போயஸ் தோட்டத்திடம் மன்றாடிப் பார்த்திருக்கிறார். அதற்கு, முதலில் 'ஒரு பெரிய தொகையை' வெட்டிவிட்டுக் கட்சியில் சேரும் படியும், பதவியெல்லாம் பிறகு பார்த்துக் கொள்ளலாம் எனவும் பதில் வந்ததாம். 'அந்தப் பெரிய தொகையை' கேள்விப்பட்ட நேரத்திலிருந்து அவருக்குச் சுடும் ஜுரம் வந்திருக்கலாம் என்கிறார்கள் ரத்தத்தின் ரத்தங்கள்.

- இருள் நீக்கியான்

இவற்றைக் காப்பியடித்து, நமக்கே குறைந்த விலையில் புடைவைகளைச் சீனர்கள் கொடுத்தால் காஞ்சி புடைவைகளின் எதிர் காலம் கேள்விக்குறி" என்கிறார்.

"காஞ்சிபுரம் பட்டுப் புடைவைக்கென்று தனிப்பட்ட நபர் காப்புரிமை பெற முடியாது என்றாலும் அரசு சார்பில் பொதுவான காப்புரிமை வாங்க என்ன தடை?" என்றால், "அதற்கான முயற்சியில் இப்போதுதான் இறங்கியிருக்கிறோம். காஞ்சிபுரம் பட்டுச் சேலைகளின் இலக்கணம், உற்பத்தி செய்யப்படும் இடங்கள் போன்றவற்றை ஒட்டிய பூகோளக் குறியீடு சட்டத்தின் கீழ் பதிவு செய்ய பாராளுமன்றத்தை முதலில் அணுகியிருக்கிறோம். அரசுதானே இதில் அதிக ஆர்வம் காட்ட வேண்டும்" என்று சொல்லும் கிருஷ்ணா, காஞ்சிபுரம் பட்டுச் சேலைகள் பூகோளக் குறியீடு வல்லுனர் குழுவில் உறுப்பினராகவும் இருக்கிறார்.

இந்தச் சவால்கள் தவிர, பெரும்பாலானா நெசவாளர்களின் நேர்மையின்மையும் காஞ்சிப் பட்டுக்குப் பேரிழப்பை ஏற்படுத்தி வருகிறது என்கிறார்கள் இன்னும் சில பட்டு அதிபர்கள். இதை அடியோடு மறுக்கிறார் ஒரு தறி வைத்திருக்கும் ஏழை நெசவாளர் கலைக்கோபி. "என்னதான் நம்பிக்கையாக வேலை செய்து கொடுத்தாலும் அரை நாள் காலதாமதம் ஆகிவிட்டாலே கூலியில் கை வைத்து விடுகிறார்கள் தனியார் முதலாளிகள். கூட்டுறவு வேலையில் மாதத்திற்கு ஒரு புடைவை கிடைப்பதே அபூர்வமாக இருக்கிறது. அந்த ஒரு புடைவையை நெய்து முடித்துவிட்டால் வேலையில்லாமல் உட்கார்ந்து இருக்க வேண்டியதுதான். போனஸ் கிடையாது என்பதால் நாங்கள் பண்டிகைகள் கூட கொண்டாடுவது இல்லை. கூலியை ஒழுங்காகக் கொடுத்தாலே போதும் என்று நினைக்கிறோம். எங்கள் பிரச்னைகளுக்காக போராட, எங்களால் ஒன்று கூட முடியவில்லை. காரணம் ஒரு நாள் தறிசப்தம் கேட்காவிட்டால் இரண்டு நாட்களுக்குச் சாப்பாடு கிடையாது" என்கிறார் சோகம் கவிழ்ந்த முகத்துடன்.

'காஞ்சிபுரம் போனால் காலாட்டிப் பிழைக்கலாம்' என்ற வழக்கைக் கேட்டு எதிர்காலத் தலைமுறை அதற்கு என்ன அர்த்தம்? என்று தேடுகிற நிலை வராதிருக்க மத்திய மாநில அரசுகள் தலையிட்டு, காஞ்சி பட்டைக் காப்பாற்றினால்தான் உண்டு.

ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் ®

அறிமுகப்படுத்தும்

கல்யாண சீர்பலகாரங்கள்



எல்லா சீர்பலகாரங்களையும் வகைக்கு ஒன்றாக வைத்து அதற்காகவே வடிவமைக்கப்பட்ட அழகிய சீர்பலகார பெட்டிகளில் வழங்குகிறோம்.

பரிசளிக்க, சீர்வரிசைக்கு புதுமையானவை.

ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் ®

பாண்டி பஜார், சென்னை. போன் : 4312345
காந்தி நகர் முதல் மெயின் ரோடு, அடையார், சென்னை. போன் : 4413805
அண்ணாநகர், சென்னை. போன் : 6192345

DIMENSIONS



இக்கரையில்

காஞ்சனா தாமோதரன்

ஜப்பானியப் பயணிக் குழுவொன்று வட்டமாய் நின்று பாடிக் கொண்டிருந்தது. வட்டத்தின் நடுவில் சில சிறு பைன் மரங்கள். செங்குத்துச் சரிவின் பாறைப் பிளவுகளில் தயக்கத்துடன் வேரூன்றி நிற்கும் பைன் மரங்கள். குட்டையாய், கோணலாய், நோஞ்சானாய், காலமும் காற்றும் பனியும் சேர்ந்து வடிவமைத்தவை. பனிமேகம் கவிந்த அந்த அதிகாலைப் பொழுதும், பின்னணியில் ஜப்பானியப் பாடலும் சேர்ந்து, அந்தப் பைன் மரச் செறிவை ஜப்பானியப் பான்சாயித் தோட்டமாக மாற்றியிருந்தன.

அந்தக் கணத்தில் அது கலிஃபோர்னியாவின் சியரா நேவாடா மலைத் தொடரில் உள்ள யோசெமிட்டி தேசிய வனம் என்றே நம்ப முடியவில்லை.

மேற்கத்திய மலைவெளியில் கிழக்கின் அமைதி நிறைவதைக் கொஞ்ச நேரம் நின்று அனுபவித்து விட்டு, ரஞ்சியும் க்ரிஸ்ஸும் தம் அதிகாலை ஓட்டத்தைத் தொடர்ந்தார்கள். மலைச்சரிவில் ஓடுவது வீட்டு 'ட்ரெட் மில்'லிலோ பூங்காவிலோ ஓடுவதைவிட வித்தியாசமாகத்தான் இருந்தது.


மீண்டும் ரஞ்சி நின்றாள். ஆழமாய் மூச்சை உள்ளிழுத்தாள். சுற்றிலும் பார்த்தாள்.

"என்ன, ரஞ்சி?"

"ஒன்றுமில்லை, க்ரிஸ். இங்கேயே இருந்து விடலாமா?"

யோசெமெட்டிப் பள்ளத்தாக்குக் கீழே பரந்து கிடந்தது. அதற்கு அப்பாலும் மலைகள். என்றோ ஒரு காலத்தில் கொதிக்கும் கிரானைட் குழம்பாய் இருந்தவை இவை; இன்று பனி படர்ந்த பெரும் நாய்க்குடைகளாய் வானை முட்டுகின்றன. வெண்மேகக் கூட்டங்கள், கவிழ்ந்த சிறு நாய்க்குடைகளாய் மலைமுகடுகளில் திரிகின்றன.

உறைபனிச் சரிவுகள் பல காலமாய்ச் செதுக்கி வைத்த பெரும் ஒற்றைப்பாறை மலைகள் உயர்ந்து நின்றன. பள்ளத்தாக்கின் ஒரு முனையில் ஹாஃப் டோம் என்னும் கிரானைட் மலைச்சுவர். இன்னொரு முனையில் எல் கப்பித்தான் மலைச்சுவர். இன்னும் ஒரு திசையில் கத்தீட்ரல் பாறைகள் எனப்படும் மலைச்சுவர்கள். மலை விளிம்புகளிலிருந்து வெண்புகையாய் வீழும் அருவிகள். பள்ளத் தாக்கில் வளைந்து ஓடும் காட்டாறுகள். தொடுவானத் தொலைவில், நீலப்பச்சையாய் மங்கி மினுங்கும் பூமியின் விளிம்புக்கோடு.



எல்லாவற்றையும் போர்த்தும் மெல்லிய துகிலாய்ப் பனிமூட்டம்.

இது சொர்க்கம் இல்லையென்றால் அதற்குப் பக்கத்து வீடாகவாவது இருப்பது நிச்சயம்.

"இங்கேயே இருக்கலாம், ரஞ்சி. வேலை, பள்ளிக்கூடம் எல்லாவற்றையும் மறந்து விடலாமா?" சிரித்தான் க்ரிஸ்.

உண்மையில் இங்கு வரத் திட்டம் போட்டதே அவன்தான். தொலைபேசி, தொலைநகல், இணையம் இத்யாதிகளைத் தூக்கிப் போட்டு விட்டு, இந்த 'நாகரீக உலகிலிருந்து சில நாட்களாவது தப்பிக்க வேண்டும் என்றான். 'நாகரிக உலகிலிருந்து தப்பிக்க மார்ஜி, ப்ரையன், ஆலன், ரஞ்சி, அனுகா எல்லாரும் தயாராக இருந்தார்கள். குமாரின் அனுமதியுடன் மின்னி யும் உற்சாகமாய் அவர்களுடன் சேர்ந்து கொண்டாள்.

ராஜி சேலத்தில். விதுவும் குழந்தைகளும் டெல்லியில். மின்னியின் பரத நாட்டிய அரங்கேற்றத்துக்குத் தேவையானதை வாங்கப் போவதாக ராஜி சொன்னாள். மின்னியைக் குமார் பார்த்துக் கொள்வார்; சில சமயங்களில் ரஞ்சியின் வீட்டில் தங்க வேண்டியிருக்கலாம். விது தன் அம்மாவிடம் மனம் விட்டுப் பேசுவது முக்கியம் என்றாள். அருணாவுக்கும் அம்பிகாவுக்குமான இரண்டு மாதப் பள்ளிப் பாடங்களை வாங்கிக் கொண்டு கிளம்பிவிட்டான். ராஜியும், அருணா அம்பிகாவுடன் விதுவும் ஃப்ராங்க்ஃபர்ட் வரை சேர்ந்து போவது; இங்கிருந்து விது டெல்லிக்கும், ராஜி சென்னைக்குமாய்ப் பறக்கத் திட்டம்.

விமான நிலையம் மாறியிருந்தது. பலத்த பாதுகாப்பு. கண்காணிப்பு. ஒன்றுக்கு இரண்டு

முறையாகச் சோதனைகள்.- முன்பு போல் விமானத்தின் வாசல் வரை எல்லாராலும் போக முடியாது, பயணிகள் மட்டுமே.

"பார்லிமெண்ட் தாக்குதலுக்கு அப்புறம் நம்ம ஊர் ஏர்போட்டுகள் எப்படியெல்லாம் மாறியிருக்கோ? எல்லையிலே பதற்றம் வேறே," என்றார் குமார். "விது, நீங்க டெல்லி போய்ச் சேர்ந்ததும் எங்களுக்கு ஈ-மெயில் அனுப்புங்க."

அதற்கப்புறம் யாருக்கும் பேச வரவில்லை. எல்லார் கண்களும் கலங்கியிருந்தன. அயல் தேசத்தில் உறவு என்று சொல்லிக் கொள்வது இந்த நண்பர்களைத்தான். எளிதாய்ப் பிரிய முடிவதில்லை.

- குமாரும் க்ரிஸ்ஸும் குழந்தைகளுக்கு நொறுக்குத் தீனி வாங்கி வரும் சாக்கில் அங்கிருந்து அகன்றார்கள்.

"வேலை, வேலைன்னு குமார் ஓடிக்கிட்டே இருப்பார். நீ மின்னியைப் பார்த்துக்க, ரஞ்சி. அரங்கேற்றத்துக்குத் தினம் ஒழுங்கா 'ப்ராக்டிஸ்' பண்றாளான்னு கவனிப்பியா?" இது ராஜி.

"ரஞ்சி, உனக்கு நேரம் கிடச்சா ரமேஷைக் கூப்பிட்டு அப்பப்போ 'ஹலோ' சொல்லுவியா?" - இது விது.

பிரிவு கண்ணீரையும் மீறி, ரஞ்சிக்கும் ராஜிக்கும் ஆச்சரியம். விது இருவரையும் மாறி மாறிப் பார்த்தாள். "இல்லை, ரஞ்சி, பாவம், அருணாவையும் அம்பிகாவையும் ரொம்பத் தேடப் போறார் ரமேஷ்..." ரஞ்சியும் ராஜியும் இலேசாகச் சிரிக்கவும், விதுவும் அசட்டுச் சிரிப்புச் சிரித்தாள்.

"என்ன புன் சிரிப்பு, ரஞ்சி?" க்ரிஸ்ஸின் குரல் இப்போது நினைவைக் கலைத்தது.

"ஒன்றுமில்லை, க்ரிஸ். விதுவையும் ராஜியையும் இந்தியாவுக்கு வழியனுப்பின ஞாபகம்."

க்ரிஸ் ரஞ்சியை உற்றுப் பார்த்தான். அவளை அணைத்தவாறே மலைவிளிம்பின் பக்கம் போனான். "என்ன க்ரிஸ், மலை உச்சியிலிருந்து உருட்டி விடத் திட்டமா? தமிழ்க் காப்பிய நாயகி ஒருத்தி, நாட்டுக்கு நல்லது செய்யாத தன் கணவனை அப்படித்தான் தீர்த்துக் கட்டுவாள்..."

"நீ ஏதாவது கெட்ட காரியம் செய்திருக்கிறாயா?" க்ரிஸ் புன்னகைத்தான். விளிம்புப் பக்கத்திலிருந்த பாறைகள் மேல் இருவரின் கழுத்து 'மஃப்ளர்'களையும் போட்டான். அவளை முதலில் உட்கார வைத்து, எதிர்ப் பாறையில் தானும் உட்கார்ந்தான்.

"இங்கேயே இருக்கலாமா என்றாயே, ரஞ்சி. நான் இருக்கத் தயார்தான். இந்தப் பிரம்மாண்ட இயற்கையின் முன், -நாம் எவ்வளவு சிறியதாகத் தெரிகிறோம். நாகரிகம் என்ற பெயரில் நாம் வாழும் வாழ்க்கை வெற்று உமி மாதிரி தெரியவில்லை?"

அவன் சொல்ல நினைத்ததை அவனே சுருக்கமாகச் சொல்லிவிட்டான். இது வேறு உலகம். நேரம்கூட இங்கு வேறு மாதிரி நகருகிறது. நேர்க்கோடாக இல்லாமல், வளைந்து நெளிந்தும், சில சமயங்களில் முழுதாக நின்றும். அதிகம் பேசக்கூட நேரமில்லாமல், தலை தெறிக்க ஓடிக் கொண்டே இருக்கும் அவர்களது அன்றாடத்திலிருந்து எவ்வளவு வித்தியாசம் இது!


"அனுகாவின் படிப்பு, வேலை, நட்புகள் எல்லாம் எப்போதும் போல, இல்லையா ரஞ்சி?"

அனுகாவை நினைத்தால் ரஞ்சிக்கு ஆச்சரியமாகத்தான் இருந்தது. அனுகாவின் வயதில் ரஞ்சிக்கு இவ்வளவு விஷயங்கள் தெரியாது. படிப்பு, இசை தவிர வேறு எதிலும் மனது போனதும் கிடையாது; படிப்பை எந்நேரத்திலும் தாத்தா நிறுத்தி விடலாம் என்கிற பயம் வேறு. அனுகா படிக்கிறாள். விளையாட்டு, இசை எல்லாவற்றிலும் தேர்ச்சி பெறுகிறாள். தன் உணர்ச்சிகளைப் புரிந்து வெளிப்படையாகப் பேசுகிறாள். தானே எல்லாவற்றையும் அலசிப் பார்த்து ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்று நினைக்கிறாள். அப்பா அம்மா வேண்டும்தான். ஆனால், அனுகா நிச்சயிக்கும் தொலைவிலேயே அவர்கள் நின்றுவிட வேண்டும்.

"க்ரிஸ், குழந்தைப் பருவம் சில வருடங்களிலேயே முடிந்து, சட்டென்று பெரியவர்களாகி விடுகிறார்கள் இங்கு."

"சூழலின் அழுத்தம் அப்படி, ரஞ்சி. நாம் அனுகாவுக்கு விதிகள் போட்டிருக்கிறோமே, அந்தக் குழந்தைப் பருவம் இன்னும் கொஞ்சம் நீடிக்கட்டும் என்பதற்குத்தானே."

க்ரிஸ் தன் அப்பா பொறுப்பையும் பெருமையாக ஏற்றுக் கொள்பவன். வேலையையும் குடும்பத்தையும் ஒரு சேரக் கவனிக்க, அவன் பங்கும் முக்கியம். அவள் நிறுவனத்தில், அவள் தலைமையில் உருவான 'ஃப்ளெக்ஸ் டைம், ஃப்ளெக்ஸ் லொக்கேஷன்' திட்டமும்



முக்கியம் - தாயோ தந்தையோ தங்கள் வசதிப்படி அலுவலகத்துக்கு வரலாம், சில நேரங்களில் வீட்டிலிருந்தேகூட வேலை செய்யலாம்; வேலையைச் சரியாக நடத்திக் கொடுத்தால் சரி. அவனும் அவளுமாகச் சேர்ந்தும் ஒருவர் வேலை செய்யும்போது மற்றொருவருமாய் மாற்றி மாற்றியும், அனுகாவைக் கவனித்து வளர்த்தது ஒரு காலம்.

இப்போது அடிப்படைக் குழந்தை வளர்ப்பு என்றோ முடிந்துவிட்டது. இன்று க்ரிஸ்ஸும் அவளும் அனுகாவின் ஆலோசகர்கள், நண்பர்கள். நிம்மதி. நிம்மதியா? அந்த நிம்மதியின் மூலையில், எதையோ இழந்த ஒரு வெறுமை ஏன்? பெருமூச்சு.

க்ரிஸ் திரும்பி அவளைப் பார்த்தான். பக்கத்தில் வந்து உட்கார்ந்தான். தோளோடு அணைத்துக் கொண்டான். "உனக்கு இதிலும் கூட ஒரு சிறு கலாசார இடைவெளி, இல்லையா, ரஞ்சி?"

அவள் மௌனமாய் இருந்தாள். தூரத்தில் ஒரு கரும்பறவைக் கூட்டம் 'விருட்' என்று சேர்ந்து மேல் எழுந்து, வானில் புள்ளிக் கோலமாகி, பின் வேகமாய்க் கீழிறங்கி, மர உச்சிகளில் கொத்துக் கொத்தாய்க் காய்த்துத் தொங்கியது.

காலை வெயிலில் மின்னும் தூரத்து மலைகளைப் பார்த்துக் கொண்டிருந்தான் க்ரிஸ். சுற்றி நின்ற மலைச்சரிவுகளின் மேல், ஃபிர், பைன், செக்கோயா மரங்களின் ஊசி இலைகள் காற்றில் உரசி இரகசியங்கள் பேசின. உலகம் நம் எல்லார்க்கும்தானே சொந்தம் என்று உரிமையுடன் இரண்டு மிளாக்கள் பக்கத்தில் மேய்ந்து கொண்டிருந்தன. துடைத்துப் போட்ட வானத்தில் ஒரு கழுகு மெல்ல வட்டமிட்டது.

அமைதி.

சுற்றிலும் இருந்த அமைதி மெல்ல அவளுள்ளும் புகுந்து பரவ ஆரம்பித்தது.

எவ்வளவு நேரம் அப்படியே கடந்ததோ

"ரஞ்சி..."

"ஹ்ம்..."



"நீ சந்தோஷமாய் இருக்கிறாயா?"

சில மாதங்களுக்கு முன், ஆஸ்பெனுக்குப் போகும் விமானத்தில் அவன் கேட்ட அதே கேள்வி. ஏன் இந்தக் கேள்வி. அவனாகவே சொல்லட்டும். காத்திருந்தாள்.

"என்னைக் கல்யாணம் செய்ததால் உனக்கு ஏற்பட்ட இழப்பு பெரியதா?"

"இழப்பு இருக்கிறதென்றால், உனக்கு என்ன இழப்போ அதே இழப்புதானே எனக்கும், க்ரிஸ்."

"உன் தாய்மொழியில்கூட உன்னால் என்னிடம் பேச முடியாது."

அவள் சிறிது நேரம் பேசாமலிருந்தாள். "தெரிந்த உண்மையை என்னால் மறுக்க முடியாது. உன்னால் பேச முடியும் தமிழுக்கு நன்றி."

"ரஞ்சி, நீ வேறு பாதையில் போயிருந்தால்..."

"வேறு எந்தெந்தப் பாதையில் எல்லாம் நாம் போயிருக்க முடியும்? ஒவ்வொரு பாதையோடும் வரும் லாப நஷ்டம் என்ன? ஆகச் சிறந்த பாதை எது? - ஹார்வர்ட் எம்.பி.ஏ. வகுப்பு பாணியில் இப்படிக் கேள்விகளை அடுக்கிக் கொண்டே போகலாம்தான். ஆனால் வாழ்க்கை என்ன வெறும் எம்.பி.ஏ. படிப்பா கிரிஸ்?" மெல்லச் சொன்னாள் ரஞ்சி.

மௌனம்.

புல் தரையில் அடர்ந்திருந்த சிறு காட்டுப் பூக்களில் ஒன்றைப் பறித்து அவள் அவனிடம் நீட்டினாள். அவன் இன்னொரு சிறு பூவை அவளிடம் கொடுத்து நெற்றியில் மென்மையாய் முத்தமிட்டான்.

நேரமாகியிருந்தது. அனுகா, மின்னி, மார்ஜி, ப்ரையன், ஆலன் எல்லாத் தூங்குமூஞ்சிகளும் இப்போது விழித்திருப்பார்கள்.

ரஞ்சியும் க்ரிஸ்ஸும் எழுந்து காட்டின் நடுவே இருந்த மரக் கேபினை நோக்கி ஓட ஆரம்பித்தார்கள்.

கயிற்றில் தொங்கியவாறே ஆணிகள் அடித்து, அவற்றில் கால் பதித்துச் செங்குத்து மலைச்சுவரில் ஏறிய போதும்; இரவுகளில், குளிர் காயும் தீயைச் சுற்றி உட்கார்ந்து, பேய்க்கதை சொல்லி அனுகா, மின்னி, ஆலனைப் பயமுறுத்த முயன்ற போதும்; சுழித்தோடும் மெர்செட் காட்டாற்றின் மேல் ரப்பர் ராஃப்ட் படகில் வளைந்து, நெளிந்து, விரைந்தபோதும்; பயணிகளின் உணவைக் கருங்கரடிகள் திருடிக் கொண்டு ஓடுவதைப் பார்த்துச் சிரித்த போதும்; பள்ளத்தாக்கின் அருவிகளையும் அழகுகளையும் ரசித்தபடி, திறந்த ட்ராமில் பயணம் செய்த போதும்; இந்தப் பயணத்திலும், வாழ்க்கைப் பயணத்தின் இறுதி வரையிலும் - அந்த இரு சிறு காட்டுப் பூக்களின் மணம் மாறவே இல்லை.

(தொடரும்)





ஐடியா இருக்கிறதா?

அமைச்சர் கேட்கிறார்!

காஞ்சிபுரம் அருகேயுள்ள ஆர்ப்பாக்கம் என்ற கிராமத்தைச் சேர்ந்தவர் செய்தி மற்றும் வனத்துறை அமைச்சர் எஸ்.எஸ்.திருநாவுக்கரசு! அமைச்சரை சந்தித்து நெசவாளர்களின் கஷ்டங்களை எடுத்துச் சொன்னபோது, 'காஞ்சியில், அவர்கள் படும் துயரம் எனக்குத் தெரியாமல் இல்லை. என் தொகுதி வாக்காளர்களில் எழுபது சதம் நெசவாளர்கள்தான்'' என்றவர் தொடர்ந்தார்.

''இன்று நெசவாளர்களின் துயருக்குக் காரணம் 97 கோடி ரூபாய்க்கு பட்டுப் புடைவைகள் விற்காமல் தேங்கிக் கிடப்பதுதான்.

கடந்த ஐந்தாண்டு கால தி.மு.க. ஆட்சியில் நெசவாளர்களின் நலன்களைப் புறக்கணித்ததும், பட்டு கூட்டுறவு சங்கங்களின் குரல் வளையை நெறித்ததும், விற்பனையை அதிகரிக்க திட்டங்கள் வகுக்காததும்தான் இதற்குக் காரணம். அரசியல் காழ்ப்புணர்ச்சியால் இதைச் சொல்லவில்லை. சீரழிவு துவங்கியது தி.மு.க. நடத்திய கூட்டுறவுத் தேர்தலின் போதுதான். அதிகாரம் மற்றும் ரவுடித்தனத்தைப் பயன்படுத்தி நெசவாளர் அல்லாதவர்களைக் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினராக்கி, தேர்தலில் தி.மு.க.வினரைத் தலைவராக்கிவிட்டார்கள். பொறுப்புக்கு வந்த பிறகாவது மனசாட்சியுடன் செயல்பட்டிருக்க வேண்டும். ஆர்ப்பாட்டமாகச் செயல்பட்டு, அகப்பட்டதைச் சுருட்டிக் கொண்டார்கள். சரக்குகள் விற்பனையாகாமல் தேங்கிப் போனால், நெசவாளர்களுக்குத் தொடர்ந்து எப்படி வேலை கொடுக்க முடியும்?''

''நெசவாளர்களின் கண்ணீரைத் துடைக்க என்ன செய்யப் போகிறது அரசு?''

''முதலில் தேங்கிக் கிடக்கும் சரக்குகளை விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். சரக்கு காலியானால் தான் நெசவாளர்களுக்குச் சங்கங்கள் வேலை கொடுக்க முடியும். கைத்தறி துறை அமைச்சர் இது சம்பந்தமாக மிகத் தீவிரமாக அதிகாரிகளுடன் அடிக்கடி பேசி வருகிறார். எங்கள் பொதுச் செயலாளர் இது பற்றி தனிக் கவனம் செலுத்தச் சொல்லியிருக்கிறார். காஞ்சியின் பொருளாதாரமே நெசவாளர்களின் வாழ்க்கையை ஒட்டி அமைந்தது என்பதை உணர்ந்திருக்கிறோம்.''

''கோயில் நகரமான காஞ்சிக்குச் சுற்றுலா பயணிகள் அதிக அளவுக்கு வருகிறார்கள். ஆனால் நகரைப் பற்றி விவரங்கள் கொடுக்க தனி அலுவலகம்கூட இல்லையே?''

''அகல ரயில் பாதை போடப்பட்டதன் காரணமாக, இந்தியாவின் மற்ற பகுதிகளுடன் காஞ்சிபுரம் இணைக்கப்பட்டுவிட்டது. குஜராத் மாநிலம் சூரத், காஞ்சியுடன் தொழில் ரீதியாக தொடர்பு கொண்டது. இரண்டு நகரங்களையும் இணைக்கும் வண்ணம், ரயில்விட வேண்டுமென்று வற்புறுத்தி வருகிறோம். சுற்றுலாத் துறையின் தகவல் நிலையங்களை உருவாக்கும் யோசனை பரிசீலனையில் இருக்கிறது. சென்னைக்கும் கூடுதலான ரயில்கள் விடப் போகிறோம்.''

''மற்றபடி நகரை பளிச்சிட வைக்க என்ன திட்டங்கள் வைத்திருக்கிறீர்கள்?''

''ஏழரை கோடி ரூபாய் செலவில் பாதாளச் சாக்கடை போட இருக்கிறோம். நகரின் நடுவில் ஓடும் மஞ்சநீரி கால்வாயைச் சுத்தப்படுத்தும் பணி துவங்க இருக்கிறது. புதிதாக மகளிர் மேல்நிலைப்பள்ளி, வர இருக்கிறது. காஞ்சிபுரத்தை மேம்படுத்த மக்களிடத்திலிருந்து ஐடியாக்களை வரவேற்கிறேன். அதுபோல குறைகளை எந்த நேரத்திலும் என்னைச் சந்தித்துச் சொல்லலாம். இன்னமும் மூன்று, நான்கு வருடங்களில் காஞ்சியை, மிகச் சிறந்த 'மாதிரி' நகரமாக மாற்றும் முயற்சியில் ஈடுபடுவேன்.''

சந்திப்பு : ப்ரியன்

படங்கள் : ராஜன்



ரிமோட்

'ஆசியாவிலேயே எந்தக் கிரிக்கெட் மைதானத்திலும் இப்படியொரு ராட்ஸச டீவி. திரை கிடையாது' என்று சென்னை சிதம்பரம் ஸ்டேடியம் மார்தட்டிக் கொள்வது நியாயம்தான். As long as the goal is clear and you persist long enough. எதையும் சாதிக்க முடியும் என்பதற்கு இது சான்று.

நிறையப் போலீஸ் போட்டிருக்கேன். பெரிய டீவி. ஸ்கிரீன் வச்சிருக்கேன். எல்லா ஸ்டாண்டிலேயும் டீவி. பெட்டி வச்சிருக்கேன். இதுக்கு முன்னாடி இப்படிக் கிடையாது. இப்ப செஞ்சிருக்கேன்...' என்று சென்னை கிரிக்கெட் சங்கத் தலைவர் அசோக் கும்பத் சொல்லிக் கொண்டே போனார் - ஏதோ தான் ஒருவராகவே செய்த மாதிரி. தமிழைச் சரியாய்ப் பேசத் தெரியாத வட இந்தியர். பாவம், விட்டுவிடுங்கள்.

இங்கே தூர்தர்ஷனின் நேரடி ஒளிபரப்பைப் பற்றிச் சொல்ல வேண்டும். ஒரு நாள் போட்டியின் போது. ஆட்டம் ஆரம்பிக்குமுன் அதுல் வாசனும் சேதன் சர்மாவும் உரையாடினார்கள். அதுல் வாசன் ஆங்கிலத்தில் ஏதோ கேட்டுக் கொண்டிருந்தார். சேதன் சர்மா இந்தியில் ஏதோ பதிலளித்துக் கொண்டிருந்தார். வாசன் என்ன கேட்டாரென்பது ஆங்கிலம் தெரியாதவர்களுக்குத் தெரியாது. சேதன் என்ன பதில் சொன்னாரென்பது இந்தி தெரியாதவர்களுக்குத் தெரியாது. இது போன்ற கோமாளித்தனத்தை ஏன்தான் அரங்கேற்றுகிறார்களோ, உமா பாரதிக்கே வெளிச்சம். None are so blind as those who won't see.

ஏன் இந்தக்

அமெரிக்க ஜனாதிபதி ட்ருமன் தம் மேஜைமீது ஒரு பொன்மொழி எழுதி வைத்திருந்தார். 'The buck stops here' என்பது அதன் வாசகம். அதற்கு என்ன அர்த்தம்? என்று கேட்டவர்களிடம், 'எங்கே என்ன கோளாறு யார் செய்தாலும், பழி ஒவ்வொருவராகத் தாண்டி, கடைசியில் இங்கே வந்து சேரும்' என்று விளக்கினார் ட்ருமன்.

குத்துச் சண்டை வீரர்களான மைக் டைஸனுக்கும் லெனாக்ஸ் லெவிசுக்கும் அடுத்த போட்டி எங்கே, எப்போது நடைபெற வேண்டும் என்பதை முடிவு செய்வதற்காகக் கூட்டம் ஏற்பாடு செய்தவர்கள் மேற்படி பொன்மொழியை எழுதி முதுகிலே ஒட்டிக் கொள்ளலாம். யார் எங்கே மோதினால் நமக்கென்ன என்று இருக்காமல் இருவரையும் கூட்டி வைத்துப் பேசப்



• ஆபாச டாக்டரேட்

• ஐயோ... கால்!

போய், அது பெரிய சண்டையாக வளர்ந்து, பழி இவர்கள் தலையில் விழுந்துவிட்டது. டைசனுக்கு நர மாமிசம் பிடிக்கும். முன்பு இவாண்டர் ஹோலிஃபீல்டு என்ற குத்துச் சண்டை வீரரின் காதை ருசி பார்த்தார். இப்போது லெவிசின் கால்!



இத்தனை அமளி துமளிகளின் நட்ட நடுவில் சிக்கி, காயம் படாமல் வழுக்கி வெளியே வந்த ஒரு பெண் நிருபரை ஸ்டார் ஸ்போர்ட்ஸில் காண முடிந்தது. ஆ! இவரல்லவா உண்மையான வீராங்கனை!



கோமாளித்தனம்!

'நான் நடிக்க ஆரம்பித்து இருபத்தைந்து வருடம் ஆகிறது. இது எனக்கு வெள்ளி விழா ஆண்டு' என்று பெருமையுடன் சொல்லிக்கொண்டு வருகிறார் சத்யராஜ். முதுமையும் இளமையும் சேர்ந்து இருக்காது என்று கூறிய ஷேக்ஸ்பியர், youth is hot and bold, age is weak and cold என்று பாடினார். ஆனால் இந்த மனிதருக்கு இன்னும் இளமையுடன் இருப்பதாகவே எண்ணம். 'என்னம்மா கண்ணு'வைப் பார்த்தால் புரியும். மும்தாஜுடன் அவர் ஆடுகிற ஆட்டம். 'கோ... கோ... கோயம்பேடு' பாட்டில் அவர் காட்டும் சில அசைவுகளுக்காக ஆபாச டாக்டரேட் கூட வழங்கலாம். அதில்-

கோ-கோ-கோயம்பேடு கோகிலா
கு-கு-குளைமேடு ஜோதிகா
தா-தா-தாண்டி வா
ஸ்பீட் பிரேக்கரைத் தாண்டி வா

- என்று ஆரம்பிக்கிற பாட்டில் சத்யராஜின் சேஷ்டை மட்டுமல்ல, வாலியின் வால்தனமும் நீண்டு கொண்டே போகிறது.

• பாவம்

There are no whole truths; all truths are half-truths என்றார் ஒரு தத்துவஞானி. டான்ஸி வழக்கு அப்பீலில் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை இரண்டு டி.வி.க்கள் தெரிவித்த விதத்தைப் பார்த்தால் அது உண்மை என்றே தோன்றுகிறது.

'டான்ஸி வழக்கு விசாரணை - மேல் முறையீடு ஏற்பு - ஜெயலலிதாவுக்கு நோட்டீஸ்' என்று முழங்கியது சன்.

'ஆண்டிப்பட்டி இடைத் தேர்லுக்குத் தடை விதிக்க முடியாது - தி.மு.க. கோரிக்கை நிராகரிப்பு' என்று கொக்கரித்தது ஜெயா.

இரண்டுமே உண்மைதான். இல்லையென்று சொல்ல முடியுமா?

'ஒரே இடத்தில் அதிக நேரம் உட்கார்ந்து வேலை செய்வதால் மூட்டு வலி ஏற்படுகிறது' என்று ஜெயா டி.வி.யில் ஒரு ஆர்த்ரைட்டிஸ் நிபுணர் தெரிவித்தார். ('இது தெரிந்திருப்பதால்தான் most of the chairs are empty in government offices என்று குறும்பு சொல்வது தப்பு.)


கழுத்து, இடுப்பு, முதுகு, முழங்கால் ஆகியவற்றில் மூட்டு வலி எப்படி ஏற்படுகிறது? உட்கார, சாப்பிட, நடக்க, எழுந்திருக்க ஏன் முடிவதில்லை? என்னென்ன வயதில் மூட்டு வலி ஏற்படும்? மூட்டு வலியில் எவ்வளவு வகைகள் உண்டு? -யாவற்றையும் விளக்கிக் கொண்டே போனார் இந்த நிபுணர். சிகிச்சை முறைகளைப் பற்றி எப்போது, என்ன சொல்லப் போகிறார் என்பதை அறிந்து கொள்வதற்காக ஒரே இடத்தில் அதிக நேரம் உட்கார்ந்திருந்ததால் - மூட்டுவலி வந்துவிட்டது!

வினோத்

31.12.2001
திங்கட்கிழமை

இன்னும் கொஞ்ச நேரத்தில் பிறக்கவுள்ள புது வருடத்திற்காக ஊரே உற்சாகமாக இருக்கிறது. குழந்தைகளின் முகத்தில் தனி மகிழ்ச்சி தெரிகிறது. அப்பாவும் சோர்வு நீங்கி ஜன்னல் வழியாக வெளியே பார்த்தபடியிருக்கிறார். நட்சத்திரங்கள் வானில் வழக்கத்திற்கு மாறாக நிறையவே இறைந்து கிடக்கின்றன. அதிலேதாவது ஒன்றாக லட்சுமி இருக்கக்கூடும் என்கிற நினைவு உற்சாகத்தையெல்லாம் வடிந்து போகச் செய்கிறது. ரமணி இப்போது என்ன செய்து கொண்டிருப்பான் என்று தோன்றுகிறது பாஸ்கரன் அவனோடு இருப்பான் என்றான்.

மத்தியானத்துக்கு மேல் ஸ்ரீதரபாண்டியன் திருநெல்வேலி கோர்ட்டில் முன்ஜாமீன் வாங்கி விட்டாரென்று செய்தி வந்தது. அப்பாவிடம் இன்னும் விஷயத்தைச் சொல்லவில்லை. சொன்னால் இவ்வளவு



உற்சாகமாக தெருவில் பொங்கி வழியும் சந்தோஷத்தைப் பார்த்தபடியிருக்க மாட்டார். லட்சுமியின் காரியத்துக்குப் போய் வந்த போது கூட, "எப்படி இருக்கு அந்த புள்ள? போன அறுவடைக்கு நம்ம வயல்ல வேலை பார்த்துச்சு" என்றார். தலைவர் முன்ஜாமீன் பெற்ற ஸ்ரீதரப்பாண்டியனுக்கு கோர்ட் வளாகத்தில் துண்டு போர்த்திக் கட்டியணைத்தது தெரியவந்தால் ஒடிந்து போவார்.

சென்னையில் பத்து நாட்களுக்கு முன் கடற்கரை ஓரமிருந்த கண்ணகி சிலை அகற்றப்பட்டு விட்டது. அது திரும்ப அந்த இடத்தில் நிறுவப்படாது என்று முதலமைச்சரின் அறிக்கை வெளியாகி விட்டது.

தமயந்தி

நாட்டில் எவ்வளவோ பிரச்னைகள் தீர்க்கப்படாமல், தீர்க்க முயலாமல் இருக்க சிலையை எடுக்கிற விஷயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் அரசை நினைத்து வேதனையாக இருக்கிறது. மலிவு விலை மதுக்கடைகள் இனி திறக்கப்படும். கஞ்சா, அபின் போன்றவை கூட எதிர்காலத்தில் மலிவு விலையில் கிடைக்கக்கூடும். பொது இடங்களில் புகைக்கக் கூடாது என்றொரு புறம் நூறு பேர் கைது செய்யப்படுகிறார்கள். மறுபுறம் மலிவு விலைக் கடைகள், கள்ளச் சாராய மரணங்கள்.

ஸ்ரீதரன் மிகப் பெரிய கொண்டாட்டங்களுடன் புது வருடம் பிறப்பதைக் கொண்டாடியபடியிருப்பார். ரமணி, லட்சுமியற்ற இரவை வேதனையோடு கழித்தபடியிருப்பான். இரவின் கணங்கள் சலனமற்று நகர்ந்தபடியிருக்கின்றன. இன்றும் விளக்கின் கீழே அந்தப் பல்லி அசையாமல் பூச்சிகளைப் பிடித்தபடியிருந்தது. நாளையும் அது அங்கேயே தானிருக்கும். லட்சுமியின் தலையில் முடியெல்லாம் மழிக்கப்பட்டு

சங்கரியின் நாட்குறிப்பு

மினி தொடர்



ஒரு வெள்ளைத் துணி தலையைச் சுற்றி கட்டப்பட்டிருந்தது நினைவுக்கு இந்தக் கணம் வந்து போகிறது.

இந்த நாட்குறிப்புகளை வருட இறுதியில் நான்கு நாட்களுக்கு மட்டும் எழுதுவதால் ஒரு பெரும் போராட்டத்தையும் அதுசார்ந்த வெற்றியையும் பதிவுசெய்ய இயலுமென நினைத்தேன். துரதிர்ஷ்டவசமாக ஆஸ்பத்திரி, மரணம், மிரட்டல்கள், தமிழ் நாட்டு, இந்திய அரசியல், சமூக நிலவரங்களை வெறுமனே தகவலாக மட்டுமே பதிவு செய்தது போலொரு உணர்வு ஏற்படுகிறது. பாஸ்கரனிடம் இன்று மாலை வீட்டுக்கு வரும் வழியில் இதுபற்றிச் சொன்னேன். "வெற்றி தோல்வின்னு வரையறுக்காதீங்க சங்கரி" என்றான்.

என்ன செய்வது? நம் கல்வித் திட்டத்தி லிருந்து அனைத்துத் திட்டங்களும் வெற்றி தோல்வியில்தான் சுழல்கின்றன. பரீட்சையில் வெற்றியடைவது, கிரிக்கெட்டில் அதிக ஓட்டங்களெடுத்து ஜெயிப்பது, அதிக வாக்குகளெடுத்து தேர்தலில் ஜெயிப்பது. எழுதும்போதே நான் ஜெயிப்பனா என்று தோன்றி என்னுள்ளே அறுதி ட்டுச் சொல்ல இயலாத பயமொன்று தோன்றுகிறது. தமிழ் சினிமாக்களில் வருவது போல கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் எல்லோரையும் கடைசி சீன் போலீஸ் கைது செய்வது போல நிஜத்தில் கைது செய்யப் படுவார்களா? சுவர்ப் பல்லி திடீரென்று விநோதமான சப்தம் எழுப்பிற்று.

புது வருடத்துக்கு மறுநாள் பத்திரிகையி லிருந்து யாரோ வர இருப்பதாக பாஸ்கரன் சொன்னான். ஏற்கெனவே சில தொலைக் காட்சிகள் மரணம் நிகழ்ந்த அன்று உடல்கள் நிறைந்த பிணவறையையும் ஆஸ்பத்திரி பொதுவறைக்குள் மூச்சுக்குத் தவித்தவர் களையும் மாறி மாறிக் காட்டியது. அதைப் பார்த்து பலர் 'உச்' கொட்டி தவித்திருப் பார்கள். பிறகு சித்தியையோ மங்கையையோ பார்த்து அதற்கும் 'உச்' கொட்டியிருப் பார்கள். இப்போது ஏதாவது ஒரு நவீன ஹோட்டலில் புது வருட உணவு சாப்பிட்ட படி இருக்கலாம்.

எல்லாம் சரி. நான் எதைச் செய்தேன்? மூன்று தர்ணா போராட்டங்கள். ஓர் உண்ணாவிரதம். அத்துடன் சரி. ஒரு மாதம் கழிந்து விட்டது. பேனா நகராதபடிக்கு சோர்வு எழுகிறது என்னுள். இத்துடன் மூடி வைத்து விடலாமென்று கூடத் தோன்றுகின் றது. அப்படி வைக்கவும் மனதில்லை. தோற்றுப் போன குற்றவுணர்வு மனசெங்கும் அரித்துத் தின்று விடும் போலத் தோன்று கிறது. கள்ளச் சாராயத்தை ஒட்டுமொத்த மாக பாஸ்கரனோ நானோ நினைத்தால் நிறுத்தி விட இயலுமா? தெரியவில்லை. குழப்பமாகக் கூட இருக்கிறது. தீர்வை நோக்கி நகர்வது கூட வெற்றியை நோக்கி பயணிப்பது போல் தானா?

அப்பா உள்ளே வந்து படுத்துக் கொள் கிறேன் என்றார். கட்சி கட்சி என்று தனி வாழ்வின் பிரதானப் பகுதிகளைத் தொலைத்து விட்டாரோ என்று குழப்பமாக

"நீ கமல் ரசிகனா யிருக்கலாம்... அதுக்காக அப்ளிகேஷன் பாரத்தில் பெற்றோர்கள் பெயருக்கு நேரே முனுசாமிபாதி மூத்தம்மாள் பாதி சேர்ந்து செய்த கலவை நான்னு எழுதித் தொலைக்கணுமா என்ன?!"

— அம்பை தேவா

இருந்தது. விளக்கை அணைத்து விட்டு நிழலுருவாய்ப் படுத்த பிறகு மேஜை விளக்கைத் தட்டி விட்டேன். சுவர்ப் பல்லி மறுபடியும் விநோதமாய்க் குரல் எழுப்பிற்று. அப்பாவின் வெள்ளைச் சட்டை ஆணியில் துணிப்பந்தல் போலத் தொங்குகிறது. கட்சிக் கூட்டங்களுக்கு அப்பா போய் வந்த பிறகு ஆதிகாலத்திலிருந்தே சட்டை இங்கேதான் தொங்கும். ஒரு காலகட்டத்தில் அவர் சட்டையை அவிழ்த்த போது மாட்டக்கூட ஆட்கள் இருந்தனர். மெல்ல சுவர்களின் எண்ணிக்கை குறைந்து சட்டை மட்டும் எஞ்சின காலமொன்று வந்தது. வடிவேல் சுந்தரம் தலைவரானார். மேடையில் உலகமயமாக்குதல் பற்றிப் பேசும் போது செல்போன் அலறியது. கூட்டத்திலிருந்து ஒருவன் எழுந்து, "எங்கூருல டீ கேட்டா இரண்டுமூணு கோப்பை உண்டு சார், பெப்சி கேட்டா பாட்டில்ல கொடுக்கான். இதுக்கு என்ன சொல்றீக?" என்றான். பாஸ்கரன் முதல் வரிசையிலிருந்து திரும்பி என்னைப் பார்த்தான். வடிவேலு சுந்தரம், "செல்போனில் அவசரமாக சேதி வந்திருக்கிறபடி வணக்கம் கூறி விடைபெறுகிறேன்" என்றார்.

மூன்று நான்கு கிராமங்களில் பஞ்சாயத்து தேர்தலே தமிழகத்தில் நடைபெறவில்லை என்பது குறித்து அரசாங்கம் எதுவும் செய்யாதது கூட இச் சமயம் எரிச்சலூட்டுகிற செய்தியாய் உள்ளது. நாங்கள் ஏழை மக்களின் பிரதிநிதி என்று பிரகடனப்படுத்தும் அரசியல் கட்சிகள் எல்லாமே வேறெதாவது ஒரு வகையில் ஏழைகளை ஏழைகளாகவே தக்கவைத்துக் கொள்கிறது. அரசியல் சூழ்ச்சியாலும் சூதாட்டங்களினாலும் பணக்காரன் பணக்காரனாகவும் ஏழை ஏழையாகவுமே இருப்பதற்கான சூட்சுமங்களை, தமிழன் தக்கவைத்தபடியே இருக்கிறான்.



மணி பதினொன்று நாற்பத்தைந்து. கண்களிலிருந்து ஒருபுறமாய் நீர் வழிகிறது. அசதியின் பொருட்டு இருக்கலாம். அவசரமாக அதைப் புறங்கையால் துடைத்தேன். ஜன்னல் வழி வானம் பிரகாசமாய் இருக்கிறது. எல்லா தெருவிளக்குகளும் எரிகின்றன. இதுவரை இதை நான் கவனிக்கத் தவறியதன் வலி என்னை ஆட்கொள்கிறது. மூன்று நாட்கள் முன்பு வரை தெருவிளக்குகளில்லை. சின்ன நதி போல வெளிச்சம் தெருவில் பாய்ந்தபடி இருக்கிறது. அப்பாவை எழுப்பி, சொல்ல வேண்டும் போலுள்ளது.

கடிகார முள் நகர்ந்தபடி உள்ளது. நாளை என்பது மற்றுமொரு நாளாக மட்டும் அமைந்து விடக்கூடாதென்று தோன்றுகிறது. பக்கத்து வீட்டுத் தொலைக்காட்சியில் திடீரென்று சப்தம் அதிகரிக்கப்பட்டு, 'ஹாப்பி நியூ ஹியர்' என்கிற கோஷம் கேட்கிறது. அப்பா சப்தத்தில் எழுந்து என்னைப் பார்த்துச் சிரித்து, "புது வருஷம் பிறந்துடுச்சி சங்கரி" என்கிறார்.

முற்றும்



காசியைவிட காஞ்சி ஒரு இஞ்ச் (inch) அதிகம் என்று வேடிக்கையாகக் குறிப்பிடுவார் கிருபானந்த வாரியார். (காசி - காஞ்சி, ஓர் எழுத்து ('ஞ்') இந்த ஓர் எழுத்தை நீக்கி விட்டால் காஞ்சி, காசியாகி விடுகிறது. அல்லது காசியைத் தன்னகத்தே அடக்கிக் கொண்ட சிறப்புடையது என்றும் சொல்லிவிடலாம்.

இவ்வளவுதானா காஞ்சியின் சிறப்பு! எந்த திசையிலிருந்து காஞ்சிக்குள் நுழைந்தாலும், சிவபெருமானையோ, திருமாலையோ சந்திக்காமல் ஊருக்குள் நுழைய முடியாது. காணும் திக்கெல்லாம் கண் கவர் கலைக்கோயில்கள். கடவுளும் மனிதனும் இரண்டறக் கலந்து நின்ற கிருதாயுகத்தில் - தேவதச்சனால் உருவாக்கப்பட்ட நகரம் என்று புராணங்கள் புகழ் பாடுவதிலிருந்து இந் நகரின் வரலாற்றுக்கு முந்தைய பழம் பெருமை புலப்படும். காஞ்சிபுரத்தைப் பற்றி சிவஞான முனிவர், 'காஞ்சிப் புராணமே' இயற்றும் அளவுக்கு, ஆதி நகரமாக விளங்கிய காஞ்சி மட்டும்தான், காலச்சக்கரத்தின் சுழற்சியில் சிக்கி வீழ்ந்து விடாமல் இன்றளவு குன்றாத புகழோடு விளங்குகிறது.


மெழுகு சிலை

தொண்டைமான் இளந்திரையன் என்ற முற்காலச் சோழ மன்னனால் ஆளப்பட்ட காஞ்சி, பின்னாளில் கரிகால் பெருவளத்தானால் விரிவுபடுத்தப்பட்டது. தத்துவ ஞானமும், ஞானிகளும் தோன்றி, பல்வேறு சமயங்களும், சமயச் சகிப்புத் தன்மையும் செழித்தோங்கிய காஞ்சி, பிறகு பல்லவர்களின் பொற்கால ஆட்சியில் அறுநூறு ஆண்டுகள் கலை, அரசியல் வாழ்வின் களஞ்சியமாக விளங்கியது. பின்னர் பிற்காலச் சோழர்களும் பெயர் சொல்லும் ஆட்சி செய்து பெருமை படுத்தினார்கள்.


காமாட்சி கோயில் யானைகள்

இதே புனித மண்ணில் ஸ்ரீ அதிசங்கரர் தாமே இருந்து அம்பாளை வழிபட்டு சர்வக்ஞ பீடமேறி ஞான ஆட்சி புரிந்தார். அவரின் அத்வைத பரம்பரையில், நாமெல்லாம் பார்க்க, நடமாடும் தெய்வமாய் விளங்கி நூறாண்டு வாழ்ந்து ஞானச்






செங்கோல் அரசு புரிந்தார்கள் ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி மகா சுவாமிகள். இத்தகைய மூதூரின் நகர எல்லைக்குள் இருக்கும் எல்லா கோவில்களுக்கும் இரண்டு நாள் யாத்திரை சென்று திரும்புவது இயலாத காரியம். என்றாலும் நமது வாசகர்களுக்காக நாம் மேற்கொண்ட சின்னஞ்சிறு யாத்திரை இது.

சின்ன காஞ்சிபுரம் என்று அழைக்கப்படும் விஷ்ணு காஞ்சியின் மணி மகுடமாக விளங்கும் வரதராஜ பெருமாள் ஆலயத்தின் மேற்கு கோபுர வாசல் வழியே பிரவேசிக்கிறோம். அத்திகிரி அருளாளப் பெருமான் என்று வைணவ சம்பிரதாயத்தில் மிக்க ஈடுபாடு கொண்டவர்கள் வணங்கி வழிபடும் திருத்தலம். ஸ்ரீ ராமானுஜர் துறவறம் மேற்கொண்டதும், இவரின் குரு திருகச்சிநம்பிகள் ஞான சேவை

• குமர கோட்டம்





• சங்கிலி மண்டபம்





கா(ஞ்)சி யாத்திரை!

புரிந்ததும் இதே அத்திகிரி பெருமானிடம் தானே.

உள்ளே நுழைந்ததும் அழகான நான்கு தூண்களில் கோபுரம் தாங்கி நிற்கும் சங்கிலி மண்டபம், நம்மை வரவேற்கிறது. இடப்பக்கம் சிற்ப எழில் நிறைந்து வழியும் நூறுகால் மண்டபம். அதில் கருங்கல் சங்கிலிகள் தோரணமாய்த் தொங்குவது எத்தனை அழகு! நூற்றுக் கால் மண்டபத்தின் வடக்குப் பகுதியில் திருக்குளம். அதில் எழில் மிகு இரண்டு நீராழி மண்டபங்கள். தென்திசை நீராழி மண்டபத்திற்கு கீழே நீருக்குள்ளும் ஒரு மண்டபம் உண்டு. அதில்தான் அத்தி மரத்தால் ஆன வரதர் சயன நிலையில் இருக்கிறார்.

திருக்குளத்தின் கிழக்கு திசையில் சக்கரத் தாழ்வார் சந்நிதி, தமிழகத்தில் வேறெங்கும் காண முடியாத மிகப் பெரிய சுதர்சனத் திருமேனியோடு காட்சி தந்து, திருமணத் தடையைப் போக்கும் பெருமான். அவரை வணங்கி, நின்ற திருக்கோலத்தில் காட்சி தரும் வரதராஜப் பெருமாளிடம் தஞ்சமடைகிறோம்.

தீபங்களின் ஒளியில் இந்த தேவராசப் பெருமானை தரிசிக்க, இரு கண்கள் எப்படிப் போதும்? அந்த அத்திகிரியின் வடகிழக்கு மூலையில் வைக்கப்பட்டிருக்கும் தங்கப்பல்லி, வெள்ளிப்பல்லி, சந்திர சூரிய வடிவங்களை வணங்கிவிட்டு காந்தி சாலை வழியாக காமாட்சி அன்னையைத் தரிசிக்க புறப்படுகிறோம். வழியிலேயே அஷ்டபுஜ பெருமாள் ஆலயத்தில் சொர்க்கவாசல் தரிசனம் முடித்துத் திரும்பினால், விண்ணை முட்டும் வரதர் தேர் கண்ணில் படுகிறது. ஸ்ரீஜயேந்திர சரசுவதி சுவாமிகளின் முயற்சியால் புதுப்பிக்கப்பட்டு புத்தாடை அணிந்து நிற்கும், இந்த திருத்தேர் திருவிழாவைக் காண எத்தனை லட்சம் பக்த கோடிகள் இங்கே திரளுவார்கள். வரதா! வரதா! என கோஷம் வானைப் பிளக்க - அவர்கள் வடம் பிடிக்கும் வைகாசி விசாகக் காட்சிகள் சிந்தையில் வந்து மோதுகின்றன.

அன்னை காமாட்சி முப்பத்து இரண்டு அறங்களைச் செய்து மன்னுயிர்களைக் காத்த திருத்தலத்திற்குள் நுழைகிறோம். கிழக்கு கோபுர வாசலில் கோவில் யானையும், நேபாள மன்னர் வழங்கிய யானைக்குட்டியும், வரும் பக்தர்களையெல்லாம் ஆசீர்வதித்து அழைக்கின்றன. கிழக்கு கோபுரத்தில் நம் கண்களில் பளிச்சென்று பட்ட ஹயக்கிரீவர், அகத்தியர் திருமேனிகளை வணங்கிவிட்டு உள்ளே நுழைகிறோம். காஞ்சிக்குள் காசி அடங்கியிருப்பதை மெய்பிக்கும் விதமாக காமாட்சியின் சன்னதியில் அன்னபூரணியும் காசி விசுவநாதரும் அருள்பாலித்து வருவதை என்னென்று வியப்பது?

அது மட்டுமா,, வேறெங்கும் காண முடியாதபடி பூர்ணதேவி, புஷ்கலாதேவி சமேதராக ஸ்ரீ அய்யப்பன் காட்சி தருகிறார்.

அகில பாரதத்திலும் விளங்கி வரும் ஐம்பத்து ஒரு சக்தி பீடங்களில், காமகோடி பீடமாக திகழும் அன்னை காமாட்சியின் ஆட்சி நகரின் நடுநாயகமாக விளங்கி வருவதால்தான், இங்கிருக்கும் எந்த சிவன் கோவில்களிலும் அம்மன் சன்னதி இல்லை. எல்லா கோவில்களில் இருக்கும் உற்சவமூர்த்திகளும், எல்லா பிரம்மோற்சவ காலங்களிலும் அம்மனை வலம் வந்து செல்வதிலிருந்தே, அன்னை சக்தி விளங்குகிறது நமக்கு!

அன்னையைத் தரிசிக்க கருவறைக்கு முன்பாக காத்திருக்கிறோம். அலங்காரம் முடிந்து திரை விலகுகிறது. ஆஹா! பத்மாசனத்தில் ஸ்வர்ணபாவாடையும் மோகனமாலையும் ஜொலி ஜொலிக்க, காட்சி தரும் அன்னையைக் காண முகமெல்லாம் கண்கள் வேண்டும்! பக்தர்களின் விருப்பங்களைத் தன் அருட்பார்வையினால் பூர்த்தி செய்து அருளுவதனால்தானே... காமாட்சி எனப் பெயர் பெற்று விளங்குகிறாள் இந்தக் காளி. காமங்களை, அதாவது விருப்

பங்களைப் பூர்த்தி செய்கிற கண்களை உடையவள் ஆயிற்றே! அன்னையின் அருட்பார்வை கிடைக்கப் பெற்ற பூரிப்பில் அங்கிருந்து புறப்படுகிறோம், ஏகாம்பரநாதர் திருத்தலம் நோக்கி.

வழியிலேயே காஞ்சி மடத்தின் கருணை நமக்கும் கிட்டுகிறது. மெய்த் தவத் துறவியாய் திகழ்ந்த மகா பெரியவரின் பிருந்தாவனத்தில், அவர்தம் மெழுகுச் சிலை, அவரை உயிராய் நம் கண்களுக்குக் காட்டுகிறது. எளிமையும் தெய்வீகமும் நிறைந்து வழியும் அவர் தம் மெழுக்குச் சிலையை கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டேயிருக்கலாம். அவர் பயன்படுத்திய மூக்குக் கண்ணாடி உள்ளிட்ட, பல பொருட்களும் அங்கே காட்சிக்கு வைக்கப் பட்டிருக்கின்றன. தற்போது பீடாதிபதியாக எழுந்தருளியிருக்கும் ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள், பால பெரியவர் ஜகத்குரு ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் ஆகிய இருவரிடமும் ஆசி பெற்று வெளி வருகிறோம்.

ஆச்சர்யம் சங்கரமடத்தையொட்டி மிக நெருக்கமாக நம் கண்களில் படுகிறது, கன்னத் ஜமாஅத் ஜு"ம் ஆ மசூதி. நாநூறு வருடம் பழைமையான ஆர்காடு நவாப் வம்சா வழியினரால் கட்டப்பட்ட இந்த இஸ்லாமிய வழிபாட்டுத்தலம் இந்து, முஸ்லிம் நல்லிணக்கத்தின் எடுத்துக்காட்டாய், வெள்ளை நிறத்தில் நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்கிறது.

மசூதியைக் கடந்து நடந்தால் விண்முட்ட பஞ்சபூதத் தலங்களுள் மண் (பிருத்திவி) தலமாக இருந்து திருவேகம்பர் அருள்பாலிக்கும் ஏகாம்பரநாதர் ஆலயம். கண்கள் மாவடியைத் தேடுகின்றன. இறைவனை அடையும் பொருட்டு தவம் மேற்கொண்ட அம்பிகைக்கு இறைவன் காட்சியருளிய பழைமையான மாமரமும், சந்நிதியும் ஆயிரம் கால் மண்டபத்தையொட்டி புலப்படுகின்றன. கூடு தட்டிக் கிடக்கும் இம்மாமரம் எத்தனை நூற்றாண்டு பழமையானதோ யாரறிவார்? திருமணங்கள் நடக்கும் இதே மாவடியை நாடித்தான் பிரிட்டிஷ் அரச குடும்பம் பிரார்த்தனை செய்ய வந்தது. நேரம் போனதே தெரியாமல் மாமர தரிசனம் முடித்து ஆயிரம் லிங்கங்களை தரிசித்தபடி ஆயிரம் கால் மண்டபத்திற்குள் நடக்கிறோம். அங்கே தலவிநாயகராக விகட சக்கர விநாயகர் வீற்றிருக்கிறார். அவரை வணங்கி, மணல்லிங்கமாக எழுந்தருளியிருக்கும் அய்யனைக் காண விரைகின்றன நம் கால்கள். சாந்து சார்த்திய பெருமானைப் பார்த்துப் பூரித்து புறப்படுகிறோம். எத்தனை அழகிய நடராச சபை!

அங்கிருந்து மேற்கு ராஜ வீதியில் நிமிர்ந்து நிற்கும் கோபுரத்தோடு குமரக் கோட்டம் முருகப் பெருமானை தரிசிக்க வந்து சேர்ந்தோம். ஏகாம்பரர், காமாட்சி கோவில்களின் நடுவே, வேறெங்கும் காண முடியாத சோமாஸ் கந்த அமைப்பில் கோவில் கொண்டிருக்கும் முருகப் பெருமான். ஓம் எனும் பிரணவத்தின் பொருள் அறியாத பிரம்மனைக் குட்டி, சிறை செய்த முருகனாயிற்றே! அது மட்டுமல்ல கச்சியப்ப சிவாச்சாரியாரைக் கொண்டு, கந்த புராணம் எழுத வைத்த பெருமான். கந்த புராணம் அரங்கேறிய மண்டபம் இங்கே இன்றுமிருக்கிறது! வேலும் சேவற்கொடியும் தாங்கி நின்றபடி அருள்மழை பொழியும் குமரனைத் தரிசித்துப் புத்தேரித் தெருவழியே கைலாய நாதனைத் தரிசிக்க செல்லும் வழியில் உப நிஷத்மடம். ஸ்ரீ பிரம்மேந்திரர் வாழ்ந்த மடம். சலவைக்கல்லால் ஆன ராமர், லட்சுமணன் சீதை உருவங்கள் நம் சிந்தை கவர்கின்றன.

கட்டடக் கலை, சிற்பக் கலை இரண்டின் சீரான வளர்ச்சி இங்கு மட்டுமே காண முடியும் என கட்டியம் கூறி நிற்கும் எத்தனையெத்தனை ஆலயங்கள்! அத்தனையும் காஞ்சியில் மட்டுமே காண முடியும். ○

ஒரு காலத்தில் - பல்லவத் தலைநகரம், பிறகு பட்டுக்குத் தலைநகரம், என்றும் பக்திக்குத் தலைநகரம் என்றும் பாராட்டுப்பெறும் காஞ்சியைத் தமிழக அரசியலுக்கும் தலைநகரம் என்று ஆக்கியவர், அந்த மண்ணின் மைந்தரான அறிஞர் அண்ணா. அவர் வாழ்ந்த வீடு பேரறிஞர் அண்ணா நினைவு இல்லமாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது. அங்கிருந்தே நகர்வலத்தைத் தொடங்கினோம். எல்லோருக்கும் இலவச அனுமதி என்ற அறிவிப்புப் பலகையோடு காட்சியளிக்கிறது இல்லம். இங்கு அண்ணா பயன்படுத்திய உடைகள், பொருட்கள், அவரது அரசியல் வாழ்வின் மறக்க முடியாத தருணங்களை நமக்கு நிழலாட வைக்கும் இருநூற்று இருபத்து ஒன்பது கறுப்பு வெள்ளை புகைப் படங்கள் உட்பட ஏராள நினைவுப் பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கின்றன. இந்த அரசியல் மேதையின் இறுதி ஊர்வலம், உலகிலேயே அதிக மக்கள் கலந்து கொண்ட ஒன்று என்ற சோகம் கலந்த பெருமையோடு கின்னஸில் இடம் பிடித்திருக்கிறது. அதை நினைவுபடுத்தும் அவரின் இறுதி ஊர்வலப் படங்களும் இங்கே உண்டு. நினைவு இல்லம் உள்ளபடியே அற்புதப் பராமரிப்பில் இருந்ததைக் கண் கூடாகக் கண்டோம்.


அங்கிருந்து நகர்ந்து காந்தி சாலைக்குள் நுழைகிறோம். நகரின் மிகப் பழமையான குளங்களில் ஒன்றான ரெங்கசாமிக் குளம் கண்ணில் படுகிறது. சுற்றிலும் தடுப்பு வேலிகள் இருந்தாலும், குளத்தில் தண்ணீர் இல்லை. காஞ்சிபுரத்திற்கே தண்ணீர்ப் பஞ்சமா? யோசித்தபடி நின்றிருந்த நம் கவனத்தைத் திசை திருப்பினார் இதே சாலையில் புத்தகக் கடை வைத்திருக்கும் ஏ.ஆர். ஜோதி.

"ஒவ்வொரு வருஷமும் மழை நீரால் இந்தக் குளம் நிரம்பி வழியும். இந்த முறை, மழைநீர் குளத்திற்குள் பாய்ந்து வரும் கால்வாயை அடைத்துவிட்டனர். கிட்டத்தட்ட காஞ்சி நகரில் உள்ள எல்லா குளங்களுக்கும் இதுதான் நிலை. மழைநீர் அறுவடை பற்றிப் பிரசாரம் செய்துவிட்டு இப்படிச் செய்யலாமா?" என்று வருத்தப்பட்டார். இன்னும் பல குளங்களும், தீர்த்தங்களும், மராமத்து பணிகள் செய்யப்பட்டு பல மாமாங்கம் ஆகிவிட்டன என்பதை அவற்றின் இன்றைய நிலையே நமக்கு கண்முன் எடுத்துக் காட்டின. வைகுண்ட



பெருமாள் கோவில்குளம் முழுவதுமாக தூர்ந்து போய் படியழகு சீர்கெட்டுக் கிடப்பதே இதற்குப் பரிதாபகரமான எடுத்துக்காட்டு.

காந்திசாலையிலிருந்து, காஞ்சிபுரம் ரயில் நிலையம் போகும் வழியில் ராஜாஜி மார்க்கெட். 1933ல் வெள்ளையர் ஆட்சியின்போது உருவாக்கப்பட்ட இந்த சந்தை அதன் பிறகு 1945ல் புதுப்பிக்கப்பட்டதோடு சரி. சந்தையின் சுற்றுப்புறத் தெருக்கள் திறந்த வெளிக் கழிப்



ணமயம்!

பிடமாக மாறிக்கிடக்கின்றன. "மழைக் காலத்திலோ சந்தையின் பிரதான வாயிலைப் பயன்படுத்தி வாகனங்களோ, வாடிக்கையாளர்களோ உள்ளே வர முடியாதபடி முழங்கால் அளவு சேறும் சகதியும் நிரம்பி வழியும். இந்த லட்சணத்தில் மீன், இறைச்சி சந்தையும் இங்கேயே இருப்பதால் மழை நீரோடு இறைச்சித் துண்டுகளும் சேர்ந்து கொண்டால் என்னாகும்? நிலைமையை நினைத்துப் பாருங்கள். "எங்களது பல கோரிக்கைகளில் ஒன்றான, இறைச்சி மார்க்கெட் தனியே தள்ளி அமைக்கப்பட வேண்டும் என்பதை ஏற்று இப்போதுதான் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இனி சைவப் பிரியர்கள் தைரியமாக சந்தைக்கு வரலாம்" என்கிறார் மார்கெட் சங்கத் தலைவர் மணி முதலியார்.

சந்தைக்கு அருகிலேயே உழவர் சந்தை தூய்மையின் மொத்த உருவமாக காட்சி தருகிறது. காலை ஒன்பது மணிக்கெல்லாம் இங்கே வியாபாரம் முடிந்து விடுகிறது. ஆனாலும் முன்போல் அதிக விவசாயிகள் காய்கறிகளோடு வருவதில்லை. காரணம், அதிகாலை நான்கு முப்பது மணி முதல், ஏழரை மணி வரை, சுற்றுப்புற கிராமங்களில் இருந்து விவசாயிகளையும், அவர்களின் காய்கறிகளையும் சுமந்து கொண்டு வந்த பதினோரு அரசுப் பேருந்து சேவைகளை, முற்றிலுமாக அரசு நிறுத்திவிட்டது. "உழவர் சந்தைகளை ஒழித்துக் கட்டுவதிலேயே குறியாக இருக்கும் அ.தி.மு.க. அரசு, காஞ்சிபுரம் உழவர் சந்தை வெற்றிகரமாக இயங்கி வருவதைக் கண்டு பொறுக்க முடியாமல்தான் பஸ்களை நிறுத்திவிட்டது. இதை மகளிர்ச் சந்தையாக மாற்றவும் முயற்சி நடக்கிறது" என்று பொருமுகிறார் காஞ்சிபுரம் உழவர் சந்தை விவசாயி ஒருவர்.

அரசு பொது மருத்துவமனைக்குள் நுழைகிறோம். வாயிலிலேயே தடுத்து நிறுத்துகிறார் மருத்துவமனை அலுவலர். அவரிடம் ஐந்து ரூபாய் கொடுத்து அனுமதிச்சீட்டைப் பெற்றுக் கொண்டு உள்ளே நுழைகிறோம். "இரண்டு மணி நேரத்துக்குத்தான் இந்த ஐந்து ரூபாய் சீட்டு செல்லும்னு சொல்லி வர்ற நேரத்தையும் அதிலேயே குறிச்சுக் கொடுத்துடுறாங்க. எங்களை மாதிரி ஏழைகளுக்கு இது கட்டுப்படியாகுமுங்களா" என்று நம்மைக் கண்டு முறையிடுகிறார் ஒரு பொது ஜனம்.



1898ல் கட்டப்பட்ட ராஜா சர் ராமசாமி முதலியார் பிரசவ ஆஸ்பத்திரி இன்றும் ஓடு வேயப்பட்ட கூரையாகவே இருக்கிறது. வளாகம் எங்கும், புதர்கள் மண்டிக் கிடப்பது ஒரு பக்கம் இருக்கட்டும். ஏற்கெனவே நோய்த் தொற்றுக்கு ஆளாகி காலரா வார்டில் பல நோயாளிகள்

சிகிச்சை பெற்றுவரும் நிலையில், அந்த வார்டின் அருகாமையில் மருத்துவமனையின் ஒட்டு மொத்த குப்பையும் கொட்டப்பட்டிருந்தது அதிர்ச்சியில் நம்மை உறைய வைத்துவிட்டது.

அங்கிருந்து காஞ்சிபுரம் ரயில் நிலையத்திற்கு வருகிறோம். கோவில் நகர் காஞ்சி என்பதை நினைவூட்டும் விதமாக, கடந்த ஆண்டு திறந்து வைக்கப்பட்ட கோபுர அமைப்புடன் கூடிய புதிய ரயில் நிலையம் கண்களைக் கவர்கிறது. கடந்த ஆண்டு ஜனவரி இருபத்து மூன்றாம் தேதி முதல்தான் காஞ்சி -சென்னை கடற்கரை அகல மின்சார ரயிலும் இயக்கி வைக்கப்பட்டது. ஆனால் இந்த ரயில் மூலம் காஞ்சிபுரம் வாசிகளுக்கோ, இங்கு வரும் சுற்றுலா பயணிகளுக்கோ ஒரு பயனும் இல்லை என்று குற்றம் சாட்டுகிறார், காஞ்சிபுரம் ரஜினி மன்றத் தலைவரான ரஜினி பாபு.



• ராஜாராம்



• சங்கரராமன்

"காலை 7.05 மணிக்கு காஞ்சிபுரத்தில் புறப்படும் மின்சார ரயில் செங்கல்பட்டு வழியாக சென்னை கடற்கரைக்கு 9.30 மணிக்குப் போய்ச் சேர்கிறது. இந்த ரயில் உடனடியாக திரும்பவும் காஞ்சிபுரம் புறப்படுவதில்லை. மீண்டும் மாலை 6 மணிக்கு காஞ்சிபுரம் புறப்படுகிறது. காஞ்சிபுரம் ரயில் பயணிகள் சங்கம் பலமுறை கோரிக்கை வைத்தும், கூடுதல் டிரிப்புகள் விட ரயில்வே ஏன் யோசிக்கிறது என்பதுதான் புதிராக உள்ளது. இத்தனைக்கும் காஞ்சிபுரத்திலிருந்து பல்லாயிரக்கணக்கானோர், சென்னை, செங்கல்பட்டு சென்று திரும்புகின்றனர். பஸ் முதலாளிகளின் பணப்பெட்டிக்குக் கட்டுப்படும் அரசியல்வாதிகள், ரயிலின் சக்கரங்களைக் கட்டிப் போட்டிருக்கிறார்களோ என்று சந்தேகிக்க வேண்டியிருக்கிறது" என்கிறார். செங்கல்பட்டு, அரக்கோணம் அகல இரயில் பாதை திட்டமும் நெடுநாட்களாக கிடப்பில் இருப்பதையும் சுட்டிக்காட்டுகிறார் ரஜினி பாபு.

இரயில் நிலையத்தை ஒட்டியிருக்கிறது தமிழக சுற்றுலாத் துறையின் தமிழ்நாடு ஹோட்டல். "ஆனால் இத்தனை பெரிய சுற்றுலா நகரில், சுற்றுலா தகவல் மையம் இல்லாதது, இந்த நகருக்கு வரும் சுற்றுலாப் பயணிகளையே அவமானப்படுத்துவது மாதிரி. மத்திய மாநில அரசுகள், காஞ்சியை மாபெரும் சுற்றுலா தலமாக ஏற்றுக் கொண்டாலும், சுற்றுலா வளர்ச்சிக்கென செலவிடப்படும் தொகைகள் எதுவும் காஞ்சிக்கு வந்து சேர்வதேயில்லை. யாத்ரி நிவாஸ் கட்டப்படும் என ஐந்து ஆண்டுகளுக்கு முன்பே அறிவிப்பு வந்தது. ஆனால் இன்றும் அது நிறைவேற்றப்படவில்லை" என்கிறார் வரதராஜ பெருமாள் ஆலய நிர்வாகத்தைச் சேர்ந்த சங்கரராமன்.

அண்ணா அரங்கம் வழியே புறப்பட்டு அருணா தியேட்டர் அருகில் வந்தபோது, சென்னை நகரக் கூவம், காஞ்சிபுரத்திற்கு வந்துவிட்டதோ என்று அஞ்சும் அளவுக்கு துர்நாற்றம் குடலைப் புரட்டியெடுத்தது. காமாட்சி அம்மனின் அபிஷேக நீர் கலப்பதால் - மஞ்சள் நீர் கால்வாய் என்று புனிதமான பெயரால் அழைக்கப்பட்டு வந்த கால்வாய்தான் இன்று பன்றிகள் மேயும் கால்வாயாக மாறிவிட்டது.

தோண்டத் தோண்ட பல பொதுப் பிரச்னைகள் முழுவதும் பரவிக்கிடப்பது உண்மை என்றாலும் நகர்வலத்தை முடிக்கும்முன் நம் கண்களை உறுத்தியவை மூன்று பாலங்கள். பாலாற்றின்மீது, பல கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டு, ஓராண்டுக்கு மேலாகியும் ஏன் திறந்து வைக்கப்படவில்லை என்பது உள்ளிட்ட பல்வேறு கேள்விகளுக்குப் பதில்களைத் தேடி மாவட்ட ஆட்சியர் ராஜாராமைச் சந்தித்தோம்.

"நெசவாளர் பகுதிகளில் அடிப்படை வசதிகள் முழுமையாகச் செய்து கொடுக்கப்பட வேண்டும் என்பதை உணர்ந்திருக்கிறோம். நகராட்சி ஒரு பக்கம் செயல்பட்டாலும் நாங்கள் 'நகர வளர்ச்சிக்கு குழு' என்று அமைத்து, பல திட்டங்களை அரசின் பரிசீலனைக்கு அவசர கால அடிப்படையில் அனுப்பியிருக்கிறோம்" என்றார்.

மத்திய அரசின், 'டெக்ஸ்டைல் சிட்டி இம்புருவ்மெண்ட், டெவலப்மெண்ட் ஸ்கீம்' என்ற திட்டத்தின் கீழ், ஐம்பது சதவீத நிதியை மத்திய அரசிடமிருந்தும் ஐம்பது சத

வீதத்தை மாநில அரசிடம் இருந்தும் பெற்று போதிய அடிப்படை வசதிகளுக்காக செல விட இருக்கிறோம். காஞ்சிபுரம் நகரில் கொசு ஒழிப்பு என்பது சவாலாக இருப்ப தற்குக் காரணம், தங்கள் வீடுகளின் பின்புறத் திலேயே பட்டு நூலுக்குச் சாயம் தோய்த்து விட்டு, அதை மஞ்சள் நீர் கால்வாயில் விட்டுவிடுகிறார்கள். இதுதான் கொசு உற் பத்தியின் மையமாக இருக்கிறது. இதற்கும் தீர்வு கிடைக்கும். ஒரு திட்டத்தைத் தயாரித்து அரசுக்கு அனுப்ப இருக்கிறோம்.

உழவர் சந்தைக்கு மீண்டும் காலை நேரப் பேருந்துகள் இயக்குவது குறித்து பரிசீலிப் போம். கட்டப்பட்டும் பாலங்கள் திறக்காத தற்குக் காரணம் நில ஆர்ஜிதம் செய்யப் படாமலேயே பணி கள் முடுக்கி விடப் பட்டதுதான். அதற் கான பணிகளைச் செய்து வரு


• ரஜினிபாபு


• ஜோதி

கிறோம். வரும் மார்ச் மாதம் பாலங்கள் திறக் கப் பட்டுவிடும். நகரிலுள்ள குளங்களுக்கான நீர் வழிகளை, பெரும்பாலும் அந்தப் பகுதி யில் உள்ள மக்களே அடைத்து விடுகிறார் கள். இதுபோன்ற பழைய குளங்களை அர சால் மட்டும் சரி செய்து விட முடியாது. பொதுமக்களும் சேவை நிறுவனங்களும் இது நமது சொத்து என்ற அடிப்படையில் முன் வர வேண்டும். அப்படித்தான் பல குளங் களைச் சீர் செய்து வருகிறோம். குளங்கள் தவிர மாவட்டத்தில் உள்ள 235 பாசன ஏரி களையும் உலக வங்கி நிதி உதவியுடன் சீர் செய்து வருகிறோம். பணிகள் முழுவீச்சில் முடுக்கிவிடப்பட்டு, ஏரிகளில் போடப் பட்டிருந்த ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுக் கரைகளைப் பலப்படுத்தும் பணி நடந்து வரு கிறது. ஒவ்வொரு ஏரியின் பட்டாதாரரையும் கொண்ட ஓர் அமைப்பை உருவாக்கி, அவர் களிடமே ஏரியின் நிர்வாகத்தை ஒப்படைக்கப் போகிறோம்." என்றார்.



ரெட்

அரை டஜன் பட முயற்சிகளை ஓரம் கட்டிய அஜித், தமது முழுக் கவனத்தையும் 'ரெட்' பக்கம் திசை திருப்பியது வீண் போகவில்லை. சமூகத்திற்கும், தமது ரசிகனுக்கும் ஏதேனும் சொல்ல வேண்டும் என்கிற அவரது துடிப்பு படத்தைத் தூக்கி நிறுத்தியிருக்கிறது.

தலையில் அரை அங்குல முடியும், நெற்றியில் பனீர் குங்குமக் கீற்றுமாய் 'ரெட்'டாகத் தோன்றும் அஜித், மதுரை நகரில் ஒரு ஏரியா ரவுடி.

ரவுடியென்றால் காசு வாங்கிக் கொண்டு கைகால் எடுக்கிற ரகமல்ல. பள்ளிக்கூட அட்மிஷனில் பணம் பார்க்கும் ஆசாமிகளைப் பள்ளிக் கூடத்திற்கே போய் மிரட்டி, அங்கே ஏழைப் பிள்ளைகளைச் சேர்த்துவிடும் மனித நேய ரவுடி. கோடிகளை வசூலித்துவிட்டு ஓடி ஒளிய நினைக்கும் சிட்பண்ட்காரனை, ஏமாந்த மக்களோடு போய் மடக்கிப் பிடித்து, வீட்டுச் சிறையிலேயே பணத்தை வசூல் செய்து தரும், ரவுடி.

இந்தப் புயல் மனிதனின் வாழ்க்கையில் தென்றல் மாதிரி நுழையும் ஒரு பெண்ணுக்கு இடமுண்டா? என்பதை விறுவிறுப்பான திரைக்கதை மூலம் சொல்லியிருக்கிறார், அறிமுக இயக்குனர் ராம் சத்யா!

அஜித்தின் நடிப்பில் ஒருபடி ஏற்றம்... உடம்பிலும், தொப்பையிலும் கூடவா இந்த ஏற்றத்தைக் காட்டுவது! கதாநாயகி கிருஷ்ணாவாக வடக்கிலிருந்து வந்திருக்கும் ப்ரியா கில் சோபிக்கிறார். நாயகன் நாயகியைக் காட்டிலும் ஒரு டஜன் துணைக் கதாபாத்திரங்களை ஏற்றிருக்கும் மணிவண்ணனில் ஆரம்பித்து மதன் பாப் வரை எல்லோரும் நடிப்பில் கச்சிதமாகப் பொருந்தியிருக்கிறார்கள்.

அதற்குக் காரணம், சுண்டல் நாராயணன், அட்வகேட் ரேவதி மாதிரியான சின்னச்சின்ன பாத்திரங்களை நேர்த்தியாய் நிறுவிய விதம். அவற்றைத் திரைக்கதையில் தேவைப்படும் அளவு மட்டும் பயன்படுத்தியிருப்பதில் தேர்ந்த கைப்பதம். எடிட்டர் ஸ்ரீகர் பிரசாத்தின் கச்சிதமான படத் தொகுப்பும்கூட இதற்கு இன்னொரு காரணம்.

படம் முழுவதும், மதுரையில் நகர்ந்த போதும், ஒரேயொரு போலீஸ்காரர் மட்டும் மதுரைத் தமிழ் பேசுவது நிறையவே நெருடல். மாயக்கா என்றொரு கமர்ஷியல் பாத்திரத்தின் திணிப்பு, படத்தோடு ஒட்டாததைப் போலவே, பாடல்களுக்கும் திரிசங்கு நிலை. 'ரெட்' வளர்ந்தது ஒரு மரத்தேரின் நிழலில், அதுதான் அவனது தாய் என்பது போன்ற சிறுகதைத்தனம் ரசிகனின் மனக்கேமராவில் பளிச்சென்று பதிந்து விடுவது உறுதி.

கீப் இட் அப் ராம்சத்யா!

- விஷுவல்தாசன்

● அபவ் ஆவரெஜ்

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 330/-; Overseas : Rs. 2000/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 165/-; Overseas : Rs. 1000/- (Air Mail)

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / Chief PMG-141 / 2001 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 37 * Registered as a Newspaper in Srilanka